# சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி

தாய்மொழிக் கொள்கைகள் பற்றிய
பேராசிரியர் எஸ். கோபிநாதனின்
தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் -
தமிழாசிரியர்கள் பார்வையில்.....




STTU

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்
Singapore Tamil Teachers' Union

# தாய்மொழிக் கொள்கைகள் பற்றிய
# பேராசிரியர் எஸ் கோபிநாதனின்
# தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்
## - *தமிழாசிரியர்கள் பார்வையில்...*

## சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி:
## *நேற்று, இன்று, நாளை*

## Tamil Language Education in Singapore:
## *Past, Present and Future*

## Professor S Gopinathan's selected research articles on Mother Tongue Language Policies
## – *Perspectives of Tamil Language Teachers*

STTU

**சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்**
**Singapore Tamil Teachers' Union**

**An educational project by:**

Singapore Tamil Teachers' Union

**Copyright ©2016**

All rights reserved. This publication or any part of this publication shall not be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without prior written permission of the copyright owner.

All information contained in this publication is correct at the time of printing.

For further queries or permission to use material from the book please contact us:
sttu.gensec@gmail.com

ISBN: 978-981-11-1371- 0

# Acknowledgements

**PAPER PRESENTATION BY TAMIL LANGUAGE TEACHERS OF PRIMARY, SECONDARY & JUNIOR COLLEGE:**

Mrs Franscisca Subash Lazar, School Staff Developer, Innova Primary School

Mrs Yogavathi Gopalakrishnan, Greenridge Primary School

Dr Vijayarani Govindasamy, School Staff Developer, Queenstown Secondary School

Mr G Murugan, Subject Head, Bendemeer Secondary School

Mr Veeramuthu Ganesan, Lead Teacher, Anderson Junior College

Mrs Shamini Chandrasegar, Meridian Junior College

**PARTICIPANTS OF FOCUSED GROUP DISCUSSION (IN 2015):**

**Primary (Teachers & NIE Trainees)**

Mdm Santha Suppiah, Subject Head, St Anthony's Primary School; Mdm Tauled Tunisha, Subject Head, CHIJ (Kellock); Mdm Thanaselvi Krishnan, CHIJ (Kellock); Mr Abdul Rahim s/o A P M Adam, Opera Estate Primary School; Mrs Vijayalakshmi Devanathan, Senior Teacher, CHIJ Our Lady Queen of Peace; Ms Buveneswari d/o Subramaniam, NIE Trainee; Ms Ellene Prashanti d/o T Yogarajah, NIE Trainee; Ms Renuka d/o Thiyagarajan, NIE Trainee; Ms Aishwarya Durga d/o Nalamthambi, NIE Trainee

**Secondary (Teachers & NIE Trainees)**

Mrs Sagunthala Jegathesan, Senior Teacher, Chong Boon Secondary School; Mr Balasubramaniam, Subject Head, Anglo-Chinese School (Barker Road); Ms Meenambal Paramasivam, Serangoon Secondary School; Mr Nelaothaman Suppayan, Clementi Woods Secondary School; Mr Saravana Perumal, Yuosf Ishak Secondary School; Mr Seetharaman, Ahmad Ibrahim Secondary School; Mr Mohanadass s/o Jaganathan, NIE Trainee; Ms Vemalathevey Manikiam, NIE Trainee

**Junior College and Centralised Institute (Teachers)**

Mr S Jegathesan, Subject Head, Jurong Junior College; Mr S Nalluraj, Subject Head, Tampines Junior College; Mr Dassiah Victor John, Senior Teacher, National Junior College

# Acknowledgements (Cont'd)

**ADVISERS:**

Mr Arun Mahizhnan, Adjunct Professor, Nanyang Technological University
& Special Research Adviser, Institute of Policy Studies, National University of Singapore

Mr S Samikannu, President,
Singapore Tamil Teachers' Union

**GUIDED AND EDITED BY:**

Dr Seetha Lakshmi, Associate Professor, Asian Languages & Cultures,
National Institute of Education, Singapore

Mr Subramaniam Nadaison, Master Teacher (Tamil Language), Standards and Research Branch, Academy of Singapore Teachers, Ministry of Education, Singapore

**WORKING COMMITTEE:**

Mr S Nalluraj, General Secretary,
Singapore Tamil Teachers' Union

Dr Seetha Lakshmi, Associate Professor, Asian Languages & Cultures,
National Institute of Education, Singapore

Mr Subramaniam Nadaison, Master Teacher (Tamil Language), Standards and Research Branch, Academy of Singapore Teachers, Ministry of Education, Singapore

# அணிந்துரை

சிங்கப்பூரின் பல்லினப் பண்பாட்டுக் கொள்கைகளும் இருமொழியம் பன்மொழியம் ஆகியவை குறித்த கல்விக் கொள்கைகளும் அதனதன் சொந்த வெற்றிக் கதைகளைக் கொண்டுள்ளன. தமிழாசிரியர்கள் "சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி: நேற்று, இன்று, நாளை" என்னும் தலைப்பிலான நூலை வெளியிடுவது குறித்து நான் மகிழ்கிறேன். தாய்மொழிக் கல்விக் கொள்கைகள் பற்றி நான் எழுதிய சில ஆய்வுக்கட்டுரைகளைப் பற்றிய தமிழாசிரியர்களின் கருத்துகளை விளக்கும் கட்டுரைத் தொகுப்பே இந்நூல். இந்த முயற்சியில் ஈடுபட்ட ஆசிரியர்களின் ஆர்வமும் முனைப்பும் பாராட்டுக்குரியவை.

தாய்மொழி என்பது பண்பாட்டு, மொழியியல், இன அடையாளங்களை மேம்படுத்தும் ஒரு வாயிலாக அமைகிறது. இது அனைத்துச் சமூகங்களும் அவற்றின் பண்பாட்டு மூலதனத்தையும் மொழியியல் மூலதனத்தையும் மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை அளிக்கிறது. தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உட்பட்ட இவ்வுலகில், ஒரு பிள்ளையை இருமொழிகளைப் பயன்படுத்தி வளர்த்தெடுப்பது அப்பிள்ளை திறம்-பெற்ற, ஈடுபாடுமிக்க குடிமகனாகவும் தனது குடும்ப அளவிலும் சமூக அளவிலும் தனிமனிதனாகவும் உருவாக வழிவகுக்கிறது. ஒரு பிள்ளை பெற்றுள்ள 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் அதன் சிந்தனை மேம்பாட்டுக்குத் தேவையான தனித்துவமிக்க சூழலைத் தரும்; புதிய தொழில்நுட்ப வளங்கள் அதன் உலகத்தை விரிவாக்கும்.

தமிழ்மொழியைப் பயிலும் சிங்கப்பூர் மாணவர்கள், குடும்பத்தில் தமிழ்மொழிப் பயன்பாட்டை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் தமிழில் மட்டும் பேசுபவராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உலகமயமாக்கப்பட்ட சிங்கப்பூர்த் தமிழ்க் குடிமக்களாக விளங்குவதன் மூலம், தமிழாசிரியர்கள் மாணவர்களுக்குச் சிறந்த முன்மாதிரிகளாக விளங்கி, அவர்களை ஊக்கப்படுத்த முயலலாம். அவ்வாறு செய்தால் அவர்கள் தங்கள் மாணவர்களிடத்தில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இத்தகைய புத்தாக்கமிக்க, சமயத்திற்கேற்ற கல்வி முயற்சியிலும் நூல் வெளியீட்டிலும் நான் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இதன் பயனால் மேலும் பல மறுஆய்வுகளைச் செய்யவும் தமிழ்க் கல்வியை மேம்படுத்தவும் முடியும். சிங்கப்பூர்த் தமிழாசிரியர்கள் சங்கத்துக்கும் கலந்தாய்வரங்கப் பணிக்குழுவிற்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

**சரவணன் கோபிநாதன்**
சார்புநிலைப் பேராசிரியர்
லீ குவான் இயூ பொதுக்கொள்கைப் பள்ளி
சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் &
கல்வியியல் இயக்குநர், தி ஹெட் ஃபவுண்டேஷன், சிங்கப்பூர்

# ஓர் அடிக்குறிப்பு

பேராசிரியர் எஸ். கோபிநாதன் அவர்களின் ஆங்கிலக் கட்டுரைகள் தமிழில் பெயர்க்கப்பட வேண்டுமென்பதில் நான் ஆர்வம் காட்டியதற்கும் அக்கட்டுரைகளைப் பற்றிய விவாதங்களை மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறியதற்கும் அடிப்படைக் காரணம் அன்னாருக்குப் புகழாரம் சூட்டவேண்டும் என்பதற்காகவன்று. புகழாரம் அவருக்குப் பொருத்தமானது என்றாலும், முதல் நோக்கம் அதுவன்று. அவரும் அவர் போன்ற பேரறிஞர்களும் சிங்கப்பூர்த் தமிழ் உலகத்திற்கு வரவழைக்கப்-படவேண்டும் என்பதற்காகவும் அவர்தம் கருத்துகளையும் கருதுகோள்களையும் தீவிர வாசிப்புக்கும் விவாதங்களுக்கும் உட்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவும்தான். அந்த நெடுநாளைய விருப்பம் இப்போது நிறைவேறியிருப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. அதனை நிறைவேற்றித் தந்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி!

கல்விக் கொள்கைகள் காலந்தோறும் மாறிக்கொண்டே வருவன. காலத்திற்-கேற்பவும் மாற்றத்திற்கேற்பவும் தமிழ்க் கல்வியாளர்கள் தம்மை மேம்படுத்திக்-கொள்வது கட்டாயமாகிவிட்டது. பழையன கழியும்போது எவற்றைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கும் புதியன புகும்போது எவற்றை ஒதுக்கி வைக்கவேண்டும் என்பதற்கும் விவேகம் தேவைப்படுகிறது. கல்விக் கொள்கைகள் ஏட்டுச் சுரைக்காயாய் இருந்துவிடாமல் கறியாக மாற்றுவதற்கு அனுபவம் தேவைப்படுகிறது. எண்ணிய கருமம் எண்ணியவாறே நடைபெறச் செயலாற்றல் தேவைப்படுகிறது. எல்லாவற்றுக்கும் அடிப்படையாக ஆழ்ந்த அறிவு தேவைப்படுகிறது. இவையனைத்தும் தமிழ்க் கல்வியுலகில் தழைத்தோங்கத் தமிழாசிரியர்கள் பெரிதும் பாடுபடுவார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. நூற்றுக்கணக்கான தமிழாசிரியர்களோடு தமிழ்ப் பணியில் ஈடுபட்ட அனுபவத்தில் ஏற்பட்ட நம்பிக்கை இது. வீண் போகாது!

அன்புடன்,

**அருண் மகிழ்நன்**
சார்புநிலைப் பேராசிரியர்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் &
சிறப்பு ஆய்வு மதியுரைஞர்
கொள்கை ஆய்வுக் கழகம்
சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம்

# முன்னுரை

பேராசிரியர் எஸ் கோபிநாதன் அவர்கள் கல்வி உலகில் தலைசிறந்த அறிஞர். அவர் உலக அளவில் பலராலும் மதிக்கப்படுபவர். அவருடைய நூல் தமிழில் வெளிவந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அந்த நூலிலுள்ள அவருடைய கருத்துகளைத் தமிழாசிரியர்களிடம் கொண்டுசெல்லும் இம்முயற்சி பாராட்டுக்குரியது. பேராசிரியர் கோபிநாதன் அவர்கள், கல்விக் கழகத்தில் பணியாற்றியபோதே நான் அவரை நன்கறிவேன். முன்னாள் கல்விக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கா. இராமையா அவர்கள் தேசியக் கல்விக்கழகத்தில் தமிழில் பட்டக்கல்வி தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோதும் சிம் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பட்டக்கல்வியைத் தொடங்குவதற்குச் சங்கம் முயற்சிகள் மேற்கொண்டபோதும் நான் பேராசிரியர் கோபிநாதன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன்.

இன்றைய தமிழாசிரியர்கள் தமிழில் மட்டுமல்லாமல் ஆங்கிலத்தில் நடைபெறும் பல்வேறு பயிற்சி வகுப்புகளிலும் கலந்துகொண்டு, தங்களைத் தகுதிப்படுத்திக்-கொண்டு வருகிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவர்கள் கற்ற உத்திகளையும் அணுகுமுறைகளையும் தமிழுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்று சிந்திக்கிறார்கள்; பொருத்தமானவற்றைத் தமிழ்மொழி கற்பித்தலுக்கு ஏற்ப மாற்றியமைத்துத் தங்கள் மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்து வருகிறார்கள்.

சிறந்த கல்விக் கொள்கைகளால் மட்டும் எந்தப் பயனும் விளைந்து-விடப்போவதில்லை. ஆசிரியர்கள் அவற்றை ஆழமாகப் புரிந்துகொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில்தான் அவற்றின் வெற்றி அடங்கியுள்ளது. கல்விக் கொள்கை-களும் கற்றல் கற்பித்தல் முறைகளும் காலந்தோறும் மாறிக்கொண்டு வருவதால், தமிழாசிரியர்கள் அவற்றைத் தொடர்ந்து கற்றறிந்து வளரவேண்டும். மேலும் பேராசிரியர் கோபிநாதன் அவர்களின் கோட்பாடுகளும் கருத்துகளும் தங்கள் கற்பித்தலுக்கு எவ்வாறு வலுவூட்டும் என்று தமிழாசிரியர்கள் எண்ணிப் பார்ப்பார்கள் என நம்புகிறேன்.

அன்புடன்,

**சி. சாமிக்கண்ணு**
தலைவர்
சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

## நூல் உருவாக்கம் : பின்னணியும் அணுகுமுறையும்

பேராசிரியர் கோபிநாதனின் ‘சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும்’ என்னும் தலைப்பிலான நூல் ஏப்ரல் திங்கள் 2014இல் வெளியீடு கண்டது. அதனைத் தொடர்ந்து, ஆய்வாளரும் கல்வியாளருமான திரு. அருண் மகிழ்நன் அவர்கள் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. சி. சாமிக்கண்ணுவிடம் அந்நூலின் உள்ளடக்கம் பற்றிய கருத்தாடல் தமிழாசிரியர்களுக்கிடையே நடைபெறுவது சிறப்பு என்று யோசனை வழங்கினார். அதற்கான களத்தைச் சங்கம் அமைத்துக் கொடுத்தால் தமிழாசிரியர்கள் தாய்மொழிக் கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வைப் பெறுவதோடு சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வியின் நிலை குறித்த ஆழமான விவாதங்களிலும் ஈடுபட முடியும் என்று திரு அருண் கருதினார். திரு. சாமிக்கண்ணு அதனைச் செயல்படுத்த முன்வந்ததுடன் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ்மொழிக் கல்விக்குப் பொறுப்பு வகிக்கும் கல்வி அமைச்சு, ஆசிரியர் பயிற்சி வழங்கும் தேசியக் கல்விக் கழகம், ஆசிரியர்களுக்குப் பணிமேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தமிழ்த்துறைக் கல்வியாளர்களுடன் முதற்கூட்டம் 18 ஜூன் 2014அன்று நடைபெற்றது.

கூட்டத்தில் நூலின் உள்ளடக்கத்தையொட்டி, ஏற்றதொரு நிகழ்வினை ஏற்பாடு செய்து நடத்த அனைவரும் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். அதைத் தொடர்ந்து பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகத்தைச் சார்ந்த முதன்மை ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் நடேசன், தேசியக் கல்விக் கழக இணைப் பேராசிரியர் சீதா லட்சுமி, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சுப. நல்லுராஜ் ஆகிய மூவரும் பணிக்குழு உறுப்பினர்களாகச் செயல்படத் தொடங்கினர்.

தமிழாசிரியர்களுக்காகக் கலந்தாய்வரங்கம் ஒன்றை நடத்துவது என்றும் அதில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, புகுமுகவகுப்புப் பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் பங்களிப்பு இருக்கவேண்டும் என்றும் பணிக்குழு தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து, நூலிலுள்ள இயல் 5, இயல் 6, இயல் 7 ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அக்கட்டுரைகளில் இருமொழியம், கல்விக்கொள்கை, மொழிக்கொள்கை, தமிழ் மொழிக்கல்வி, தமிழ்ச் சமூகம் பற்றிய கருத்துகள் இடம்பெற்றிருந்தமையால் அவற்றை மையமாக வைத்துக் கலந்தாய்வரங்கத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு ஆரம்பம் முதலே பொறுப்பாளராகச் செயல்பட்டுவந்த சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள ஆசிரியர்கள் சிலரையும் முன்பயிற்சி ஆசிரியர்களையும் குவிநோக்குக்குழுக் கலந்துரையாடலுக்கு அழைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

பேராசிரியர் கோபிநாதனின் நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அக்கட்டுரைகள் குறித்துத் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, புகுமுகவகுப்பு என ஒவ்வொரு பிரிவு ஆசிரியர்களும் ‘சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி - நேற்று, இன்று, நாளை’ என்னும்

கண்ணோட்டத்தில் ஆராய்ந்து கட்டுரை ஒன்றைப் படைப்பது என முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற இரண்டு தமிழாசிரியர்களைப் பணிக்குழு அடையாளம் கண்டு அவர்களது ஒப்புதலைப் பெற்றது. பின்னர் அவர்களது பள்ளி முதல்வர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. பள்ளி முதல்வரின் அனுமதி கிடைத்ததும், படைப்பாளர்கள் தங்களுக்கான கட்டுரையைப் படித்துத் தம் கருத்துகளைத் தொகுத்து எழுதும் வகையில் அவர்களுக்கு வழிகாட்டுகுறிப்புகள் தரப்பட்டன. அவர்களது கருத்துகளை அவ்வப்பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள், முன்பயிற்சி ஆசிரியர்கள் ஆகிய சிலரிடம் பகிர்ந்திடவும் அவர்களது கருத்துகளைக் கேட்கவும் குவிநோக்குக்குழுக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, புகுமுகவகுப்புத் தமிழாசிரியர்களுக்கான குவிநோக்குக்குழுக் கலந்துரையாடல்கள் முறையே 15 ஏப்ரல் 2015, 16 மே 2015, 6 ஆகஸ்ட் 2015 ஆகிய தேதிகளில் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கப் பணிமனையில் நடைபெற்றன. ஒவ்வொரு பிரிவுக்குமான கலந்துரையாடலின் தொடக்கத்தில், படைப்பாளர்கள் தங்களது கருத்துகளை முன்வைத்தனர். அதனைத் தொடர்ந்து வினாக்கள், விளக்கங்கள், புதிய சிந்தனைகள் எனக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பதன் அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. பங்கேற்றோர் ஒப்புதலுடன் கலந்துரையாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுப் படைப்பாளர்களிடம் தரப்பட்டது. படைப்பாளர்கள் ஒலிப்பதிவின் கருத்துகளையும் இணைத்துத் தம் படைப்புகளைத் தயாரிக்க முனைந்தனர். அவர்களுக்கு வழிகாட்டும் வகையில் வழிநடத்துநர்களாகப் பணிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

முடிவில் அவர்களது படைப்புகள் தொகுப்பட்டும் செப்பமிடப்பட்டும் இப்போது நூல் வடிவில் தயாராகியுள்ளது. மதியுரைஞர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், பணிக்குழு உறுப்பினர்கள், குவிநோக்குக்குழுக் கலந்துரையாடல் உறுப்பினர்கள், படைப்பாளர்கள் என அனைவரும் கலந்தாய்வரங்கமெனும் இலக்கை நோக்கிச் செயல்பட்டனர். அதன் விளைவுதான் இன்றைய கலந்தாராய்வு நிகழ்ச்சியும் இந்த தொகுப்பு நூலும். இந்தப் பயணத்தில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் பணிக்குழு உறுப்பினர்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

அன்புடன்,

பணிக்குழு உறுப்பினர்கள்

## உள்ளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கல்வியில் மொழிக்கொள்கை – சிங்கப்பூர்க் கண்ணோட்டம்: தாய்மொழிப் பாடமாகத் தமிழ்மொழி | 1 |
| 2. | சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதும் பயன்படுவதும்: இருமொழிப் பயன்பாட்டில் தேய்வு – ஒரு மீள்பார்வை | 41 |
| 3. | சிங்கப்பூரில் இருமொழியமும் இருமொழிக் கல்வியும் | 71 |

# கல்வியில் மொழிக்கொள்கை - சிங்கப்பூர்க் கண்ணோட்டம்: தாய்மொழிப் பாடமாகத் தமிழ்மொழி

**திருமதி யோகவதி கோபாலகிருஷ்ணன்**
கிரீன்ரிட்ஜ் தொடக்கப்பள்ளி

**திருமதி ஃபிரான்சிஸ்கா சுபாஷ் லாசர்**
பள்ளித் திறன் மேம்பாட்டாளர்,
இன்னோவா தொடக்கப்பள்ளி

---

**கட்டுரைச் சுருக்கம்**

சிங்கப்பூரில், இராஃபிள்ஸ் வந்த காலம் முதல், கல்வி தொடர்பான விவாதங்களிலும் முடிவுகளிலும் மொழிக்கொள்கை முக்கிய இடம் பெற்றுவருகிறது. மொழியையும் பண்பாட்டையும் கற்றறிவது பயனுள்ளதாகச் சிங்கப்பூரில் கருதப்பட்டுள்ளதைக் கோபிநாதனின் கட்டுரைவழி (2014) அறியலாம். சிங்கப்பூரில், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இருமொழிக்கொள்கையின் முக்கியத்துவம் உணரப்பட்டது. 1920-க்குப்பின், இருமொழிக்கொள்கைவழி மொழியையும் பண்பாட்டையும் கற்பது கல்வி வளர்ச்சியில் பயனுடையதாகக் கருதப்பட்டதையும் உணரப்பட்டதையும் கோபிநாதனின் கட்டுரை தெளிவுறுத்துகிறது. இங்குக் கல்வித்துறையில் தாய்மொழிகள் பெறும் இடம் குறித்தும், அவற்றின் பங்கு பற்றியும் நூலாசிரியர் எடுத்துரைக்கிறார். தாய்மொழிகளைப் பற்றிப் பேசும்போது அவற்றுள் ஒன்றான தமிழ்மொழிக்கல்வி கடந்து வந்த காலம், தற்போதைய அதன் நிலை, அதன் எதிர்கால இலக்குகள் குறித்துத் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்களின் சிந்தனைகள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

தாய்மொழிகள் பெறும் இடம் குறித்துப் பேசும்போது அவற்றுள் ஒன்றான தமிழ் பற்றியும் கல்வித்துறையில் அதன் பங்கும் வளர்ச்சியும் நமக்குத் தெரிகின்றன. பன்மொழிச் சூழலைக்கொண்ட நாட்டில் மொழிக்கொள்கை வடிவமைப்பில் ஏற்பட்ட தடைகளும் வாய்ப்புகளும், பல்லினச் சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வடிவமைக்கப்பட்ட மொழிக்கொள்கைகளும் கருத்தாழமிக்க காரணங்களும் கல்வியாளரும் நூலாசிரியருமான கோபிநாதனால் (2014) எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், மொழிக்கொள்கையின் பொதுவான நோக்கங்களை அடைவதில் உள்ள பிரச்சினைகளும் புதிய வாய்ப்புகளும் பற்றி அக்கட்டுரையில்

விளக்கப்பட்டுள்ளன. அவர் 1979இல் எழுதிய ஆய்வுக்கட்டுரைக்குப் பின்னர், கல்வித்துறையில் பல புதிய முயற்சிகள் எவ்விதமான தொய்வுமின்றித் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில், மொழிக்கல்வி தொடர்பான தற்காலப் பார்வைகள், வெற்றிகண்ட இருமொழிக் கல்வியின் கட்டமைப்புகள் ஆகியன குறித்த ஆய்வு ரீதியான கண்ணோட்டமும் எதிர்காலப் பரிந்துரைகளும், பரிந்துரைகளுக்கான காரணமும் விளக்கமும் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை**

சிங்கப்பூர்க் கல்வித்துறையில் மொழிக்கொள்கை தனக்கெனத் தனியிடம் பெற்றுள்ளது, சிங்கப்பூரின் பொருளியலில் அது பெறும் இடமும், பன்மொழிச் சமூகப் பின்னணியும், அவற்றுக்கிடையே இடம்பெறவேண்டிய தொடர்பின் அவசியமும் முக்கியக் காரணங்களாக அமைகின்றன. கோபிநாதன் தம் கட்டுரையில் (2014) கல்வியில் இன்றியமையா இடம்பெறும் மொழிக்கொள்கை குறித்து வரலாற்று அடிப்படையிலான காரணங்களை விளக்குகிறார். அவரது ஆய்வுக்கட்டுரை, இக்கட்டுரையைப் படைக்கும் கட்டுரையாளர்கள் மொழிக்-கொள்கையை மீள்நோக்குவதற்கும் தமிழாசிரியர்கள் விவாதிப்பதற்கும் வாய்ப்பளித்துள்ளது. அக்காலக் கல்விக்கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் என்ன? இக்காலத்திற்கு அம்முறை எவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது, அவற்றின் பொருத்தப்பாடு என்ன என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகள் இங்குக் கண்டறியப்படும். மேலும், எதிர்காலத்தில் எத்தகைய மொழிக்கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான பரிந்துரைகளும் இக்கட்டுரைவழி முன்வைக்கப்படும்.

மொழி என்பது கல்வித்துறையில் ஒரு பாடமாகவும் (Subject) மற்றப் பாடங்களைக் கற்பிக்கும் ஓர் ஊடகமாகவும் (Medium of Instruction) திகழ்கிறது. அரசியல், இன அடையாளம், பன்மொழியினரிடையே ஆரோக்கிய உறவு, தனிமனிதனின் அறிவு முன்னேற்றம், பொருளியல் வளர்ச்சி போன்றவற்றை மொழிக்கல்வி தன்னுள் கொண்டுள்ளது. “கடுமையான மொழியியல் கதம்பத்தன்மைக்குச் சிங்கப்பூரின் இனமரபுடைமை காரணமாகிறது. மொழியியல் கதம்பத்தன்மை என்று கூறும்போது, மொழி வேற்றுமையை நோக்கும்போது அல்லது வரையறுக்கும்போது, மொழி எதைக் குறிக்கிறது என்பதைக் கவனத்தில்

கொள்ளவேண்டியிருக்கிறது” (கோபிநாதன், 2014, ப. 91). இங்குச் சீன மொழியினரைவிட இந்திய இனத்தவர் அதிக அளவில் மொழியியல் பிரிவுகளைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கிடையே மலையாளம், ஹிந்தி, பஞ்சாபி எனப் பல மொழிகள் உள்ளன. எழுத்துவடிவம் எனும்போது மற்ற இந்திய மொழிகளோடு தமிழ்மொழியின் எழுத்துவடிவத்தை ஒப்பிடும்போது வேறுபாடுகள் உள்ளன. எனவே, இத்தகைய மொழிகளையும் மொழிக்கொள்கை என வரும்போது கவனத்திற்கொள்ள வேண்டும் (கோபிநாதன், 2014, ப. 92). இதனால் சிங்கப்பூர்க் கல்வித்துறையில் மொழி வளர்ச்சிக்கு எப்போதும் இன்றியமையாத ஓர் இடமுண்டு. தவிரவும் பலவகை மலர்களைக் கொண்டு கட்டப்பட்ட கதம்பத்தில் இது இன்ன மலர், இன்ன இலை என்று மிகத் தெளிவாக பிரித்துப் பார்ப்பது சற்றுக் கடினம் என்பதுபோல இங்குச் சிங்கப்பூரிலும் மொழியளவில் கடுமையான கதம்பத்தன்மை நிலவுகிறது, இது குறித்துக் கோபிநாதன் கல்வியாளர்களின் கருத்துகளை மேற்கோள் காட்டுகிறார். குவோ (1976), செய்த ஆய்வின்படி சிங்கப்பூரில் பயன்பாட்டு நிலையில் பெரும்பான்மை மொழிகளாக ஆங்கிலம், மலாய், தமிழ், மாண்டரின், ஹாக்கியன் ஆகிய ஐந்தையும், சிறுபான்மை மொழிகளாகத் தியோச்சியூ, காண்டனிஸ், ஹய்னானிஸ் ஆகிய மூன்றையும் வரையறுக்கிறார். மற்றொரு கல்வியாளரான டோ ச்சின் சை (டோ, 1979 cf. கோபிநாதன், 1980, ப. 176) மொழிகள் பற்றிக் கூறும்போது வீடுகளில் பேசப்படும் முக்கிய மொழிகளாகச் சீனக் கிளைமொழி, மாண்டரின், ஆங்கிலம், மலாய், தமிழ், வேறு இரண்டு மொழிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

கல்வித்துறையில் சிங்கப்பூரருக்கு ஏற்ப மொழிக்கொள்கைளை வகுக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கட்டாயமாகிறது. அந்த வகையில் சிங்கப்பூர் அரசாங்கம் ஆங்கில மொழியையும் தாய்மொழிகளையும் கொண்டு இருமொழிக்கொள்கையை வகுத்துள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், வணிகத்தொடர்பு, பொருளியல், உலகத்தொடர்பு போன்றவற்றுக்கு உதவுவது ஆங்கிலம். இக்காரணங்களால் அது ஒரு முதல்மொழிப் பாடமாக அமைந்துள்ளது. அதே நேரத்தில், நான்கின மக்கள் வாழும் நம் நாட்டில் அவரவர் பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள், அறநெறிப் பண்புகள், வரலாற்று வேர்கள் போன்றவற்றை அறியத் தாய்மொழிக்கல்விப் பாடம் உதவுகிறது. இத்தகைய தொலைநோக்குச் சிந்தனையால் சிங்கப்பூர் அடைந்த முன்னேற்றங்கள் பல. இந்தத் தொலைநோக்குச் சிந்தனையை வகுத்த சிங்கப்பூரின் முன்னோடித்

தலைவர்கள் திரு லீ குவான் இயூ, திரு இராஜரத்தினம் போன்றோரின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன.

## 1. மொழிக்கொள்கை வடிவமைப்பு: வாய்ப்புகளும் தடைகளும்

மொழிக்கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதன் விளைவால், அரசியல் மற்றும் இனச் சமத்துவம், சமூக இடப்பெயர்வு, இன அடையாளம், இனங்களுக்கு இடையிலான உறவு, தனிநபரின் திறமை போன்ற சில பயன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மொழிக்கொள்கையின் வடிவமைப்பு அதிக அக்கறைக்கும் சோதனைக்கும் உட்பட்டிருந்தபோதிலும், இருமொழியத்தின் தேவை என்பதில் ஒப்புதல் கண்ட போதிலும், இலக்குகளை அடைவதற்கான உத்திகளைப் பொறுத்தவரை ஒப்புதல் கிடைக்கவில்லை (கோபிநாதன், 2014, ப. 91).

இருமொழியத்தின் இலக்குகளை அடைவதற்கான உத்திகளைப் பொறுத்தவரை ஒப்புதல் கிடைக்காமை தடையாகவே இருந்தது. இருமொழிக்-கொள்கைகளுள் மிக முக்கியமானதாகக் கருதப்பட்ட *கற்பித்தலியல்* ஏற்படுத்திய தாக்கங்களைப் புரிந்துகொள்வதில் தடங்கல் ஏற்பட்டதே அதற்கான காரணமாகும்.

நான்கு அதிகாரத்துவ மொழிகள், ஒரு தேசியமொழி என ஒரு வரைமுறையைக் கொண்டிருந்தாலும் சிங்கப்பூரில் இன, மதப் பிரிவுகள் மொழிச் சிக்கலை அதிகமாக்கவில்லை என்பது கோபிநாதனின் கருத்து (2014). மாறாக அவை தமக்கெனத் தனித்துவமான மரபையும் பண்பாட்டையும் கொண்டு விளங்குகின்றன. மொழியியல் வேறுபாடுகளைச் சமாளிக்க ஐரோப்பாவில் உள்ள சுவிட்சர்லாந்து போன்ற பன்மொழிச் சமுதாயங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன. சுவிட்சர்லாந்தில் மொழி வேறுபாட்டிற்குப் புவியியல் காரணமாக அமைந்துள்ளது.

சிங்கப்பூரில் சீன, தமிழ், மலாய் மொழிகள் தொடர்புக்கருவிகளாகவும் தத்தம் பாரம்பரியங்களின் மரபுடைமைக் குறியீடுகளாகவும் உள்ளன. ஆகவே, கொள்கைகள் வடிவமைக்கப்படும்போது, அங்கே பண்பாடு, அரசியல் ஆகியனவும், மொழிக்கொள்கைகளுடன் சேர்த்துப் பின்னப்பட்டிருப்பது கவனத்திற்கொள்ளப்-பட்டிருந்தன என்று கோபிநாதன் தெரிவிக்கிறார்.

## 1.1 மொழிக்கொள்கை நோக்கங்களை அடைவதில் தடைகள்

ஒரு நாட்டில் வாழும் பல்லின மக்கள் தங்களுக்குள் உரையாடும் மொழிகளுள் வேறுபாடு இருந்ததாலும் அவர்கள் பல மொழியியல் சூழ்நிலைகளிலிருந்து வந்திருந்ததாலும் மொழிக்கொள்கை வடிவமைப்பின் நோக்கங்களை அடைவதில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. சிங்கப்பூரில் மொழி, கல்விச் சிக்கல்களுக்கும் சில இடர்ப்பாடுகளிலிருந்து விடுபட இயலாதென்பதை 1945-55 காலக்கட்ட நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன.

சிங்கையில் சமூக மதிப்பு, வாழ்வு மேம்பாடு போன்றவற்றுக்கும் கல்விக்கும் வலுவான தொடர்புள்ளது என்று கூறும் கோபிநாதன், பின்காலனித்துவச் சமூகங்கள் பலவற்றில் அரசியலாக்கப்பட்ட கல்வி புதிதல்ல (2014, ப. 92) என்றும் கூறுகிறார். அரசியல் ஆதாயத்திற்காக வேறுபட்ட மொழித் தரப் பிரிவுகளில் பள்ளிகள் தோன்றக் காரணமாயிருந்தன என்று தெரிகிறது. நாட்டில் பல்லினச் சமத்துவம் நிலைக்கவும் அமைதி காக்கவும் எடுத்த இந்த முடிவு தொடக்கத்தில் சரியாக இருந்தாலும், தேவைக்கேற்பப் படிப்படியாகப் புதிய மாற்றங்களைப் பெற்றன. இவ்வாறு மொழிக்கொள்கை வடிவமைப்பின் நோக்கங்களை அடைவதில் இடையூறுகளும் தோன்றின.

சிங்கப்பூரில் மொழிக்கல்வி, அதுசார்ந்த பிரச்சினைகள், விவாதங்கள் என்பன சமூகங்களிருந்து பிரிக்கப்பட முடியாதவை. மொழிக்கல்விசார்ந்த விவாதங்களில் சமுதாயம், ஆசிரியர் சங்கம், செய்தித்தாள், வர்த்தக நிறுவனங்களின் சம்மேளனம் ஆகியவை முக்கியப் பங்கு வகித்தன (கோபிநாதன், 2014, ப. 93). இதிலிருந்து ஒரு சமூகத்தில் மொழிபெறும் முக்கியத்துவத்தையும் அதன் தாக்கமிக்க தன்மையயும் நன்கு அறியலாம் 1968இல், ஆசிரியர் சங்கத்தின் அழுத்தத்தால் இரண்டாம் மொழியில் சில பாடங்கள் கற்பிக்கும் திட்டம் மீண்டும் திரும்பப்பெறப்பட்டது. இதுபோன்ற நடைமுறைகள் நிலைமையைச் சிக்கலாக்கி-யதைத் தெளிவாக உணரமுடிகிறது. மேலும், 1969-1970 காலக்கட்டத்தில் ஆங்கிலவழிப் பள்ளிகள் சிலவற்றில் தொடக்கநிலை மூன்றில் வரலாறு போன்ற பாடங்கள் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டன. ஆனால், அம்முறை ஓராண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டதை நூலாசிரியர் நினைவுகூர்கிறார் (கோபிநாதன், 2014, ப. 93).

## 1.2 மொழிக்கொள்கை வடிவமைப்பால் கிடைக்கப்பெற்ற வாய்ப்புகள்

அரசியலாக்குதல் என்பதன் காரணமாக, நான்கு மொழிப்போதனைப் பள்ளிகளும் சமமாக இருந்தபோதிலும் மக்களின் விருப்பம் ஆங்கிலப் பள்ளிகளின் பக்கம் சென்றது. இருமொழிக்கொள்கை நடைமுறையில் இருந்தாலும் தாய்மொழியைக் கற்க நிறைய வாய்ப்புகள் அளிக்கப்பட்டாலும் ஆங்கிலப் போதனைப் பள்ளிகளாலும் தாய்மொழியை நன்றாகப் போதிக்க முடியும் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது. இங்குத் தாய்மொழி கற்றல் மட்டுமின்றி அது கற்றுத் தரப்படும் சூழலும் முக்கிய இடம்பெறுவதை அறிய முடிகிறது.

தாய்மொழிக் கல்விக்கான ஊக்குவிப்புச் சமூகத்தில் மேல்மட்டத்திலிருந்தும் சமூகத்தின் பிறநிலைகளிலிருந்தும் வந்தது. அப்போதைய பிரதமர் திரு லீ குவான் இயூ 1974இல் ஆங்கிலம் கற்ற சீனப் பெற்றோர்களிடம் அவர்கள் பிள்ளைகளைச் சீனப்பள்ளிகளுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார். சீனப் பள்ளியின் சுற்றுச்சூழலில் தொடக்கநிலையுடன் உயர்நிலைக்கல்வியையும் பயிலலாம் என்ற நிலை இருந்தது. அதோடு, சீனமொழியைத் தொடர்ந்து கற்றால் பிள்ளைகள் வாழ்நாள் முழுவதும் அம்மொழியில் சிறந்து விளங்குவார்கள் என்று அறிவுறுத்தியதையும் கோபிநாதன் (2014, ப. 93, 94) தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இனமொழியை, தாய்மொழியைக் கற்பதைத் தொலைநோக்கில் சிந்திக்கும் பாங்கு இங்கே வெளிப்படுகிறது, தாய்மொழிக் கல்விக்குக் கிடைத்த வரவேற்பு, முக்கியத்துவம் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே நடைபெறும் கற்பித்தலியலுக்குத் தரப்படவில்லை. இது கோபிநாதனின் ஆதங்கம். அதாவது, மொழிக்கொள்கை-சார்ந்த விவாதங்களில் அரசியல் முக்கிய இடம் பெறுமளவுக்குக் கற்பித்தலியல் பெறவில்லை என்பதை அறிய முடிகிறது.

பிரதமர் லீ குவான் இயூவுக்குத் தாய்மொழிக்கல்வியில் இருந்த அபரிமிதமான நம்பிக்கை காரணமாக, நம் சிங்கப்பூர்க் கல்விக்கொள்கையில் தாய்மொழிக்கல்வி ஓர் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை 1974-இல் அவர் சீனப் பெற்றோர்களுக்கு அளித்த ஆலோசனைகளிலிருந்து அறியமுடிகிறது. இதுவரை கல்வியில் மொழிக்கொள்கை பெறுமிடத்தையும் தாய்மொழிக்கல்விக்கான ஆதரவு, கற்பித்தலியல் குறித்த சில விவாதங்களையும் பார்த்தோம். இனித் தமிழ்மொழிக் கல்வி குறித்துப் பார்ப்போம்.

**1.3 அண்மைய மறுஆய்வுகளும் மேம்பாடுகளும்**

தமிழ்மொழிக் கல்வி குறித்த மறுஆய்வுகள் கடந்த முப்பது ஆண்டுகளாக அதிகம் நடைபெற்றாலும் 2005முதல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன எனலாம். இன்றுவரை நம் நாட்டில் 2005இல் மேற்கொள்ளப்பட்ட *சிங்கப்பூர்ப் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல்முறை குறித்த மறுஆ*ய்விலும், 2010இல் மேற்கொள்ளப்பட்ட தாய்மொழிகள் மறுஆய்விலும் (கல்வி அமைச்சு, 2005, 2011) மாணவர்கள் தாய்மொழியையும் தாய்மொழியை விரும்பும் வகையிலும் வாழ்வில் தொடர்ந்து பயன்படுத்தும் வகையிலும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்னும் நோக்கத்தில் மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, 2010 தாய்மொழிகளுக்கான மறுஆய்வில், "மாணவர்கள் தாய்மொழியை விரும்பிக் கற்கவும், அதனை வாழும் மொழியாகப் பயன்படுத்தவும், அவர்கள் தங்கள் வாழ்வில் பலவேறு சூழல்களில் பிறருடன் திறம்படத்தொடர்பு கொள்ளும்வகையில் தேர்ச்சிமிக்க மொழிப் பயன்பாட்டாளர்களாக உருவாகவும் அவர்களுக்கு உதவ வேண்டும்" (*"..to help students to like, learn and use their MTL as a living language, and produce proficient users who can communicate effectively in a variety of real-life settings* (கல்வி அமைச்சு, 2011, ப. 14) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது தாய்மொழியில் உயர்தமிழ் (HMTL) கற்கும் வாய்ப்பு உயர்நிலையில் அளிக்கப்பட்டுள்ளது என்பது பிரதமர் அன்று வலியுறுத்திய தாய்மொழிக்கல்வியின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

கோபிநாதன் தமது ஆய்வுக்கட்டுரையில் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், மொழியை மட்டும் இலக்காக்குதல் தொடர்வதால் கொள்கை வடிவமைப்பானது கற்பித்தலியல் குறித்து அமைவதைவிடப் பல வேளைகளில் அரசியல் சம்பந்தப்பட்டதாகவே அமைந்துவிடுகிறது என்பதாகும். கொள்கை வடிவமைப்புக்கு வேண்டிய திறமையும் விவேகமும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் குறை கூறுகிறார்.

"ஆசிரியவியலுக்கு (கற்பித்தலியலுக்கு) முக்கியத்துவம் அளிக்கப்படாத நிலையில், எடுத்த முடிவிலிருந்து பின்வாங்குவது அணுகுமுறையில் மாற்றம் செய்வது போன்ற செயல்கள், மொழி சம்பந்தப்பட்ட பல கொள்கைகள் அவசர முடிவுகளால் உருவாக்கப்பட்டவை என்பதைச் சாட்சியத்தோடு காட்டுகின்றன. அத்தகைய கொள்கைகள் தந்த பாடங்கள்வழியே ஏற்புடைய நல்ல படிப்பினை

கிடைத்ததாகத் தெரியவில்லை என்கிறார், கோபிநாதன். கற்பித்தலியலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஆய்வு வழிச்சான்று, பரிசோதனை, பயிற்சி மற்றும் பாரபட்சமற்ற போதனை போன்றவை கொள்கை வகுப்பதிலோ செயல்-படுத்துவதிலோ முக்கியக்கூறுகளாகத் திகழவில்லை" (கோபிநாதன், 2014, ப. 94). கடந்த பத்தாண்டுகளில் இருமொழியம் எவ்வாறு நியாயப்படுத்தப்பட்டது என்பதை மேலோட்டமாக நோட்டமிட்டால்கூடக் கற்பித்தலியல் விளைவுகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய கவனம் கிடைக்கவில்லை எனக் கோபிநாதன் தெரிவிக்கிறார்.

கோபிநாதன் கூறிய இக்கருத்துகள், மொழிக்கொள்கையை வடிவமைப்பதில் முக்கிய இடம்பெறுகின்றன. மொழியைத் திட்டமிடுதலில் உள்ள பல்வேறு கூறுகள் தமக்குள் தொடர்புடையவை. எனவே, இவையும் இவற்றின் விளைவுகளும் கல்வி உட்பட மற்றத் தரப்புகளையும் பாதிக்கலாம் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. மேலும், கல்விசாராத மற்றப் பகுதிகளில் உண்டாகும் வளர்ச்சியும் மொழிக்கொள்கையைப் பாதிக்கக்கூடும் என்பதைக் கவனத்திற்கொள்வது குறித்தும் எச்சரிக்கிறார், கோபிநாதன் (2014, ப. 94).

மொழிக்கொள்கை என்பது மிகவும் கவனத்துடன் கையாளவேண்டிய ஒரு பகுதி. இத்தகைய முக்கியக் கருத்துகளைக் கோபிநாதன் தமது ஆய்வில் தெளிவாக விளக்கியிருக்கிறார். அவரது அனுமானமும் கல்விக்கொள்கையில் அவரது ஆய்வின் ஆழமான பார்வையும் பின்னர் நாட்டுத் தலைவர்களுக்கும் கல்வி அமைச்சுக்கும் நல்லதொரு வழிகாட்டியாக அமைந்திருப்பதை நாம் மறுக்க முடியாது. அவரது சிந்தனைகளும் தொலைநோக்கும் கல்விக்கொள்கை வடிவமைப்பில் முக்கியப் பங்காற்றியுள்ளன என்றால் அது மிகையாகாது. மற்றப் பல கல்வியியல் ஆய்வுகளிலும் அவரது கருத்துகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

"புத்தாயிரமாம் ஆண்டில் தாய்மொழி கற்பிப்பதில் உள்ள சவால்களும் வாய்ப்புகளும்" என்னும் தலைப்பில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் அவர் ஆற்றிய முதன்மை உரையில் கோபிநாதன் (2001) கூறிய கருத்துகளை இங்குச் சற்றுப் பார்ப்போம். அவர் சுமார் 25 ஆண்டுகளாக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தலிலும், தொடக்கப்பள்ளி ஆசிரியப் பயிற்சித் திட்டங்களை மறுசீரமைத்துச் செம்மைப்படுத்தும் பணியிலும் தாம் பெற்ற பல அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். மொழிக்கொள்கைபற்றியும் கல்வித்துறையில் மொழியின்

பங்குபற்றியும் பல ஆராய்ச்சிகளையும் அவர் மேற்கொண்டார். அவற்றை வைத்துப் பார்க்கும்பொழுதும், நம் சமுதாயம் பல சவால்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டார். எனவே, எதிர்காலத்தைச் சீர்ப்படுத்திடவும் கல்விக்கொள்கைகளை வகுத்திடவும் நம்மால் முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இதிலிருந்து கல்விக்கொள்கைகளில் அவரது தொலைநோக்குச் சிந்தனை அறியப்படுகிறது. அதோடு அவர், "அடுத்த 20 ஆண்டுகளுக்கான சிங்கப்பூரின் கல்வித் தேவைகள், சவால்கள்" என்னும் தலைப்பை அணுகினார். தாய்மொழிக்கல்விக் கொள்கைகள் குறித்து என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

*நேற்று, இன்று, நாளை* என்னும் வரிசையில் சிங்கப்பூர்க் கல்விக்-கொள்கைகளில் அவருக்குள்ள அக்கறை குறிப்பிடத்தக்கது, குறிப்பாகக் கடந்த காலச் சிங்கப்பூர்க் கல்விக்கொள்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளை ஆய்வு செய்து, 1920 – 1980 வரை மொழிக்கொள்கைத் திட்டங்களின் காரணங்கள் பற்றியும், அவை தமது நோக்கங்களை அடைவதில் எழுந்த பிரச்சினைகள், புதிய வாய்ப்புகள் பற்றியும், 1979க்குப்பிறகு இருந்த கல்வியின் நிலை பற்றியும், புதிய முயற்சிகள் பற்றியும் அவர் விளக்கியிருப்பதை இக்கட்டுரையிலிருந்து அறிந்து-கொள்ளலாம். கோபிநாதன், கல்விசாரா மற்றப் பகுதிகளான, தொழில்-மயமாக்குதல், பன்னாட்டு நிறுவனங்களின் அதிகமான முதலீடு ஆகியன ஆங்கிலவழிப் பள்ளிகள் தேவையை அதிகரித்தன என்றும், ஆங்கிலத்தினை ஏற்றுக்கொள்ள வைத்தன என்றும் இதனால், மொழிக்கொள்கை வடிவமைப்பில் அரசியல், சமூக, பொருளாதார நோக்கம் என்று பல நிலைகளில் விட்டுக்கொடுக்க நேரிடுகிறது என்றும் கூறுகிறார். இவ்வாறு உள்ள நிலைமையில் ஓரளவு மட்டுமே சாதிக்கப்பட்டுள்ளது; முடிவுகளில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பது கோபிநாதன், வலியுறுத்தும் பிற கருத்துகளாகும். ஆங்கிலமொழியின் பயன்பாடு, அதற்கான பின்னணிக் காரணம், தாய்மொழிகளின் பயன்பாடு, அதற்கான பின்னணிக் காரணங்கள் ஆகியவற்றை அவ்வப்போது எடுத்து விளக்குகிறார்.

கோபிநாதன், தமது கட்டுரையில் மொழிக்கொள்கை அமலாக்கத்தில் இடர்ப்பாடுகளை விவாதித்தபோதிலும், வாய்ப்புகள் இருந்ததையும் அது குறித்த செய்திகளையும் தெரிவிக்கிறார். சிங்கையில் மொழியியல் புரிந்துணர்வு எப்போதும் காணப்படுகிறது என்பதை நன்கு கவனிக்க வேண்டும். அடுத்து, நில அமைப்பொழுங்காலும் மாறிவரும் சூழலில் நகரமயமாக்குதலாலும் இடம் மாறிய

மக்களிடம் பொதுத்தகவல் சாதனைகளின் தாக்கம் அனைவரிடமும் சென்று சேர்கிறது. அரசியல் அதிகாரம் அதன் கருத்துகளை எளிதில் தெரிவிக்கிறது. இளையயோர் தம் தாய்நாட்டின்மீது கொண்டுள்ள சமூக, பண்பாட்டு உறவைத் தளர்த்தியிருப்பது உண்மை. மலாய்மொழியைத் தேசிய மொழியாக ஏற்றுக்-கொள்வதும் இதைக் காட்டுகிறது. இது அரசியல் மற்றும் சமூக அடிப்படையின் குறிக்கோளன்று. மாறாக, இந்தக் குறிக்கோளை அடையப் பயன்படுத்தப்படும் உத்திகள் என அறியப்படுகிறது.

## 2. மொழிக்கொள்கைத் திட்டங்களின் பகுத்தறிவான காரணங்கள்

பள்ளி அமைப்பில் நான்கு முக்கியத் திட்டங்களை அடையாளம் காணலாம். முதலில் 1956 அனைத்துக் கட்சி அறிக்கையின் வரலாற்றுப் பதிப்பு வெளியிடப்பட்டது. அப்போது அதிகாரத்துவ மொழிகளாக வரையறுக்கப்பட்ட ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகியவற்றைக் கற்பிக்கும் மொழிகளாகவும் சில வேளைகளில் சில பாடங்களுக்கு மட்டும் உயர்நிலைக் கல்வியிலும் பல்கலைக்கழக நிலையிலும்கூடப் பாடங்களைக் கற்பிக்கும் மொழிகளாகவும் இருந்தன. மேலும், இம்மொழிகளில் மாணவர்கள் தேர்வும் எழுதலாம். பல்லினச் சமுதாயத்தில் அதிகாரத்துவ மொழிகளுக்குச் சமத்துவம் அளிக்கப்படாமல் பாரபட்சம் காட்டப்படுமானால், அது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். எனவே, இவ்வாறு சமத்துவத்தின் அடிப்படையில் இத்திட்டத்தை வகுத்ததற்கு உள்ளார்ந்த காரணங்கள் இருந்தன.

இரண்டாவதாக, இருமொழியம் (Bilingualism) என்னும் திட்டத்தை பின்வரும் அடிப்படையில் நியாயப்படுத்தலாம் (சீதாலட்சுமி, 2000). அது இனங்களுக்கு இடையே தொடர்பைச் சாத்தியமாக்கித் தேசிய ஒற்றுமையை வலுவாக்குகிறது; அது பல்லினப் பண்பாட்டுக் கொள்கையைத் தொடரச் செய்கிறது; அது தனிமனிதனுக்கும் இனப்பிரிவுக்கும் அடையாளத்தையும் சமூக உணர்வையும் தருகிறது; இறுதியாக அது வேலை வாய்ப்புகளையும் அதிகமாக்குகிறது. எனவே, ஒவ்வொரு மாணவரும் இருமொழித்தேர்ச்சி அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு, தன் முழுத்திறமையைப் பயன்படுத்தி அதை அடைய முயலவேண்டும் என்று கூறப்படுகிறது. குறிப்பாக, மாணவர்கள் ஆங்கில மொழியையும் தம் தாய்மொழியையும் தேர்ந்தெடுக்கலாம். அதாவது சீனர்களுக்கு மாண்டரின்; மலாய்க்காரர்களுக்கு மலாய்; இந்தியர்களுக்குத் தமிழ். ஆங்கிலம் எனும்போது.

அது பயன்பாட்டு மதிப்புக்கும், வேலை வாய்ப்புக்கும், மேற்கத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை அணுகுவதை உறுதிசெய்வதற்கும் கற்றுக்கொள்ளப்படவேண்டும். காரணம், ஆங்கிலமொழி வணிகம், கல்வி, சமூகம் போன்றவற்றில் உயர் நிலையை அடைவதற்கு முக்கிய மொழியாகத் தேவைப்படுகிறது.

“ஆங்கிலத்தோடு தாய்மொழி கற்றலுக்குக் கூறப்படும் மற்றொரு காரணம் என்னவென்றால், அது மாணவர்களுக்கு இனம் மற்றும் பண்பாட்டு அடையாளத்தைப் பற்றிய நுண்ணறிவை அளித்துப் பன்னோக்குப் பண்பாட்டுக் கொள்கையைப் பராமரித்து வளர்க்கிறது. மேற்கத்திய விழுமியங்களையும் வாழ்க்கை முறைகளையும் ஏற்றுக்கொண்டு, எங்கே அடையாள இழப்புநிலை, பண்பாட்டு இழப்புநிலை, பூர்வீகமற்றநிலை போன்ற விளைவுகள் ஏற்பட்டுத் தாய்மொழித்திறனுக்குப் பாதிப்பினை வழங்கிவிடுமோ என்ற நிலை எதிர்கொள்ளப்படுகிறது” (கோபிநாதன், 2014, ப. 95).

சிங்கப்பூரில் இருமொழிக்கொள்கை என்பது நம் கல்வித் திட்டத்தின் முக்கியக் கூறாகும். இக்கொள்கைக்கு ஏற்ப மாணவர்கள் ஆங்கிலத்தையும் தாய்மொழியையும் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். சமூகத்திலும் இல்லங்களிலும் விரைந்து மாறிவரும் மொழிச் சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தாய்மொழியில் கற்றல் கற்பித்தல் காலத்திற்கு ஏற்பத் தக்க மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. நம் நாட்டில் தமிழ்மொழியைத் தொடர்ந்து வாழும் மொழியாக நிலைபெறச் செய்வதே நம் இலக்காகும். பல்வேறு இனங்களையும் கொண்ட சிங்கப்பூரில் இருமொழித்திறன் என்பது அடிப்படைத் தேவையாக இருக்கிறது. உலக நாடுகளுடன் தொடர்புகொள்ளவும் நம் பண்பாட்டு விழுமியங்கள், மரபுகள் முதலியவற்றைத் தொடர்ந்து போற்றிக் காப்பதுவும் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் தமிழை வாழும் மொழியாக்குதலும் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது (கல்வி அமைச்சு, 2015, ப. 11) என்பதைக் கட்டுரையாளர்கள் சுட்ட விழைகின்றனர்.

## 2.1 பகுத்தறிவு நோக்கிலமைந்த முடிவுகள்

இன்று சிங்கப்பூர் மாணவர்கள் அயல்நாடுகளில் படிக்கச் சென்றாலும் பணிபுரியச் சென்றாலும் சிங்கப்பூரில் படித்த கல்விக்கு நல்ல மதிப்பும் அங்கீகாரமும் வழங்கப்படுகின்றன.

மலாய் மட்டும் தனியொரு தேசிய மொழியாகவும், நாட்டு அடையாளத்தைக் குறிப்பதற்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பள்ளிகளில் கீழ் உயர்நிலை வகுப்புகளுக்கான கால அட்டவணையில் அதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

“கடந்த 15 ஆண்டுகள், மொழிக்கொள்கைகளில் ஏற்பட்ட இத்தகைய முக்கிய உத்திகளின் உருவாக்க முயற்சிகள், ஒருங்கிணைந்த பள்ளிகளை உருவாக்குவதுடன் இனங்களுக்கிடையே உள்ள உறவை ஊக்குவித்து மொழித்திறனை மேம்படுத்தும்வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய கட்டமைப்பு மாற்றம். இத்தகைய ஒருங்கிணைந்த பள்ளிகளில், இரண்டுக்கு மேற்பட்ட மொழிப்பிரிவுகள் பொது நிர்வாகத்தினையையும், மற்ற வசதிகளையும் பகிர்ந்துகொள்கின்றன” (கோபிநாதன், 2014, ப. 98). இரண்டாம் மொழி கற்றுக்கொள்ளுதல் 1960லிருந்து தொடக்கநிலையிலும் 1966லிருந்து உயர்நிலையிலும் கட்டாயமாக்கப்பட்டது. 1966இல் தொடக்கநிலையிலும் 1969இல் உயர்நிலையிலும் இரண்டாம் மொழி ஒரு தேர்வுப் பாடமாகியது. 1968இல் தாய்மொழிவழிப் பள்ளியில், தொடக்கநிலையில் அறிவியலும் கணிதமும் ஆங்கிலத்தில் கற்பித்தல் தொடங்கப்பட்டது. 1969இல் சில ஆங்கிலவழிப் பள்ளிகளில் குடியியலும் 1970இல் வரலாறும் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டன. 1969இல் மலாய்ப் பள்ளிகளிலும் தமிழ்ப்பள்ளிகளிலும் உயர்நிலை ஒன்றில், மரவேலை, உலோக வேலை, அடிப்படை மின்சாரவேலை போன்ற பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டன எனக் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களை நூலாசிரியர் எடுத்துரைக்கிறார்.

மொழிக்கொள்கையை மேலும் சீராக்க வேண்டிய தேவையை 1970களில் மேலும் மூன்று கொள்கைகள் கோடிகாட்டுகின்றன. முதலாவது, 1975இல் தொடக்கப்பள்ளிகளில், இரண்டாம் மொழியில் உறவாடும் நேரவிகிதம் மற்றும் கற்பிக்கும் நேரம் ஆகியவற்றை அதிகரிப்பதாகும். மாணவர்கள் இருமொழியத் திறனைப் பெறப் பள்ளியில் இரண்டாம் மொழியில் உறவாடும் நேர அதிகரிப்பு அவசியமான கூறு என்பதை இந்த முடிவு எதிரொலிக்கிறது. இரண்டாவது, 1974இல் *வாழ்க்கை நலக்கல்வி* என்னும் புதிய குடியியல் பாடம், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பல பாடங்களின் ஒருங்கிணைப்பு பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பாடங்களும், ஓவியம்-கைவினைப் பாடமும்

தாய்மொழியில் கற்பிக்கப்பட்டன. மூன்றாவது, மாணவர்கள், மொழியில் உறவாடும் நேரம் மற்றும் அவர்களுக்கு மொழி கற்பிக்கும் நேரம் ஆகியவற்றின் தேவைகளை நடைமுறைப்படுத்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் நீக்குப்போக்குத் தன்மை வழங்கும் பொருட்டுக் 1975, 1978களில் கொள்கை மாற்றியமைக்கப்பட்டது.

சிங்கப்பூரின் மொழிக்கொள்கையின் பல கூறுகள் திறனாய்விற்கு உட்பட்டிருந்தாலும் அவற்றால் நன்மைகளும் கிட்டியுள்ளன. இங்கு அவ்வகையில் மூன்று வெற்றிகளைக் குறிப்பிடலாம். முதலாவதாக, பிறமொழி பேசுவோரிடம் புரிந்துணர்வு, பிறமொழியைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம், சிறுபான்மையினருக்கு முக்கிய இடம் கொடுத்தல் முதலியன நடுநிலையான முக்கிய அரசாங்கக் கொள்கைகளின் விளைவுகளே ஆகும். பலதரப்பட்ட சமுதாயத்தைக் கொண்ட சிங்கப்பூர், மரபுடைமையின் அடையாளச் சின்னமாகக் கருதப்படும் நிலவியல்சார்ந்த அரசியல் பகுதியில் அமைந்துள்ளது. இந்நிலையில் மொழியைப் புறக்கணிப்பது மிகவும் சுலபமாக இருந்தாலும், அவ்வாறு செய்யாதது பாராட்டுதற்குரியது (கோபிநாதன், 2014, ப. 98).

இரண்டாவது முக்கியமான வெற்றியாக அமைவது, இருமொழியம் எழுத்தறிவை மேம்படுத்தியதுதான். கணக்கெடுப்பு ஆண்டுகளில் 20% எழுத்தறிவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், கல்வி, பொருளியல் மற்றும் அரசியல் வாய்ப்புகள் சமமாக்கப்பட்டன.

மூன்றாவதாக, அரசாங்க மொழிகளைச் சமமாக நடத்துவது அரசாங்கக் கொள்கையாக இருந்தாலும், ஆங்கிலமொழி தொடர்பு நிலையில் ஒரு முக்கியப் பங்கு வகிப்பது தெளிவாகத் தெரிந்தமை. இது பன்னாட்டு முதலீட்டாளரின் மொழி; அனைத்து இனக்குழுக்களும் போட்டியிடப் பயன்படும் தொடர்புக்கருவி. தவிரவும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை ஆங்கிலம் அல்லாத தரப்பிரிவுகளும் வெகுவாக ஏற்றுக்கொண்டன. ஆங்கிலப்பிரிவுக்கு அதிகமானோர் பதிவு செய்துகொண்டனர். இந்தப் பின்னணியில், ஆங்கிலம், எழுத்தறிவில் அதிக முன்னேற்றம் கண்டது. இப்போக்குத் தொடர்ந்து தக்கவைக்கப்படும் என்ற கோவின் அறிவிப்பு ஆங்கிலத்தின் முக்கியப் பங்கினை முன்னறிவிக்கிறது (கோபிநாதன், 2014, ப. 99). அது இன்றும் தொடர்ந்து நிலைத்தன்மையுடன் இருந்து வருகிறது.

## 2.2. நோக்கங்களை அடைவதில் பிரச்சினைகளும் புதிய வாய்ப்புகளும்

“சிங்கப்பூரில் மொழிக்கொள்கையின் பொதுவான நோக்கங்களைப் பற்றிய இணக்கம் இருந்தபோதிலும், இந்நோக்கங்களை அடைய அவ்வப்போது முன்மொழியப்பட்ட உத்திகள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடையே கவலையையும் விமர்சனத்தையும் உண்டுபண்ணத் தவறவில்லை. இதுபோன்ற எதிர்விளைவு கல்வியின்மேல் பெற்றோர் கொண்டுள்ள அக்கறையைக் காட்டிய-போதும், கல்வியமைச்சின் உத்தேசத் திட்ட வரைவுகள்மீது அவர்கள் கொண்டுள்ள அதிருப்தியின் சாட்சியாகவும் விளங்குகிறது” (கோபிநாதன், 2014, ப. 99).

சிங்கப்பூரின் கல்விக்கொள்கையில் கடந்த 20 ஆண்டுகளில் இருமொழியம் ஒரு மையக்கூறாக இருந்துவந்தபோதிலும், பெரும்பாலானவை கற்பித்தலியலின் விளைவுகளைப் பற்றியில்லாமல் அரசியல், சமூகம் தொடர்பானவையாகவே இருந்தன (கோபிநாதன், 2014, ப. 100). இங்குக் கற்றல் கற்பித்தலின் இன்றியமையாமை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இருமொழியத் திட்டம் இனங்களுக்கிடையிலான தொடர்புக்கு உதவிசெய்து பண்பாட்டு உறுதித்தன்மையை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டதைத் தவிர குறிப்பாக அதன் இலக்குகள் வரையப்படவில்லை. இலக்குகளை அடைவதற்கான பாடத்திட்ட உத்தேச வரைவு முதலியவைபற்றி மிகக் குறைவான கருத்தாய்வுப் பரிசீலனை மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இருமொழியிடையே உள்ள வெவ்வேறு மொழித்-திறன்கள்பற்றி கருத்தாய்வு நிலையில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை என்று நூலாசிரியர் ஆதங்கப்படுகிறார்.

## 2.3 நோக்கங்களை அடைவதில் பிரச்சினைகள்

முதல் மொழியைவிட இரண்டாம் மொழி சாதாரண மாணவரிடமிருந்து அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்தது என்பதற்கான சாட்சியங்கள் அதிகமாக இருந்தபோதிலும் இலக்கை அடைவதற்கான மிகக் குறைவான முயற்சிகளே எடுக்கப்பட்டன. இருமொழியம் சமூகத்தில் முக்கிய இடத்தை பெற்றிருந்தால், ஒரு கட்டத்தில், ஒரு மாணவன் ஒரு மொழியை நன்கு தெரிந்திருப்பதைவிட இருமொழிகளைக் குறைபாடுடன் தெரிந்திருப்பது மேல் என்று வலியுறுத்தப்பட்டது. மாணவர்கள் குறைந்தபட்சம் ஒரு மொழியில் எழுத்தறிவை அடைவதோடு இரண்டாவது மொழியில் ஓரளவு பேசிப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற

குறிக்கோள் இருந்தது. இருப்பினும் அதனை நிறைவேற்ற தெளிவான விளக்கமும், அடையக்கூடிய வழிமுறைகளும் முக்கியம் என்று கருதப்படுகின்றது.

**3. புதிய வாய்ப்புகள்**

“முதல் மற்றும் இரண்டு மொழிகளுக்கிடையே மொழித்தேர்ச்சி அடைதலில் உள்ள இருநிலை வித்தியாசம் குறித்து மறுஆய்வு செய்யப்படாதது வருத்தத்திற்குரியது. இந்த நிலைக்கான காரணம் தெரிவிக்கப்படாததற்கு இந்த நிலை நியாயமானது என்று கருதப்பட்டதால் இருக்கலாம்” (கோபிநாதன், 2014; ப. 94). மாணவர்களின் மொழித் தேர்ச்சிநிலையை மதிப்பிட ஆசிரியர்களிடம் ஒரு வழியும் இல்லை. அப்படி ஆரம்பக்கட்டத்தில் மதிப்பிடப்பட்டிருந்தால் பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாண்டிருக்கலாம் என்பன போன்ற கருத்துகளை முன்மொழிந்திருப்பதிலிருந்து கோபிநாதன் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையையும் கல்விக்கொள்கைகளை வடிவமைப்பதில் அவருக்கு இருக்கும் ஈடுபாட்டையும் நம்மால் உணர முடிகிறது.

மொழி கைவரப்பெறல், தேவைகள் குறித்த பிரச்சினைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். பாடக்கருவிகள் தொடர்பான பிரச்சினை-யின்பால் மிகக் குறைவான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. மொழி அல்லாத பாடங்களின் மறுசீரமைப்பில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு மொழிசார்ந்த பரிமாணத்தில் குறைவான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் மொழியில் கற்கும் மாணவர்களுக்குத் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்களை வெளியிடும் பதிப்பாளர்களுக்கு வழிகாட்டிகள் கொடுக்கப்படவில்லை. தமிழ் தொடர்பான தனியார் நூல்களில் கற்பித்தலியல்சார்ந்த கூறுகளின்படி அவற்றின் உள்ளடக்கம் அமைவதில் சிக்கல்கள் உள்ளன. இதனால், மாணவர்களுக்குப் பாடப்பொருளைப் புரிந்துகொள்வதில் சிக்கல் உண்டாகிறது. இரண்டாம் மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்குப் பாடக்கருவிகள் உரிய பயனளிக்கவில்லை. இது இன்றும் கவனிக்கப்பட வேண்டியதோர் அம்சம்.

மொழி கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் முறையில் மறுஆய்வு செய்யப்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. மறுஆய்வு இடம்பெறும்போது, முறையாக அமைக்கப்பட்ட புலனாய்வு நிபுணத்துவக் குழு வாயிலாக ஆய்வு மேற்கொள்ளுதல் என அமையலாம். முதலில் மொழிச்சூழல் குறித்த சமூகமொழியியல் தகவல்களைச் சேகரித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மொழிக்கொள்கைகளில் மற்றப் புது முயற்சிகளைப் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டும். நம் மொழிச் சிக்கலுக்கான தீர்வு பட்டத்தொழிலியல் மற்றும் நிபுணத்துவம் ஆகும் (Professionalism and expertise) (கோபிநாதன், 2014, ப. 110).

“குறை கூறப்படாத ஒரு பகுதி என்னவென்றால், மொழி கற்றலை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் எண்ணிக்கை. எடுத்துக்-காட்டுக்கு, மதிப்புமிக்க பிரதமர் பரிசு (பிரதமர் பெயரால் அமைந்த பரிசு). மிகச் சிறப்பான இருமொழித் தேர்ச்சி இலக்கை அடைதலுக்கான உரிய வெளிப்பாட்டு நேரத்தை (Language Exposure Time - LET) அல்லது உறவாடும் நேரத்தை மொழிகளுக்கு வழங்கும் வகையில் கால அட்டவணையை வகுத்துச் சாதனை புரிந்த பள்ளிகளுக்கான பரிசு ஆகியன இதில் அடங்கும்” (கோபிநாதன், 2014, ப. 103).

இத்தகைய ஊக்குவிப்பு இன்றும் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் முக்கியத்துவம் பெறுவதை நாம் அறிவோம். உறவாடும் நேரத்தை அதிகமாக்கும் நோக்கில் (கல்வி அமைச்சு, 2015) இங்கு மொழி கைவரப்பெறல் திறன்கள் வளர்க்கப்பட்டு நல்ல பலனை அளிக்கத் தொடங்கியிருப்பதை நாம் மறுக்க முடியாது என்று கட்டுரையாளர்கள் நம்புகின்றனர். மேலும், மாணவர்களின் மொழித்தேர்ச்சியை மதிப்பிடத் தற்போது நிறைய வழிமுறைகள் உள்ளன. பொருத்தமான கற்பித்தல் முறைகள் கற்பிக்கப்படுகின்றன.

மாணவர்களின் மொழித்தேர்ச்சியை மதிப்பிடுதல், மொழிசார்ந்த அம்சங்களில் அதிகக் கவனம் செலுத்துதல், மொழி கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் முறையை மறுஆய்வு செய்தல் போன்றவைபற்றி எழுப்பப்பட்ட அறைகூவல்களைப் பின்னர்க் கல்வியமைச்சு கருத்திற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளையும் பரிந்துரைகளையும் படிப்படியாக அமலாக்கம் செய்தது. இத்தகைய கருத்துகளை வெளியிட்டுள்ள கோபிநாதன், தாம் அக்காலட்டத்தின் கல்விக்கொள்கைகளில் கண்டறிந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது மிகவும் வியப்புக்குரியதாகக் கட்டுரையாளர்களுக்குத் தோன்றுகிறது. அவரது கல்விக்-கொள்கைக் கருத்துகள் 1980முதல் இன்றுவரை படிப்படியாகச் சிங்கப்பூரில் நடைமுறை கண்டுள்ளதை நம்மால் மறுக்க முடியாது. அதற்குச் சான்றாக 2005, 2010 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மறுஆய்வுகளின்

பரிந்துரைகளை (கல்வி அமைச்சு, 2005; 2011) வழிகாட்டியாகக் கொண்டு பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பாடக்கருவிகளும் உருவாக்கம் கண்டுள்ளன. இருமொழிக்கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதிய பாடக்கருவிகளும் கற்பித்தலியலில், குறிப்பாக மொழித்திறன்களின் வளர்ச்சிக்கு முக்கியக் கூறுகளும் அறிமுகம் கண்டுள்ளன. மொழித்திறன் வளர்ச்சியோடு விழுமியங்களுக்கும் கூடுதல் கவனம் தரப்பட்டுள்ளதையும் கோபிநாதன் அறிந்திருப்பார். அவரது ஆலோசனைகளும் குறைகூறல்களும் இத்தகைய முன்னேற்றத்திற்கு வித்திட்டுள்ளன என்பதில் ஐயமில்லை. அவர் அன்று கண்ட கனவு இன்று நனவானது என்பதைக் கடந்த பத்தாண்டுகளில் அறிமுகம் கண்டுள்ள தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களைக்-கொண்டு (கல்வி அமைச்சு, 2008; 2015) அறியலாம் எனக் கட்டுரையாளர்கள் கருதுகிறார்கள்.

புதிய பாடத்திட்டமும் அவ்வப்போது சற்றுப் பொருத்தப்பாடின்றிக் காணப்படுவதை இங்குக் கட்டுரையாளர்கள் குறிப்பிட விரும்புகின்றனர். தற்போதைய சிங்கப்பூர்ச் சூழலில் தமிழ்மொழிப் புழக்கம் குறைவாக இருப்பதால் இரண்டாம் மொழி கற்றலை சுமையாக்காமல், சுவையாக ஆக்க உதவலாம். எடுத்துக்காட்டாக, 2015இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள நோக்கத்தைப் புரிந்து-கொண்டு பொருத்தமான வடிவத்தில், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் செய்தல், பலதரப்பட்ட எழுத்து வடிவங்களுக்கு மறுமொழி எழுதுதல் ஆகியவை புதிதாக இணைக்கப்பட்டுள்ளன; தொடக்கநிலை மூன்று முதல் ஆறு வரையில் எதிர்-பார்க்கப்படுகின்றன. இத்தகைய கற்றல் விளைவுகளை மாணவர்கள் பெறுவதற்கு மொழியைக் கைவரப்பெறும் ஆற்றல் தேவைப்படும். அது ஒருவேளை, உயர்தமிழ் வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கே தடுமாறும் தொடக்கநிலையில் உள்ள தமிழ் வகுப்பு மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். மீத்திறன் நிலையில் இருக்கும் மாணவர்கள் இத்திறனைப் பாடுபட்டுக் கற்றாலும், பையப்பயிலும் மாணவர்களால் இயலாத ஒன்றாக உள்ளது. இல்லமொழிச் சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தாய்மொழி கற்றல் கற்பித்தல் எங்ஙனம் சிறப்படையும்? இரண்டாம் மொழி கற்றல் தாய்மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் உதவினாலே போதுமானதாகும்.

சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் இயூ அவர்கள், குறிப்பிட்டுள்ளதைச் சற்றுக் கண்ணோட்டமிடலாம் (கோபிநாதன், 2014, ப. 113). இருமொழி சாதனை முழுமையானதல்ல என்று விவரித்துள்ளார். அதாவது சுமார் 20 விழுக்காட்டினர் மட்டுமே இருமொழித்தேர்ச்சி பெற்றவர்கள். அதாவது, அவ்வாறு தேர்ச்சி பெற்றவர்கள், ஒரு மொழியைச் சரளமாகக் கையாளுபவர்களாகவும், இரண்டாவது மொழியைப் போதுமான அளவிற்குக் கையாளுபவர்களாகவும் இருந்தனர் என்பதாகும். இருமொழிக்கொள்கையை விடாமுயற்சியோடு தொடர்வதைத் தவிர சிங்கப்பூருக்கு வேறுவழி இல்லை என்று அரசு கருதுகிறது. தரம் குன்றிய மாணவர்களுக்குச் சலுகைகள் கொடுத்தாலும், உயர்ந்த இருமொழித் திறமை கொண்டுள்ள மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குச் சிறந்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டு அவர்களுக்குச் சாதனை வாய்ப்புத் தரப்படவேண்டும்.

இத்தகைய சூழலை இன்றும் நம் அரசாங்கம் தக்கவைத்திருப்பதைக் கட்டுரையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். நம் நாட்டிற்கே உரிய தனித்தன்மை இருமொழிக்கொள்கை ஆகும். இக்கல்விக்கொள்கை பழையதாக இருந்தாலும் அது பொன் போன்றது என்றால் மிகையாகாது. இது நாம் கற்றுக்கொள்ளவேண்டிய, கட்டிக்காக்க வேண்டிய கொள்கையாகும்.

### *4. 1979க்குப் பிறகு கல்வியில் புதிய முயற்சிகள்*

இக்காலக்கட்டத்தில் புதிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதி முடிக்கப்பட்ட பின்னர், கல்வியில் புதிய முயற்சிகள் தடையின்றித் தொடர்ந்தன. ஒரு முக்கியத் தொழில் மற்றும் நிதி மையமாகச் சிங்கப்பூரின் வளர்ச்சியை ஊக்குவிக்கக் கல்வியமைச்சு மாணவர்கள் கற்கக்கூடிய மொழிகளின் எண்ணிக்கையை உயர்த்தியது. இரண்டு அதிகாரத்துவ மொழிகளில் திறமை பெற்ற மாணவர்கள் மூன்றாம் மொழியைப் பயிலலாம். பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பான், ஆகிய மொழிகளில் ஒன்றைச் சிங்கப்பூர் கேம்பரிட்ஜ் பொதுக்கல்விச் சாதாரணநிலைத் தேர்வில் தேர்ந்தெடுக்கலாம்.

இருமொழித் திறமையை உறுதிசெய்யவும், ஆங்கிலப் பள்ளிகளில் ஏற்படும் கலாசார இழப்பு அபாயத்துக்கு எதிராகவும், மாணவர்களைச் சீனப் பள்ளிகள் ஈர்க்கும் வகையிலும் வைத்திருக்க அரசாங்கம் வகைசெய்தது. இதன்வழி அரசாங்கம் சீனப் பள்ளிகளின் பாரம்பரியத்தைத் தொடர்ந்து கட்டிக்காக்கவும் உயர்த்தவும் செய்தது. இத்தகைய பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சிபெற்ற சிறந்த எட்டு

விழுக்காட்டு மாணவர்கள், அரசாங்கம் தேர்ந்தெடுத்த ஒன்பது முன்னணிச் சீனவழி உயர்நிலைப்பள்ளிகளில் கற்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் சீன இனத்தவர்களாக இருந்தார்கள்.

மற்ற ஆங்கில உயர்நிலைப்பள்ளிகளில், கூடுதலான ஆங்கிலத்தில் நடத்தப்படும் ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டங்களில் (Immersion) சேர்வதற்குச் சிறப்பு உதவித்திட்டம் வழிவகுக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஆங்கிலத் திறமையின்மீதுள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இதனைக் கோபிநாதன் கட்டுரை நமக்கு எடுத்துரைக்கிறது.

### 4.1 1979க்குப் பிறகு இருந்த கல்வியின் நிலை

இருமொழியம் தொடர்ந்து உயர்கல்வியில் எதிர்பார்க்கப்பட்டது. ஒரு நிலையிருந்து அடுத்த நிலைக்கு உயர்வதற்கு மொழியில் சிறந்த தேர்ச்சி தேவைப்பட்டது. 1979இலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளுக்குச் செல்வதற்கு இரண்டாம் மொழியில் தேர்ச்சி (குறைந்தபட்சம் S8) என்னும் தரநிலையைப் பெற்றிருக்கவேண்டும். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் உள்ள மாணவர்களின் தரநிலை சோதிக்கப்படும். முதலாண்டில் ஆங்கிலத்தில் பலவீனமாக அல்லது தேர்ச்சிபெறாத மாணவர்களுக்கு அல்லது ஆங்கிலம் அல்லாத உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து வந்த மாணவர்களுக்கு மொழிப்பாடம் போதிக்கப்படும். ஆங்கிலத்தில் பலவீனமாக இருக்கும் மாணவர்களுக்கு, இந்த வகுப்பு இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது. தொடக்கக் கல்லூரிகள் இரண்டு ஆண்டுப் படிப்புக்காக ஒதுக்கப்பட்டது. இணை வளாகத் திட்டத்தின் (Joint Campus Program - JCP) விளைவாக இந்த மாணவர்களை ஒரு பொதுப் பல்கலைக்கழகத் தேர்வு முறைக்குத் தயார்ப்படுத்துவது இதன் நோக்கமாக இருந்தது.

நன்யாங் பல்கலைக்கழக மாணவர்கள், சிங்கப்பூர்ப் பல்கலைகழக மாணவர்களுடன் இணைந்து புக்கிட்தீமா வளாகத்தில் பாடம் படித்து ஒரே தேர்வை எழுதுவர். மேலே வரையப்பட்ட முக்கியமான இந்த அமைப்புநிலை மாற்றங்கள், இருமொழிக் கொள்கையையும் அதன் நடைமுறைப்படுத்துதலையும் இன்னும் சீராக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட கடப்பாட்டையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

இவைபோன்ற வெவ்வேறு மொழிக்கொள்கைகள், நடைமுறைப்படுத்து-தலுக்கான உத்திகள் ஆகிய அனைத்தும் வெளிப்படையாக கோ அறிக்கையில் விவரிக்கப்பட்டன. பிரதமர் மாணவரிடையே இருமொழிச் சாதனை முழுமையான-தல்ல என்றும் கிட்டத்தட்ட 20 விழுக்காட்டினர் மட்டுமே இருமொழித் தேர்ச்சி பெற்றதைச் சுட்டினார். பொதுவாக ஆங்கிலத்தின் தரம் குறைந்தது என்பதும் அதில் அடங்கும்.

கோ அறிக்கைப்படி, சுமார் 60 விழுக்காட்டு மாணவர்கள் குறைந்தபட்ச தேர்ச்சியை ஒரு மொழியில் அல்லது இரண்டு மொழியில் பெறத் தவறினர். பள்ளியைவிட்டுச் சென்ற பிறகு அநேகமாகப் பின்னடைவு ஏற்பட்டது. ஆங்கிலம், ஆங்கிலவழிப் பள்ளிகள் ஆகிய இரண்டிலும் ஆங்கிலத்தின் தரம் குறைந்ததும் அடங்கும். ஆனால், இருமொழிக்கொள்கையை விடாமுயற்சியோடு தொடர்வதைத் தவிர சிங்கப்பூருக்கு வேறுவழி இல்லை என்று அரசு கருதியது. இருந்தபோதிலும், அதிகமான மாணவர்கள் பள்ளி மொழிகளைக் கையாள்வதில் எதிர்நோக்கும் தடையை நீக்கவில்லை. 85 விழுக்காடு மாணவர்களுக்கு வீட்டின் மொழிகள், பள்ளியின் மொழிகள் அல்ல என்பது அறிக்கை குறிப்பிட்டது என்கிறார் கோபிநாதன்.

பெரும்பாலான மாணவர்களின் குறைந்த மொழி கைவரப்பெறல் நிலையை ஏற்றுக்கொள்வதும் பள்ளி ஆண்டுகளை அதிகரித்தலும் மொழி கைவரப்பெறலுக்கு நன்மையாக அமைந்தபோதும், அப்போதைய முயற்சிகள் பள்ளி அமைப்பில் பெரிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி ஒன்றிணைந்த பள்ளி அமைப்பின் வளர்ச்சியைப் பாதித்தன.

## 5. புதிய முயற்சிகள்

இரண்டாம் மொழி கற்பித்தலின் ஒரு முக்கிய உத்தி எனில், 1972இலிருந்து மொழியில் உறவாடும் நேரம் அதிகரிக்கப்பட்டதுதான். இதனால், இரண்டாம் மொழிக்கான பாடத்திட்ட நேரமும் அதிகரிக்கப்பட்டது. இங்கு இரண்டாம் மொழித் திறமையை மேம்படுத்தும் வகையில் மொழி உறவாடும் நேர அதிகரிப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மீண்டும் மீண்டும் ஆசிரியர்களுக்கு வலியுறுத்தப்-பட்டது. உறவாடும் மொழி கற்றலில் பிறக் கூறுகளுக்கு உரிய கவனம் செலுத்தப்படாவிடில், நேரத்தை அதிகரிப்பது என்ற ஒன்று மட்டும் திறன்-மேம்பாட்டை அதிகரிக்காது.

ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டங்களின்வழி (Immersion) மொழி கற்கும் முறை எனும்போது மொழியில் உறவாடும் நேரத்தை அதிகரித்து மொழிக்காகத் தரப்படும் பயிற்சியை இன்னும் ஒரு படி முன்னேற்றுகிறது. மொழியின் புழக்கத்தை அதிகரிக்கும் ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டம் பள்ளிகளில் இடம்பெற்றது. இருப்பினும், மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் இந்த உத்தியின் விளைவினால், இரண்டாம் மொழியில் மிகக் குறைந்த அளவிலான முன்னேற்றத்தையே பெறமுடிந்ததாகக் காட்டின. "சீன, ஆங்கிலவழி உயர்நிலைப்பள்ளிகள் இரண்டாம் மொழித் தேர்ச்சியில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. நடப்பிலுள்ள பள்ளி இணைப்பு முறை இரண்டாம் மொழி தேர்ச்சியை மேம்படுத்தவில்லை," என்று டான் (Tan) கூறுவதை நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

இணை வளாகத்திட்டம் (Joint Campus Program - JCP) பற்றிய ஆரம்பக்-கட்டக் கருத்தும் இதனையே காட்டுகிறது. இந்தச் சான்றின்மேல் வைக்கப்பட-வேண்டிய ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டக் கொள்கைக்கான பிரதமரின் காரணங்கள் பின்வருமாறு:

இந்த ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டத்தின் வெற்றிக்குப் பிரதமர் திரு லீ குவான் இயூ மூன்று குழுவினர்களை உதாரணம் கூறுகிறார். அறிவியல் பயிற்சி வகுப்புக்காக வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட சீனமொழிவழிப் படித்த கல்விமான்கள், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சீனவழிக்கல்வி பயின்ற அறிவியல் மாணவர்கள், சிங்கப்பூர் ராணுவப்படை அதிகாரிகள் ஆகிய மூன்று குழுக்களை அவர் எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். ஆனால், இதுபோன்ற சான்றுகள் கீழ் உயர்நிலைவகுப்புகளில் ஆழ்நிலைக் கற்றலுக்கான வளமூட்டும் திட்டக் கொள்கையை அறிமுகப்படுத்துவற்குப் போதுமானதா என்பது சந்தேகத்திற்குரியது.

உளமொழியியல், சமூகமொழியியல் கூறுகள் ஆகியன மொழி கைவரப்-பெறலுக்குத் தீர்வுகள் காண முயலும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டும். நடைமுறைப்படுத்துதல் குறித்த உத்திகளும் கருத்திற்கொள்ளமப்பட வேண்டும். அதற்குமேல் சிங்கையில் மொழி கற்கும் சூழலை, நிலைமையைப்பற்றிப் போதுமான ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். அப்போதைய சமயத்தில் உயர்நிலைப்பள்ளிகளில்

நடைமுறைக்கு வந்துள்ள உத்தி மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்று கோபிநாதன் கருதுகிறார்.

சமத்துவத்தின் அடிப்படையில் கல்வியமைப்புக்கான அடிப்படைகளை 1959இல் அனைத்துக் கட்சி அறிக்கை வரையறுத்தது. இந்த அறிக்கையின் இலக்கைச் செயல்படுத்துவதில் அல்லது குறிக்கோளை அடைவதில் மொழிக்கொள்கைகள் மிகவும் முக்கியமானவை என்று கருதப்பட்டன. கல்வி அமைச்சு அதன் இலக்கைச் செயல்படுத்திட இடைப்பட்ட ஆண்டுகளில் (Intervening years) செம்மையான, பாரபட்சமற்ற மொழிக் கொள்கையை உருவாக்குவதில் முயற்சிகள் மேற்கொண்டதாகக் கூறுகிறார், கோபிநாதன். மொழித்திட்டத்தை உருவாக்கும்போது மொழிபற்றிய குறிக்கோள்கள் முக்கியமானவையாக இருந்தாலும், எந்த வகையிலும் மாற்றாமலும் நிறுத்தாமலும் தொடர்ந்து இருமொழி இலக்கைத் தொடர்வதால், முன்னைய முக்கியக் குறிக்கோள்களுக்கு இணையாக மற்றப் பிற முக்கியக் கொள்கைகளைப் பற்றிய சிந்தனைகள் புறக்கணிக்கப்படுமா என்னும் கேள்வி எழுமே என்று வினவுகிறார், கோபிநாதன். புதிய தலைமைத்துவத்தின்கீழ் இந்த அடிப்படைச் சிக்கல்களுக்கு அதிகக் கவனம் கிடைக்கும் என்று நம்புவதோடு, பாடத்திட்டத்தின் விளைவுகள், தாக்கம், தேர்வு நோக்கிய சிந்தனைகள் ஆகியவை பற்றியும் ஆராய்ச்சி தேவை என்று அவர் வலியுறுத்துகிறார். இக்கருத்து என்றும் சிந்தனைக்கு எடுத்துக்-கொள்ளப்படவேண்டும் என்பதை நாம் மறுக்க முடியாது.

இந்தச் சிந்தனை குறித்து இக்கட்டுரையின் பிற்பகுதியில் விவாதிக்கப்பட்டுள்ளது. 1980இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கு மொழிப்பங்கீடு, பயன்பாடு ஆகியன பற்றிய பயனுள்ள தகவல்கள் தொகுக்கப்-பட்டன. இந்தத் தரவுகள் அடையக்கூடிய திட்டங்களை உருவாக்கச் சரியான அடித்தளத்தைத் தரும் என்றும் குறிப்பிட்டுள்ளார், கோபிநாதன். மேலும், கற்பித்தலியல் எதிர்ப்பார்ப்புகளை மதிக்கும் நியாயமான திட்டங்களும் சீர்திருத்தம் செய்யப்பட்ட கல்வி அமைப்பின் முத்திரையாக விளங்கும் என்றும் கோபிநாதன் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

அவரது நம்பிக்கையின் அடிப்படையில் படிப்படியாக 1980களுக்குப் பின்னர்ச் சிங்கப்பூரில், கல்வித்துறையில் இருமொழிக்கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நான்கின மக்கள் வாழும் நம் நாட்டில் பண்பாடு, பாரம்பரியம்,

விழுமியங்கள், அறநெறிப் பண்புகள், வரலாற்று வேர்கள் ஆகியவற்றை மதித்து இருமொழிக்கொள்கையில் தாய்மொழிக்கல்விக்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டது. இத்தகைய தொலைநோக்குச் சிந்தனையால் சிங்கப்பூர் அடைந்த முன்னேற்றங்கள் பல. இனி, தற்காலப் பார்வைகளையும் மொழிக்கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்ணோட்டமிடுவோம்.

## 6. தற்காலப் பார்வைகள்

### 6.1 மொழிக்கல்வியின் நிலைத்தன்மை

- தென்கிழக்காசியா நாடுகளுள் சிங்கப்பூரில்தான் தமிழ் ஓர் அதிகாரத்துவ மொழியாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் இருமொழிக்கொள்கை சிங்கப்பூரில் ஆங்கிலத்துடன் தாய்மொழிகளையும் வாழவைத்து வருகிறது. தமிழைப் பொறுத்தவரை "இருமொழிக்கொள்கை இந்நாட்டில் தமிழை வாழவைக்கும் ஆணிவேர்" என்கிறார் திண்ணப்பன் (1993, ப. 8). சிங்கப்பூரில் தமிழ்மொழி தற்போது முதல், இரண்டாம் தலைமுறையினரிடம் ஓரளவுக்குத் தொடர்புமொழியாக இருந்து வருகிறது. மூன்றாம் நான்காம் தலைமுறையினரைப் பொறுத்தவரை பெரும்பாலான பள்ளிகளில் மட்டும் பயன்படும் தேர்வு மொழியாக அமைந்துள்ளது (சீதாலட்சுமி, 2009). இந்நிலையில் தமிழ்மொழிப் புழக்கத்தைப் பள்ளிகளில் அதிகரிக்க 1980முதல் 2015வரை கல்வி அமைச்சு படிப்படியான மாற்றங்களைச் செய்து மொழிக்கொள்கைகளின் அடிப்படையில் பாடத்திட்டத்தை வகுத்துச் செம்மைப்படுத்திப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வந்துள்ளது.
- ஒவ்வொரு முறையும் பாடத்திட்டத்தை மதிப்பீடு செய்து ஆய்வுகள் அடிப்படையில் மறுஆய்வுக் குழுக்களிடம் ஆலோசனை பெற்றுத் தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாகத் தமிழ் ஆர்வலர்கள், மொழியியல் அறிஞர்கள், சமூக நல ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள் என்று அறிவுசார் வட்டங்களில் கலந்துரையாடி, அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் முன்னேற்றப் பாதையில் சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி பயணம்-செய்துகொண்டிருக்கிறது.
- கடந்த காலத்தில் மொழிக்கொள்கைகளை மறுபரிசீலனை செய்யும்போது, கற்பித்தலியலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஆய்வுவழிச் சான்று,

பரிசோதனை, பயிற்சி மற்றும் பாரபட்சமற்ற போதனை போன்றவை கொள்கை வகுப்பதிலோ செயல்படுத்துவதிலோ முக்கியக் கூறுகளாகத் திகழவில்லை. கற்பித்தலியலுக்குக் கொடுக்கவேண்டிய கவனம் கிடைக்க-வில்லை என்று வரலாற்றுச்சான்றுகள் கூறுகின்றன (கோபிநாதன், 2014, ப. 94).

## 6.2 இருமொழிக் கொள்கையினால் கிடைத்த பயன்கள்

சிங்கப்பூரில் இருமொழிக் கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தி ஆங்கிலத்தையும் தாய்மொழியையும் சிறப்பாகக் கற்றுப் பயன்படுத்தும் வகையில் மாணவர்களை உருவாக்கியிருப்பது இக்கொள்கையினால் கிடைத்த பயன்களுள் ஒன்றாகும். இத்தகைய கருத்துப்பரிமாற்றத்திறன் வாழ்க்கைக்கும் பணியிடத்துக்கும் தேவைப்படும் திறனாகும். மேலும், இத்திறன் சிங்கப்பூரின் போட்டித்திறனை மேம்படுத்துவதற்குப் பயன்படுகிறது. இளந்தலைமுறையினர் தத்தம் பண்பாடு, மரபு, இலக்கியம், வரலாறு போன்றவற்றைப் புரிந்துகொண்டு போற்றுவதன் வாயிலாக இருமொழிக்கொள்கையின் பங்களிப்பை அனுமானிக்க முடியும். மேலும், அவர்கள் தங்கள் தனித்தன்மையை வளர்த்துக்கொள்ளவும் இத்திறன் பயன்படுகிறது.

## 6.3 தமிழ்க் கல்வியின் இலக்கு

'சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குவதற்குத் தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும்' என்பது தமிழ்க் கல்வியின் இலக்கு. (கல்வி அமைச்சு, 2015, ப. 11). இந்த இலக்கை நிறைவேற்றும் வகையில் பாடத்திட்டம் கற்பித்தலியல், மதிப்பீடு ஆகிய கூறுகள் மேம்பட்டு வருகின்றன.

## 6.4 தமிழ் கற்றல், கற்பித்தல் நோக்கங்கள்

மாணவர்கள் தம் மனத்தில் எழும் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறச் செய்தல் வேண்டும். அதற்காகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய

அடிப்படை மொழித்திறன்களோடு 21ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களும் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன (கல்வி அமைச்சு, 2015, ப. 11).

### 6.5 விரும்பத்தக்க கற்றல் விளைவுகள்

மாணவர் கல்விப் பயணத்தின்போது ஒவ்வொரு நிலையிலும் அவர் பெறவேண்டிய மொழித்திறன்களையும் நற்பண்புகளையும் கல்வியின் விரும்பத்தக்க கற்றல் விளைவுகள் என்னும் பகுதி பட்டியலிட்டுக் காட்டுகிறது. சிங்கப்பூர்க் கல்விமுறையின்கீழ் பயிலும் ஒவ்வொரு மாணவரும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளை அடைந்திருக்க வேண்டும் (கல்வி அமைச்சு 2015, ப. 13).

### 6.6 நடைமுறையில் உள்ள தமிழ்க் கல்வி முறை

கடந்த 2005, 2010 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மறுஆய்வுகளின் பரிந்துரைகளை வழிகாட்டியாகக்கொண்டு தொடக்கநிலைப் பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. நடப்பிலுள்ள பாடத்திட்டத்தின் பயன்மிகு கூறுகளைத் தக்கவைத்துக்கொண்டு, மொழி கற்றல் கற்பித்தலை வலுப்படுத்தும் சில முக்கியக் கூறுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, மொழித்திறன்களின் வளர்ச்சியோடு நற்பண்புகளுக்கு அடித்தளமாக விளங்கும் விழுமியங்களிலும் தமிழ்மொழிப் பாடத்திட்டம் அதிகக் கவனம் செலுத்துகிறது (கல்வி அமைச்சு, 2015, ப. 17).

### 6.7 நடைமுறைச் சிக்கல்கள்

உலகில் உள்ள சுமார் 5000 மொழிகளுள் 50 விழுக்காடு வழக்கொழிந்துபோகும் அபாயநிலையில் இருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த நூற்றாண்டின் கடைசியில் சுமார் 500 மொழிகளே எஞ்சி இருக்கக்கூடும் (Krauss, 1992). இந்தத் தலைமுறையின் குழந்தைகள் கற்காமல் இருப்பதாலோ அடுத்த தலைமுறையின் குழந்தைகள் கற்காமல் போவதாலோ மொழிகள் இறக்கும்நிலையில் உள்ளன. படையெடுப்பாலோ, நோயாலோ ஒரு மொழிச் சமூகம் அழிவதைவிட, பலம் வாய்ந்த மற்றொரு மொழியோடு ஐக்கியமாகி அழிவதே அதிகம் (அண்ணாமலை, 1995, ப. 2).

*'...இரு மொழியியல்......இனங்களுக்கிடையே தொடர்பைச் சாத்தியமாக்கித் தேசிய ஒற்றுமையை வலுவாக்கிறது; அது பல்லினப் பண்பாட்டுக் கொள்கையைத்*

*தொடரச் செய்கிறது ...ஒவ்வொரு மாணவரும் இருமொழித் தேர்ச்சியை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு தன் முழுத் திறமையைப் பயன்படுத்தி அதை அடைய முயல வேண்டும்'* (கோபிநாதன். 2014; ப. 95).

ஒரு சமூகம் அதன் வாழ்க்கைப் படிப்பினைகளை அடுத்தடுத்து வரும் தலைமுறையினர்க்கு அறிவிக்கும் ஒரு கருவூலமாகக் கல்வி அமைகிறது. இந்தப் படிப்பினைகளைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளப் பயன்படும் ஓர் ஊடகம்தான் மொழி. பல பரிணாம வளர்ச்சியைக் கண்டு வரும் இம்மொழியானது, ஒரு சமூகத்தில் இடம்பெறும் மாற்றங்களால், அதாவது, அது புழங்கப்படும் நாட்டின் அரசியல் தாக்கங்கள், சமூகப் போக்குகள், தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், உற்பத்தித்திறன், தொழில் தேர்ச்சி போன்றவற்றின் தாக்கத்திற்குட்படுகிறது. உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைச் சித்திரவடிவில் காட்சிப்படுத்திய காலம் போய், இப்போது எழுத்துக்களால் அமைந்த சொற்களால் வெளிப்படுத்தும் காலமாக மாறியுள்ளது. “மொழியியல் அறிஞர் ஃபிஷ்மென் தாய்மொழியை ஒருவர் பேசாமல் அந்நிய மொழியில் தம் வாழ்க்கைத் தொடர்புகளை நிகழ்த்தும்போது தாய்மொழியைக் கைவிட்டவராகிறார்” என்று இராமையா (1995) குறிப்பிட்டுள்ளார். இது இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைப் பொறுத்தவரையில் உண்மையாகிவிட்டது (சீதாலட்சுமி, 2001, ப. 6).

“தாய்மொழிக் கல்வியை வழங்குவதிலும் தொடர்ந்து மேம்படுத்துவதிலும் அரசுக்கு இருந்த அடிப்படை நோக்கம் இளையர்களிடையே அவரவர் கலாசாரம், பண்பாடு உயரிய கோட்பாடு, மொழி ஆகியவை அழிந்து போய்விடாமல் காப்பதேயாகும்” (தங்கவேலு, 1977, ப. 63). மாறி வரும் சமூகத்தில் பல மாணவர்களிடையே தாய்மொழியில் இந்தக் கருத்துப்பரிமாற்ற உத்திமுறை சுமூகமாக நடைபெறாததற்குப் பல சிக்கல்கள் காரணங்களாக உள்ளன. இத்தகையதொரு சூழ்நிலையைச் சிங்கப்பூரர்களும் எதிர்கொள்ளும் தன்மை காணப்படுகிறது. இந்த நடைமுறைச் சிக்கல்கள் பற்றிய சிந்தனைகளும் அச்சிக்கல்களைக் களைய மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியக் கூறுகளும் இந்தக் கட்டுரையின் மூலம் ஆராயப்படுகின்றன. தற்போதைய மொழிப்புலமையும் மொழிப்பயன்பாடும் எவ்வாறானதொரு தோற்றத்தைப் பள்ளி, சமூகம் மற்றும் தேசிய ரீதியில் பிரதிபலிக்கின்றன என்பதும் ஆராயப்படுகின்றன.

## 7. தொடக்கநிலைப் பள்ளித் தமிழாசிரியர்களுடன் குவிநோக்குக் குழுக் கலந்துரையாடல்

மொழி கற்பித்தல் இளம் பிராயத்திலேயே இடம்பெற்றால் அது அவர்களின் மனத்தில் எளிதில் நிலைத்து இருக்கும். எனவே, தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியர்களின் பணி இங்கே இன்றியமையாதது. இந்த முக்கியத்துவத்தை அறிந்து, தொடக்கநிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுடன் குவிநோக்குக் குழுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். அப்போது தமிழ் பயிலும் மாணவர்களின் நிலைப்பாடும் அவர்களுள் சிலர் தமிழில் பின்தங்கி இருப்பதற்கான காரணங்களும் கருத்துரைக்கப்பட்டன. அதோடு, முன்னேற்ற நிலையினை எவ்வாறு அடைய முடியும் என்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

சொல்வளப் பற்றாக்குறை, பேச்சில் சரளமின்மை, இலக்கண அறிவில் தெளிவின்மை, பண்பாட்டுக் கூறுகள்பற்றிய மேலோட்டமான புரிந்துணர்வு, தமிழர் கலைகளில் நேரடியான அனுபவமின்மை, மாணவர்களின் நாட்டங்கள் தமிழை விடுத்து மற்றவற்றை நாடியிருக்கும் நிலை, பல்லூடகத் தொடர்புச் சாதனங்களில் தமிழின் ஊடுருவல் அதிகம் இல்லாமை போன்றவை முக்கியக் காரணிகளாக அவர்களால் இனங்காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு காரணத்தையும் நான்கு முக்கியக் கூறுகளாக வகைப்படுத்த முடியும்.

1. மொழி வளர்ச்சி - சொல்வளப் பற்றாக்குறை (சீதாலட்சுமி, 2009), பேச்சில் சரளமின்மை, இலக்கண அறிவில் தெளிவின்மை, தடையில்லா வாசிப்பு, எழுத்துப்பிழையின்றி எழுதுதல் (இராமையா, 2000).

2. தமிழர் பண்பாட்டைப் பற்றிய அறிவுப் பெருக்கமும் அனுபவமும் - பண்பாட்டுக் கூறுகளின் மேலோட்டமான புரிந்துணர்வு, தமிழர் கலைகளில் நேரடியான அனுபவமின்மை.

3. நவீன தொழில்நுட்பச் சாதனங்களில் தமிழின் ஊடுருவல் – திறன்பேசிக் கருவிகளில் தமிழின் பயன்பாட்டை இன்னும் அதிகரித்தல்

4. மாணவர்களிடையே தமிழ்ப்பற்று குறைந்துவரும் தன்மை – தமிழ்க்கல்வி தேர்வையும் கடந்து ஒருவரைப் பண்படுத்தும் ஓர் ஊடகமாக அமைகிறது என்ற புரிந்துணர்வை வளர்க்கும் அவசியம் உள்ளது.

**வரைபடம் 1 – நடைமுறைச் சிக்கல்கள்**

| | |
|---|---|
| **மொழி வளர்ச்சி** | • சொல்வளப் பற்றாக்குறை<br>• பேச்சில் சரளமின்மை<br>• மாணவர்களிடையே இலக்கண அறிவுத் தெளிவின்மை |
| **தமிழர் பண்பாட்டைப் பற்றிய அறிவுப் பெருக்கமும் அனுபவமும்** | • பண்பாட்டுக் கூறுகளின் மேலோட்டமான புரிந்துணர்வு<br>• தமிழர் கலைகளில் நேரடியான அனுபவமின்மை |
| **தொழில்நுட்பத்தில் தமிழின் ஊடுருவல்** | • மேசைக் கணினி முதல் கையடக்க மின்கருவிகள் வரை தமிழில் குறைவான தெரிவுத்தன்மையே உள்ளது. |
| **தமிழ்ப்பற்று அதிகரிப்பின் தேவை** | • தமிழ்க்கல்வி, தேர்வையும் கடந்து ஒருவரைப் பண்படுத்தும் ஓர் ஊடகமாக அமைய வல்லது எனும் புரிந்துணர்வை வளர்க்கும் அவசியம் உள்ளது. |

## 8. விளைதிறன்மிக்க கல்விச் சூழல்

இன்றைய கல்விச் செயல்பாட்டில் பயன்மிகு விளைவுகளை அடைவதற்கு ஊன்றுகோலாக அமைவது முன்னேற்றமடைந்து கொண்டுவரும் ஓர் ஆரோக்கிய-மான கல்விச் சமுதாயமாகும். ஒரு நல்லாசிரியர், நல்ல மாணாக்கர் மற்றும் ‘சிந்திக்கும் பள்ளி, கற்கும் நாடு’ என்பன யாவும் தற்செயலாக வாய்த்தவை அல்ல. மாறாக ஒவ்வொரு கல்வியாளரின் கடின உழைப்பும் முயற்சியும் அவை ஒவ்வொன்றுக்கும் அடித்தளமாக அமைகிறது. இப்படிப்பட்ட ஒரு கல்விச் சூழலை ஏற்படுத்துவதன் வாயிலாகத் தமிழ் “வாழும் மொழி’ என்னும் இலக்கை அடைய முடியும்.

பொதுவாக, கல்வி என்பது அறிவை மட்டும் வளர்க்கும் ஒரு செயல்பாடல்ல என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகிவிட்டது. மாணவரை மையமாகக்கொண்ட கற்பித்தலில் கற்றலைச் சாத்தியப்படுத்த வேண்டும் என்றால் கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்குதல் நன்று.

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பான மனப்போக்குகளைச் சரியாக வழிநடத்தும் வழிகாட்டிகளாவர். ஆகவே, மாணவர்கள் எதிர்நோக்கும் இந்த நடைமுறைச் சிக்கல்களைப் போக்கும் பொறுப்பு ஆசிரியர்களின் மிக முக்கியப் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்துகளின் அடிப்படையில் தேசிய அளவில் இருமொழிக் கொள்கையின் முக்கியத்துவத்தையும் அதன் நடைமுறைப் பண்புகளையும் பின்வரும் பகுதிகளில் விளக்க முற்பட்டுள்ளோம். தரவுச் சேகரிப்பிற்குப் பயனாக இருமொழிக் கொள்கையினைப் பின்பற்றும் ஏனைய நாடுகளின் கல்விமுறை மாதிரிகளையும் தொகுத்து ஆராய முற்பட்டுள்ளோம்.

**9. ஆய்வு ரீதியான கண்ணோட்டமும் எதிர்காலப் பரிந்துரைகளும்**

*‘சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குதல்’* என்பது கல்வி அமைச்சின் இலக்குகளுள் ஒன்றாகும்.

2010 தாய்மொழிகள் மறுஆய்வுக்குழு அறிக்கையின் பகுதி ஒன்றை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். *‘இருமொழிக் கல்விக்கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலமும் தாய்மொழிகளும் தொடர்ந்து சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் கூறுகளாக இருந்து வருகின்றன. உலகமயமாகி வரும் சூழலில் உலக நாடுகளோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளப் பொதுமொழியான ஆங்கிலம் உதவுகிறது. பொருளாதார ரீதியில் அனைத்துலக வணிகத்திற்கு ஏதுவான சூழலை ஆங்கிலம் உருவாக்கியுள்ளது. ஒவ்வோர் இனத்தையும் அவரவரது பாரம்பரியத்தோடும் ஆசியப் பண்பாட்டு மூலங்களோடும் இணைப்பதற்குத் தாய்மொழிக் கற்றல் ஒரு பாலமாக அமைந்துள்ளது''* (கல்வி அமைச்சு, 2011, ப. 14).

*மேலும் சீனா, இந்தியா, ஆகிய நாடுகளின் வளர்ச்சியும் ஆசியானின் ஒருங்கிணைப்பும் தாய்மொழிகளைக் கற்பதற்கான தேவையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.’* இந்தப் புரிந்துணர்வோடு நாம் நடைமுறையிலுள்ள தமிழ்க் கல்விமுறையை ஆராய்ந்தோம். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பாடக்கலைத்-திட்டமும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளை அடையும் நோக்கில் அமைந்துள்ளது. சிங்கப்பூர்க் கல்விமுறையில் கற்கும் ஒவ்வொருவரும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

## 10. கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்

தொடக்கநிலைக் கல்வியை முடிக்கும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற விரும்பத்தக்க விளைவுகளாகப் பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

- எது சரி, எது தவறு என்று வேறுபடுத்தி அறிதல்
- தம் ஆற்றல்களையும் அதை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் அறிதல்
- ஒத்துழைத்தல், பகிர்ந்துகொள்ளுதல், பிறர்மீது பரிவுகொள்ளுதல்
- எதையும் துருவி அறியும் ஆர்வத்தோடு இருத்தல்
- சுயமாகச் சிந்தித்துத் தம் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்துதல்
- செய்யும் செயலில் பெருமிதம் கொள்ளுதல்
- நல்ல பழக்கவழக்கங்களையும் கலைகள் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றிருத்தல்
- சிங்கப்பூரைப்பற்றி அறிவதோடு அதனை நேசித்தல்

(கல்வி அமைச்சு, 2015, ப. 5)

*‘உலகளாவிய தன்மையும் உலக நாடுகளிடையே நெருக்கமான உறவும் வளர்ந்து வருகின்றன சூழலில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பதும் பிறரது பண்பாடுகளைப் புரிந்துகொள்வதும் எத்துணை அவசியம் என்பதை உலக நாடுகள் உணரத் தொடங்கியிருக்கின்றன. அதனால் இன்று பல்வேறு நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பதை ஊக்குவித்து வருகின்றன. சிங்கப்பூர் 1966ஆம் ஆண்டிலிருந்து இருமொழிக் கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதாவது, ஆங்கிலத்தையும் தாய்மொழியையும் கற்பதே இந்த இருமொழிக் கொள்கையாகும்’* என்று தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது (கல்வி அமைச்சு, 2015, ப. 6).

இத்தகைய கொள்கைகளின் அடிப்படையில் நம் கல்விச் செயல்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. தொலைநோக்குப் பார்வையிலான இக்கொள்கைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட பணிச்சட்டங்கள் இங்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டன. தமிழை வாழும் மொழியாக்கும் நோக்கில் மாணவரை மையமாகக்கொண்டு அடிப்படை மொழித்திறன்கள், மாணவரைப் பண்புநிலைகளில் செம்மைப்படுத்தப் பண்பாட்டு விழுமியங்கள், சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் ஆகியவற்றைக் கொண்டு

நமது தமிழ்மொழிப் (கல்வி அமைச்சு, 2015) பாடக்கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடக்கலைத்திட்டம் தற்போதைய கல்விச்சூழலுக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது அதன் தனிச்சிறப்பாகும். பள்ளிகளில் கற்பிக்கும் தமாழாசிரியர்களின் பார்வையில் மேலும் சில கூறுகளை இணைத்துக்கொண்டு பாடக்கலைத்திட்டத்திற்கு எப்படி மெருகூட்டலாம் என்று ஆராய்கிறது இக்கட்டுரை.

## 11. குவிநோக்குக் குழுவின் பரிந்துரைகள்

*பாடத்தின் விளைவுகளையும் ஆராய்வது அவசியம். …பாடங்களின் கருத்தைக் கற்றுக்கொடுப்பதைவிட ஆசிரியர்கள் சொல்வளம், சொற்றொடர் அமைத்தல், மொழிப் பயன்பாடு, மற்றும் பாடங்களில் பயன்படுத்தப்படும் சொற்களின் பொருள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்’* (கோபிநாதன், 2014, ப. 117).

காலத்தின் கட்டாயத்தினால் நம் சமூகத்திலும் மொழியிலும் பல மாற்றங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இந்த மாற்றங்களுக்கேற்ப நாம் நம் மொழி கற்றல் கற்பித்தலைத் தொடர்ந்து மறுபார்வையிட வேண்டும் என்ற சிந்தனையை எண்பதுகளிலேயே கோபிநாதன் வித்திட்டுவிட்டார். உலகளாவிய ரீதியில் ஏற்படும் சிந்தனை மாற்றங்களையும் அறிவுத்துறையில் ஏற்படும் புதிய வளர்ச்சிகளையும் தொழில்நுட்பப் பாய்ச்சல்களையும் கல்வித்துறையில் ஏற்படும் புதிய முன்னேற்றங்களையும் அறிந்துகொண்டு அவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து நம் கல்விச் செயல்பாடுகளைப் புதுப்பித்துக் கொண்டே கல்வி அமைச்சு செயல்பட்டுவருகிறது. உயிர்ப்புமிகு கல்வித்திட்டத்தின் உதவியுடன் துடிப்புமிகு ஆசிரியர்களாக நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்ளும் கடப்பாடு அனைவருக்கும் உண்டு. விழிப்புணர்வுக்கும் உறவாடலுக்கும் உரிய சிறந்த தளமாக அமைந்த குவிநோக்குக் குழுக் கலந்துரையாடல் பல புதிய சிந்தனைகளையும் மாற்றுப் பார்வைகளையும் வழங்கியது. ஆக்ககரமான அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் பல புதிய திட்டங்களும் சிந்தனைகளும் பரிந்துரைக்கப்பட்டன.

அவை கீழ்வரும் பட்டியலில் விளக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சற்று விளக்கமாக ஆராய்வோம்.

## 12. பரிந்துரைகளின் காரணமும் விளக்கமும்

‘சீனா, இந்தியா, ஹாங்காங், தைவான், ஆகிய நாடுகளில் சிங்கப்பூர் சந்திக்கின்ற மொழிச்சவால்களைப் போன்று எதிர்கொள்வதில்லை (கல்வி அமைச்சு 2011, ப. 17). இருப்பினும் இந்நாடுகள் மொழி கற்றலை அர்த்தமுடையதாக்க ஏதுவான சூழலையும் கற்பித்தலியலிலும் தொழில்-நுட்பத்திலும் புதுமையையும் வாய்மொழி, எழுத்து ஆகியவற்றின் வாயிலாகக் கருத்துப்பரிமாற்றத்திற்கு முக்கியத்துவத்தையும் அளித்து வருகின்றன. ஒவ்வொரு மாணவரும் தம் திறனுக்கேற்பத் தாய்மொழியில் சிறந்து விளங்க வழிவகுக்க வேண்டும் என்பதே சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் குறிக்கோளாக இருந்து வருகிறது.

### *மொழி வளர்ச்சி*

ஒரு மொழி அதன் இறப்பைத் (Language Death) தவிர்க்க வேண்டுமானால் மக்கள் அதைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் (சீதாலட்சுமி, 2009, ப. 33) என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்று.

தமிழ் நவீன மொழியாக வேண்டுமானால், நவீன கால வாழ்க்கை மதிப்பீடுகளை இது பிரதிபலிக்கவேண்டும். தேவைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொள்வதும் மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான ஒன்று. தொழில்நுட்பப் பயன்பாடு, சிறப்புத் துறையின் பெருக்கம், புதிய சமூகத்தின் அம்சங்கள் போன்றவை மொழியில் பிரதிபலிக்கவேண்டும். உலகம் வளரும் வேகத்திற்கு ஈடுகொடுத்து மொழியும் வளரவேண்டும். இந்த வளர்ச்சிக்குப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் உறுதுணையாக நிற்கவேண்டும். அதற்கு மாணவர்களின் ஈடுபாடு இன்றியமையாதது. அவர்களை ஆழமாக ஈடுபடுத்த முதலில் அவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கவேண்டும். மாணவர்களின் நாட்டத்தை மொழியின்பால் ஈர்க்கவேண்டும். அவர்களின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கும் திசைதிருப்பிகள் நிறையவே உள்ளன. எடுத்துக்காட்டிற்கு, தொலைதொடர்புச் சாதனங்கள், திறன்பேசியில் உள்ள விளையாட்டு அம்சங்கள், சமூகத் தொடர்புத்-தளங்கள் போன்றவை இக்கால இளையர்களை அதிகம் ஈர்க்கக்கூடியவையாக உள்ளன. இதன் விளைவாக மாணவர்கள் தமிழ் வாசிப்பில் அதிக நாட்டம் செலுத்தவதில்லை. வாசித்தல் என்பது கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்குரிய அடிப்படைத் திறனாகும்.

தற்காலத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிந்துகொள்ளவும் வாசிப்பு மிக முக்கியமான ஒரு கருவியாகும். இந்த அடிப்படைத் திறனை வளர்த்துவிட்டால், பிற மொழிசார் பிரச்சினைகளான எழுத்துப்பிழைகள், சரளமற்ற பேச்சு, இலக்கணப்பிழைகள் போன்றவற்றைத் தவிர்க்கலாம். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாசகர் வட்டத்தை அமைத்து நூல் திறனாய்வுகளைப் படைக்க ஊக்குவிக்கலாம். வாசிப்புத்திறன் மேம்படமேம்பட ஒருவரது வாதத்திறமையும் கூடும். சொல்வளம் பெருகப் பெருக, பேச்சில் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அடுத்தக்கட்ட நிலையாகப் புதிய சொற்கள் உருவாக்கத்திற்கு அவர்களை ஊக்குவிக்கலாம். தாமாகவே புதிய தொடர்கள், கலைச்சொற்கள் போன்றவற்றை மாணவர்களை உருவக்கிப் படைக்க ஊக்குவிக்கலாம். இது செவ்வனே நடைபெற மாணவர்களை அதிகம் வாசிக்குமாறு ஊக்குவிக்கவேண்டும். அவை நூல் வடிவத்தில்தான் இடம்பெற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காலத்தின் மாற்றங்களை அறிந்து மாணவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றவாறு இந்த வாசிப்புப் பயிற்சிகளைக் கையாளவேண்டும். மாணவர்கள் மின்னூல்களைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கலாம். பல சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மின்னிலக்க நூல்களாக உருவாக்கி மொழியைக் கைவரப் பெறச் செய்யலாம். மாணவர்கள் எங்குச் சென்றாலும் தம்மால் தமிழ் நூல்களைச் சுலபமாகப் பெற முடியும் என்ற நம்பிக்கையை அவர்களுக்குத் தர வேண்டும். கடந்த ஆண்டில், தமிழ் மின்மரபுடைமைக் குழுவின் முயற்சியில் மின்னாக்கம் செய்யப்பட்ட ஐம்பது ஆண்டுக்காலச் சிங்கப்பூர் தமிழ் இலக்கிய மின்னூல்களை மாணவர்கள் படிக்குமாறு ஊக்குவிக்கலாம் (http://eresources.nlb.gov.sg/printheritage/browse/Tamil_Digital_Heritage_Collection.aspx).

அடுத்து, மாணவர்கள் தமிழில் சரளமாகப் பேசாததற்கு முக்கியக் காரணம் தங்களுக்குத் தமிழில் பல தொடர்களைச் சரியாகச் சொல்லத் தெரியாததே. "மொழி என்பது கருத்துப்பரிமாற்றத்துக்குரிய ஒரு கருவி. கருத்துப்பரிமாற்றம் என்பது உணர்தல், உணர்த்தல் என்னும் இரு தண்டவாளங்களின் வழியாக இயங்குவது" (திண்ணப்பன், 1995, ப. 169). மொழிக்கூறுகளை நன்கறிந்து பிழையிலா இயல்பறிதலாகிய செம்மையும் தங்குதடையின்றிச் செல்லும் சரளத்தன்மையும் கருத்துப்பரிமாற்ற மேம்பாட்டிற்குரிய கட்டாயத் தேவைகளாகும். மரபுவழி அணுகுமுறை, பயன்பாட்டிலக்கண அணுகுமுறை, செயல்திறன் சார்ந்த

அணுகுமுறை ஆகியவற்றை வலியுறுத்தபவர்கள் சரளத்தன்மைக்கு முதலிடம் தருவர் (Van, 1975, Brumfit, 1981).

குறிப்பாக, ஒருமை-பன்மை வினைமுற்றுகளிலும், காலங்களிலும், மூவிடப் பெயர்களிலும் பல குழப்பங்களை மாணவர்கள் கொண்டுள்ளனர். இது அவர்கள் கற்றல் வழியாக மொழியைக் கைவரப்பெறவில்லை என்பதைக் காட்டுகிறது. மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணப் பயிற்சிகளைக் கட்டாயமாக அளிக்கவேண்டும் என்பது எங்களது பரிந்துரை. இப்பயிற்சிகள் பாடநூல்களும் பயிற்சிநூல்களும் அதிகமாக இடம்பெறவேண்டும். கல்வி அமைச்சு உருவாக்கும் பாடநூல்களும் பயிற்சிநூல்களும் பாடங்கள் நடத்தப்பட்ட பிறகு தம் முக்கியத்துவத்தை இழக்கின்றன. தேர்வுக்குத் தயார்செய்யும் மாணவர்களும், தமிழ்மொழியை விரும்பிப் பயிலும் மாணவர்களும், தமிழ்ப் பாடநூல்களை வகுப்பறைக்கு அப்பால் தொட்டுப் பார்ப்பது ஐயம்தான். மொழிப்பயன்பாட்டுக்கு அவசியமான எளிய இலக்கணப்பயிற்சிகள் பாடநூல்களில் தருவதால் அவற்றின் பயன்பாடு கூடும். இப்பயிற்சிகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கண்டிப்பாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, தொடக்கநிலை 1ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எளிய ஒருமை-பன்மை பட்டியல்களை அளிக்கலாம். அடுத்தடுத்த நிலையில் அவர்களுக்கு ஆண்பால்-பெண்பால், காலங்கள், மூவிடப் பெயர்கள் போன்ற பட்டியல்களைச் சேர்த்துக் கொள்ளலாம். தமிழ் நூல்களை எளிதில் புறக்கணிக்க முடியாதவாறு அவை அமையவேண்டும்.

தொடக்கநிலை 1முதல் 4வரை மாணவர்களின் தமிழ்மொழிப் புலமையைச் சோதிக்க இந்த இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் சோதனை பெறவேண்டும். அதன் பிறகே பயன்பாட்டு நிலையில் மாணவர்களின் மொழிப்புலமையைச் சோதிக்க வேண்டும் என்று இக்கட்டுரை பரிந்துரைக்கிறது.

***ஆசிரியர்களின் பங்கு***

மொழி வளர்ச்சி எனும்போது, இதில் ஆசிரியர்களின் பங்கு அதிகம் உள்ளது. மாணவர்களின் மொழித்தரத்தை மேம்படுத்த முயலும் ஆசிரியர்கள் மாணவர்கள் செய்யும் மொழிப்பிழைகளைக் கவனிக்கவேண்டும்.

பிழைகள் செய்வது மனித இயல்பு. எழுத்தறிவிக்கும் ஆசிரியர் மாணவர்களின் பிழைகளைத் திருத்தி அறிவு ஊட்டுவது கடமையாகக்கொள்ள வேண்டும்.

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதீர்க்கும்*

*வாய்நாடி வாய்ப்பச் செயல்* (குறள் 943)

என்னும் குறளுக்கேற்ப மாணவர்கள் செய்யும் பிழைகளை முதலில் கண்டறிய வேண்டும். அதன் காரணத்தை நிர்ணயிக்கவேண்டும். பிறகு அவற்றைக் களைவதற்கான வழிகளை ஆராயவேண்டும். பின்னர் அவ்வழிமுறைகளைத் தம் மாணவர் தன்மைக்கேற்பத் தக்கவகையில் பின்பற்றிப் பயன் காண்பதும் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய பணிகளாகும்.

## 13. தமிழர் பண்பாட்டைப் பற்றிய அறிவும் அனுபவமும்

'...மனிதனைச் சமுதாயமாகப் பிணைக்கும் ஆற்றலும் மொழிக்கு உண்டு. சிந்தனை, உணர்வு, பண்பாடு, நம்பிக்கை, ஆகியவற்றையும் மொழி வழியாக நாம் பரிமாறிக்கொள்கிறோம்' (திண்ணப்பன், 1995, ப. 11).

இப்புதிய நூற்றாண்டில் அறிவுநிலையானது விரிவாக்கமும் வளர்ச்சியும் பெற்ற அளவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் இல்லை. மனிதச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அறிவுப் பெருக்கம் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. இன்றைய காலக்கட்டத்தில் அறிவின்பால் உள்ள வேட்கையும் அறிவின் உருவாக்கமும் பல எல்லைகளைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. அறிவுசார் சமூகம், அறிவுசார் பொருளாதாரம் என்று சிந்தனை திசைதிரும்புவதால், இளையர் சமுதாயம் தத்தம் பண்பாட்டு வேர்களை மறந்தும் மறுத்தும் சென்றுகொண்டிருக்கும் நிலை மேலோங்கிக்கொண்டிருக்கிறது. தமிழர்களுக்கென்று இருக்கக்கூடிய சில சிறப்புப் பண்பாட்டியல்புகள் நம் மாணவர் சமூகத்தினர் பலர் அறியாமல் இருப்பது வருத்தத்தைத் தரக்கூடிய உண்மை நிலை. தமிழ்க் கல்வி மூலம் தமிழர் பண்பாடு மீதான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தித் தருவது ஆசிரியர்தம் கடப்பாடாகும். தமிழரது பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களைப் பக்குவப்படுத்தவல்லன. இதன்வழி வரும் மரபினையும் கலைகளையும் இன்னும் ஆழமாக அறிவதற்குத் தமிழ்ப் பாடக்கலைத்திட்டத்தில் தமிழர் பண்பாட்டைக் குறிப்பாகச் சிங்கப்பூர்சார்ந்த கருப்பொருள்களை அதிகரிப்பதோடு அனுபவக் கல்வியையும் இணைக்க வேண்டும்.

### 14. தொழில்நுட்பத்தின் தாக்கம்

சமூகமும் நாடும் வளர்ச்சியடையும் வேகத்தைவிடத் தொழில்நுட்ப வளர்ச்சி அதிவேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. 21ஆம் நூற்றாண்டுத் திறன்களுள் தொழில்நுட்பத் திறன் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. உலகத்தைத் தம் உளளங்கையில் அடக்கி ஆண்டுகொண்டிருக்கும் தொழில்-நுட்பமானது பற்பல திசைகளில் தம் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. இதற்குக் கல்வியும் விதிவிலக்கல்ல. இன்றைய கல்விச்சூழலில் தொழில்நுட்ப வளர்ச்சியை அரவணைத்துச் செயல்படாவிடில் இழப்பு நமக்குத்தான் என்பதில் ஐயமில்லை. இந்த இழப்பானது தமிழ்மொழி கற்போருக்கு நேராமல் இருக்க வேண்டுமானால் தகவல்தொடர்புத் தொழில்நுட்பத்தின்வழிக் கற்பிப்பதை ஆதரிக்கவும் அதிகரிக்கவும் வேண்டும். இக்காலத் தமிழை உருப்படுத்தும் முறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலக்கணம், தமிழ் எழுதுவோருக்கு மொழிப் பயன்பாட்டு வழிகாட்டி, அச்சிடுவோருக்கு மொழி வழக்குக் கையேடு போன்றவை இணையத்திலிருந்து பெறத் தொழில்நுட்ப வசதிகள் உள்ளன. அதைப் பயன்-படுத்திக்கொள்ளவேண்டும்.

இன்றைய தலைமுறையினரின் செயல்பாடுகளை அறிந்து அவர்களின் போக்குக்கேற்ப நாம் தமிழ்க் கல்வியில் பொருத்தமான தொழில்நுட்ப வசதிகளைப் புகுத்தவேண்டும். இணையத்தைப் பயன்படுத்தித் தனியாகவோ, குழுவாகவோ, குழுமப் பள்ளிகளுடனோ உடனிணைந்து ஒப்படைப்புகள் செய்து பகிர்ந்திடச் செய்யலாம்.

### 15. தமிழ்ப்பற்றை அதிகரிப்பதன் தேவை

*‘யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’* என்று பாடிய பாரதியின் பொன்வரிகள், நம் தமிழ்மொழியின் சிறப்பை நன்றே வெளிக்கொணர்கிறது. இத்துணை சிறப்பைக் கொண்ட தமிழ்மொழியானது, இன்று வாழும் மொழியாகத் திகழ நம் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டுதற்குரியவை. ஆனால், அவற்றில் நிறைந்திருக்கும் சவால்கள் எண்ணிலடங்கா. இவற்றை முறியடிக்க நாம் முதலில் நம் மாணவர்களிடையே தமிழ் உணர்வை ஊட்டவேண்டும். அதற்கு முதற்படி, நாம் புதிய சிந்தனைகொண்ட தமிழ் ஆர்வலர்கள் என மாணவர்கள்முன் வாழ்ந்துகாட்ட வேண்டும். நவீன புத்தாக்கச் சிந்தனைகளுடன் தமிழ் கற்றல் கற்பித்தலை அணுகவேண்டும். புதிய

சிந்தனைகளும் பார்வைகளும் தமிழிலே தொன்மைக் காலத்திலிருந்து இருந்துள்ளது என்பதை மாணவர்களிடம் எடுத்துச் சொல்லவேண்டும். பாரதியார், பாரதிதாசன், ஜெயகாந்தன் போன்ற சிறந்த, புரட்சிகரமான சிந்தனையாளர்கள் நம்மிடையே இருந்துள்ளனர் என்ற எண்ணக்கருவை மாணவர்களிடம் விதைக்கவேண்டும். இதன்வழித் தமிழ் மீதும் தமிழர் மீதும் ஓர் ஆழ்ந்த மதிப்பை நம் இக்கால இளையர்களிடம் வளர்க்க முடியும். தமிழின் சிறப்பையும் தமிழ்சார்ந்த சிறந்த முன்னோடிகளையும் பற்றி நம் பாடத்தில் கூடுதலாக இணைக்கலாம். இதற்கான வளங்களைச் சேகரித்து ஆசிரியர் சமூகத்தை வளப்படுத்தலாம். இதற்கு ஆசிரியர்கள் பரந்துபட்ட பார்வைகளையும் அகன்ற வாசிப்பையும் மேற்கொண்டு மாணவர்களை ஊக்குவிக்கவேண்டும். இந்தப் பயணத்தில் பெற்றோருடனும் தமிழ் ஊடக நிறுவனங்களுடன் கைகோத்துச் செயல்படவேண்டும்.

| **நடைமுறைச் சிக்கல்கள்** | **பரிந்துரைகள்** |
|---|---|
| **1. மொழி வளர்ச்சி**<br>• சொல்வளப் பற்றாக்குறை<br>• பேச்சில் சரளமின்மை<br>• இலக்கணக் கூறுகளின் ஆழமான புரிதலின்மை<br>• பையப் பயிலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமம் | • அகன்ற வாசிப்பை அதிகரித்தல்<br>▪ முறைப்படுத்தப்பட்ட நூலக நேரம்<br>▪ சொற்பொருளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்தல்<br>▪ பையப் பயிலும் மாணவர்களுக்கு மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் (SDR, RRP, ICAN)<br>▪ கேட்டல் கருத்தறிதலுக்குக் கூடுதலான பயிற்சிகள்<br>* SDR – School Based Dyslexic Remediation<br>* RRP- Reading Remediation Programme<br>* ICAN – Improving Confidence & Achievement in Maths |
| **2. தமிழர் பண்பாட்டைப் பற்றிய அறிவும் அனுபவமும்**<br>• பண்பாட்டுக் கூறுகள் பற்றிய மேலோட்டமான புரிந்துணர்வு<br>• தமிழர் கலைகளில் நேரடியான அனுபவமின்மை | ▪ மரபும் பணிபாடும் என்னும் கருப்பொருளில் அதிகமான பாடங்களை வழங்குதல்<br>▪ அனுபவக் கல்வியை இணைத்தல்<br>▪ பெற்றோர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் அளித்தல்<br>▪ ஊடகத்தில் பண்பாட்டைப் பற்றிய கூடுதலான தகவல் அளித்தல்<br>▪ உயர்தமிழ் மாணவர்களைக் கூடுதலான மரபும் பண்பாடும் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் |

| நடைமுறைச் சிக்கல்கள் | பரிந்துரைகள் |
|---|---|
| **3. தொழில்நுட்பத்தின் தாக்கம்**<br>• தகவல் தொடர்புச் சாதனங்களில் தமிழ்மொழியின் ஊடுருவல் அதிகம் இல்லாமை | ▪ குழுமப் பள்ளிகளுடன் இணையம்வழி உடனிணைந்து கற்றல் (Collaborative Learning); தளங்களை உருவாக்கிக் குழு ஒப்படைப்புகள் செய்தல்<br>▪ கையெழுத்துவழிக் கணினியில் அச்சிடும் நவீன தொழில்நுட்பக் கருவிப் பயன்பாடு (Padlet with Google Handwriting)<br>▪ தொழில்நுட்பம்வழித் தமிழ் கற்றலை எளிமைப்படுத்துதல்<br>▪ நோக்கல்வழிக் கற்றலை அதிகரித்தல் |
| **4. தமிழ்ப்பற்று அதிகரிப்பின் தேவை**<br>• மாணவர்களின் தமிழ்ப்பற்று மற்றும் தமிழ்மொழியின்பால் உள்ள ஈர்ப்பு குறைந்திருப்பது. | ▪ விளையாட்டுவழித் தமிழ்மொழியைக் கற்றல்<br>▪ ஆசிரியர்களின் தமிழர் பண்பாடு, வரலாறு பற்றிய அறிவை ஆழப்படுத்துதல்<br>▪ ஆசிரியர்களின் தமிழ்மொழிக் கல்விசார் அறிவை ஆழப்படுத்துதல்<br>▪ பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து செயல்படும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்<br>▪ உயர்தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் முரசோடு சேர்ந்து சில ஒப்படைப்புகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை வகுப்பில் பகிரும் வாய்ப்புகளை அறிமுகம் செய்தல் |

## 16. நடப்பில் இருக்கும் மொழி நடவடிக்கைகளை மறுபார்வையிடுதல்

இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சாத்தியமான கட்டமைப்புப் பள்ளிநிலையில் முன்மொழியப்பட வேண்டியது அவசியம். இந்தக் கட்டமைப்பானது நடப்பில் இருக்கும் பணிச்சட்டத்தோடு இணைந்து செயல்படக் கூடியதாகவும் நெகிழ்வுத்தன்மையுடையதாகவும் இருப்பது இன்றியமையாதது.

## முடிவுரை

“நம் நாட்டில் இரண்டாம் மொழிக்கொள்கை தமிழ்மொழியை நிலைபெறச் செய்யச் சரியான பாதையை நமக்குக் காட்டி வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது. இரண்டாம் மொழிக்கொள்கையை வகுத்துத் தமிழ்மொழியின்

ஏற்றத்திற்குத் துணைபுரிந்த நமது அரசாங்கத்தின் செயல் ஒப்பற்றது'' (தங்கவேலு, 1977, ப. 68).

கற்பித்தலானது வளம் பொருந்தியதாக இருக்க வேண்டுமாயின் அப்பணியில் ஈடுபடுவோர் அப்பணி தொடர்பாக எழுகின்ற சமூகச் சவால்களை எதிர்கொண்டு, அவற்றைச் சமாளிக்கக்கூடிய கல்விசார் திறன்களையும் பெற்றிருக்கும் கல்வியாளர்களாகத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தொழில் புரிபவர்கள் என்னும் கண்ணோட்டம் நீங்கி, ஒரு சமுதாயத்தை மாற்ற வல்லவர்கள் என்ற எண்ணம் ஆசிரியர்கள் மனத்தில் ஆழமாக வேரூன்ற வேண்டும். மாணவர்களுக்குக் கல்விப் போதனையை வழங்குவதோடு மட்டுமல்லாது அவர்களின் உளநலன்கள்மீதும் அக்கறைகொள்ள வேண்டிய முக்கியப் பொறுப்பு நமக்குள்ளது. குறிப்பாக, மாணவர்களிடம் பண்பாட்டு விழுமியங்களை வளர்த்துப் பண்பட்ட சிறந்த சமுதாய உறுப்பினர்களாக உருவாக்கும் கடப்பாடு மொழியாசிரியர்களின் இன்றியமையாத பொறுப்பாகும். இந்தப் பொறுப்பினைத் தனி ஒருவரால் செய்யவியலாது. ஆசிரியர் சமூகமாகிய நாம் இணைந்து செயல்பட்டு மாணவர் சமூகத்தை மேம்படுத்த இது ஓர் அழைப்பு. ஒன்றிணைந்து தமிழை வாழும் மொழியாக்குவோம்.

**துணைநூல் பட்டியல்**

இராமையா, கா. (2001). நுழைவாயில். *சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம்*(கருத்தரங்க ஆய்வடங்கல்) . இராமையா, கா., சீதாலட்சுமி (தொ.ஆர்கள்.). சிங்கப்பூர் :தமிழ்க்கலை அச்சகம். vi-xvii.

இராமையா, கா. (1990). சிங்கப்பூரில் தமிழ் கற்றல், கற்பித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஓர் அகன்ற பார்வை –, சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மாநாட்டில் 29.12.1990*இல்* படைக்கப்பட்ட கட்டுரை, சிங்கப்பூர் .

இராமையா, கா (தொ.ஆர்.). (2000). *சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள் (தொகுப்புகள் 1-V).* சிங்கப்பூர்: தேசிய கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்.

கல்வி அமைச்சு. (2005). *சிங்கப்பூர்ப் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறை குறித்த மறுஆய்வுக்குழு அறிக்கை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு. (2011). 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை. சிங்கப்பூர்: கல்வி அமைச்சு. https://www.moe.gov.sg/docs/default-source/document/education/syllabuses/mother-tongue-languages/files/tamil-primary-2015.pdf இணையத்தளத்திலிருந்து பெற்றது.

கல்வி அமைச்சு. (2014). *தாய்மொழிப் பாடத்திட்டம் -2015 தொடக்கநிலைஅறிமுகம் -.* சிங்கப்பூர். https://www.moe.gov.sg/docs/default-source/document/education/syllabuses/mother-tongue-languages/files/tamil-primary-2015.pdf இணையத்தளத்திலிருந்து பெற்றது.

கோபிநாதன், எஸ் . (2001). புத்தாயிரமாம் ஆண்டில் தாய்மொழி கற்பிப்பதில் உள்ள சவால்களும் வாய்ப்புகளும். இராமையா, கா., சீதாலட்சுமி(தொ.ஆர்கள்.). *சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம்கருத்தரங்க )* (ஆய்வடங்கல்.சிங்கப்பூர்: தமிழ்க்கலை அச்சகம். 51-72.

கோபிநாதன், எஸ். (2014). *சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும் எஸ்* கோபிநாதன்)Education policy and practice in Singapore S. Gopinathan). *சீதா* லட்சுமி .தொ) .ஆசிரியர்:சிங்கப்பூர் .(.ஆர்

சீதாலட்சுமி. (2001). சிங்கப்பூரில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு. முனைவர் பட்ட ஆய்வேடு. சிங்கப்பூர்: தேசியக்கல்விக்கழகம்

சீதாலட்சுமி. (2009). சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல். சிங்கப்பூர்: ரேவதி பப்ளிகேஷன்ஸ். சீதாலட்சுமி. (2011). *தமிழும் தமிழ் கற்பித்தலும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

தங்கவேலு, சி. (1977). ஆங்கிலப்பள்ளளிகளில் தமிழ் இரண்டாம் மொழி. அ. வீரமணி (தொ.ஆர்). சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும் - ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள். (பப.63-68). சிங்கப்பூர்: சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம்.

திண்ணப்பன். சுப. (1993). *சிங்கப்பூரில் தமிழ், மொழியும் இலக்கியமும் .* தேவக்கோட்டை: தேன் வள்ளியம்மை பதிப்பகம்.

வீரமணி, அ. (1977)*ஆய்வரங்க மாநாட்டுக் – சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும் .* சிங்கப்பூர் .*கட்டுரைகள்*: சிங்கப்பூர்த் தேசியப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை.

Brumfit, C. J. (1981). *Accuracy and fluency a fundamental distinction for communicative teaching methodology,* Practical English Teacher.

MOE. (2011)*. Nurturing active learners and proficient users: 2010 Mother Tongue Languages Review Committee Report.* Singapore: Ministry of Education. Retrieved from https://www.moe.gov.sg/media/press/files/2011/mtl-review-report-2010.pdf

Gopinathan, S. (1974). *Towards a national system of education in Singapore, 1945-1973.* Singapore: Oxford University Press.

Gopinathan, S. (1980). Language policy in education: A Singapore perspective. In E. Afendras & E Kuo (Eds.). *Language and society in Singapore* (pp. 175-202). Singapore: Singapore University Press.

Van E.K.J. (1975). The Threshold level in a European unit/credit system for Modern Language by adults. Strasbourg: Council of Europe.
Retrieved from http://files.eric.ed.gov/fulltext/ED108482.pdf

# சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதும் பயன்படுவதும்: இருமொழிப் பயன்பாட்டில் தேய்வு - ஒரு மீள்பார்வை

**முனைவர் விஜயாராணி மூர்த்தி**
பள்ளித் திறன் மேம்பாட்டாளர்,
குவீன்ஸ்டவுன் உயர்நிலைப் பள்ளி

**திரு க. முருகன்**
பாடத் தலைவர்,
பெண்டிமியர் உயர்நிலைப் பள்ளி

---

**கட்டுரைச் சுருக்கம்**

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சிங்கப்பூரில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களும் சமூக மாற்றங்களும் தமிழர்களையும் தமிழ்மொழியையும் பெரிதும் பாதித்தன. அன்று ஆட்சியிலிருந்த அரசு பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தது. தமிழ்ச் சமுதாயமும் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்பத் தம்மைத் தயார்செய்ய முற்பட்டது. தமிழ்க் குடும்பங்களில் இருந்த தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்ப் பள்ளிகளுக்குச் செல்வது குறையத் தொடங்கியது. அவர்கள் ஆங்கிலப் பள்ளிகளுக்குச் செல்லத் தொடங்கினர். அன்றுமுதல் தமிழ்க் குடும்பங்களில் தமிழ்மொழியின் பயன்பாடு தேய்வு கண்டுவந்துள்ளது.

1983ஆம் ஆண்டில் ‘சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதும் பயன்படுவதும்: இருமொழிப் பயன்பாட்டில் தேய்வு’ என்னும் தலைப்பில் கோபிநாதன் அ வீரமணியுடன் இணைந்து எழுதிய கட்டுரை (கோபிநாதன், வீரமணி, 2014) ‘சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும்’ என்னும் தொகுப்பேட்டில் இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் அன்றைய சமுதாயத்தில் தமிழ்மொழியின் நிலை என்ன என்பதுபற்றியும் அம்மொழிக்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள நிலைபற்றியும் குறிப்பிட்டுள்ள கோபிநாதன், தமிழ்மொழி கண்டுவந்த மாற்றங்கள்பற்றிச் சான்றுகளுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். சுமார் 33 ஆண்டுகள் கடந்த பின்னரும் கட்டுரையாளரின் கவலைக்குரிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளனவா அல்லது மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதையும் அதற்கான காரணங்களையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

சிங்கப்பூர் சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் நாட்டு நிர்மாணத்தில் பங்கேற்ற நம் முன்னோர்களின் அயரா உழைப்பையும் பங்களிப்பையும் நன்றியுடன் நினைவுகூர்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். அவ்வகையில் சிங்கப்பூருக்கு வந்த தமிழர்கள் தங்களின் மொழியையும் கலாசாரத்தையும் வந்த இடத்திலும் கட்டிக் காப்பதில் முக்கியக் கவனம் செலுத்தினர். நாடு வளர்ந்தது போலவே நாட்டு மக்களும் வளர்ந்தனர். கால ஓட்டத்தில் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் இம்மண்ணில் தமிழ்மொழியைக் கற்பதிலும் பேணுவதிலும் சில இடையூறுகளையும் தாக்கத்தையும் ஏற்படுத்தி வந்துள்ளன. அதனால், அவ்வப்போது மொழிப் பற்றாளர்களும், மொழியியல் வல்லுநர்களும், சமூக ஆர்வலர்களும் தங்களின் ஆதங்கத்தைப் பதிவுசெய்து வந்துள்ளனர்.

1983ஆம் ஆண்டில் ‘சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதும் பயன்படுவதும்: இருமொழிப் பயன்பாட்டில் தேய்வு’ என்னும் தலைப்பில் கோபிநாதன் அ வீரமணியுடன் இணைந்து எழுதிய கட்டுரை (Mani & Gopinathan, 1983) ‘சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும்’ என்னும் தொகுப்பேட்டில் இடம்பெற்றுள்ளது (கோபிநாதன், 2014). இக்கட்டுரையில் அன்றைய சமுதாயத்தில் தமிழ்மொழியின் நிலை என்ன என்பதுபற்றியும் அம்மொழிக்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள நிலைபற்றியும் குறிப்பிட்டுள்ள கோபிநாதன், தமிழ்மொழி கண்டுவந்த மாற்றங்கள்பற்றிச் சான்றுகளுடன் பகிர்ந்து-கொண்டுள்ளார். சுமார் 33 ஆண்டுகள் கடந்த பின்னரும் கட்டுரையாளரின் கவலைக்குரிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளனவா அல்லது மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதையும் அதற்கான காரணங்களையும் ஆய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாக அமைகிறது.

**1. தமிழ்மொழிப் புழக்கம்**

“தமிழ்மொழியின் புழக்கம் குறைந்துவருவதாகக் காட்டும் ஆய்வு முடிவுகளும், (குவோ, 1976, 1979 கோபிநாதன், 2014). வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்மொழியின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றியுள்ளன” என்றும் “சிங்கப்பூரில் தமிழ்மொழியின் புழக்கம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது; ஆனால் எதிர்பார்க்கப்பட்டது” என்றும், கால் நூற்றாண்டிற்கு முன்னரே தமது

கட்டுரையில் கோபிநாதன் (2014, ப. 121) தம் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் "மொழியின் எதிர்கால நிலை உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும்" என்று சக மொழியியல் ஆய்வாளர்களின் கருத்துகளையும் தம் கட்டுரையில் முன்னிறுத்தித் தமது அக்கறையைச் சமுதாயத்திற்கு எடுத்தியம்பியுள்ளார். அவரது அக்கறைக்குரிய இக்கருத்து மீண்டும் 2005, 2010 ஆகிய ஆண்டுகளில் சிங்கப்பூர்க் கல்வியமைச்சால் (கல்வி அமைச்சு, 2005). நடத்தப்பட்ட மறுஆய்வுகளில் வலியுறுத்தப்பட்டிருப்பது இத்தருணத்தில் நினைவு-கூரத்தக்கது.

'சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதும் பயன்படுவதும்: இரு மொழிப் பயன்பாட்டில் தேய்வு' என்னும் கட்டுரையில் மொழியியலாளரின் கூர்த்த பார்வையை உணரமுடிகிறது. தமிழ்மொழியின் எதிர்காலம் குறித்து அன்று மேற்கொள்ளப்பட்ட பற்பல ஆய்வுகளைத் தம் கட்டுரையில் சுட்டிக்காட்டித் தமிழ்மொழியின் எதிர்காலம் பற்றிய சிந்தனை தமிழர்களுக்குத் தேவை என்று கூறிய கோபிநாதனின் கருத்து இன்றளவும் தமிழ்மொழி தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் இடம்பெறத் தவறுவதில்லை. கல்வியமைச்சு 2005ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் மேற்கொண்ட 'தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை' மறுஆய்வுகளின் அறிக்கைகள் (இயல் 8, ப. 103) கோபிநாதனின் அக்கறைக்குரிய கருத்தை மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றன.

'தமிழ்ச் சமூகம் ஒரு முக்கியக் கேள்விக்கு விடைகாண வேண்டுமென்று இந்தக் குழு கருதுகிறது. ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குச் செல்வதற்காகப் படிக்கும் தேர்வுப் பாடமாகவே தமிழ் இருந்துவிடாமல், இன்றைய சிங்கப்பூர்த் தமிழ் இளையர்கள் மட்டுமன்றி, அவர்தம் பிள்ளைகளும் பேசும் மொழியாக – அவர்களிடையே வாழும் மொழியாகத் தமிழை ஆக்குவது எப்படி என்பதுதான் அந்தக் கேள்வி.' இன்றளவும் இதே கேள்விதான் கேட்கப்பட்டு வருகிறது.

*If the Tamil community continues its present disregard for Tamil in intra-ethnic communication and within the family, the language may disappear from Singapore's language landscape within the next 20 to 30 years. Alternatively, Tamil may remain a school subject important only for the sake of passing the examination, if the second language requirement continues to be enforced. Future generations may become passive bilinguals, but without the productive skill*

*needed to speak the language. A language has to continue to be spoken by the community or it will become "dead."* என்று சண்முகமும் அதே அக்கறைக்குரிய கருத்தையே தமது ஆய்வு முடிவில் குறிப்பிட்டுள்ளார் (Shanmugam, 2015, p. 56).

**2. பிறமொழிகளின் ஆதிக்கம்**

இந்திய மாணவர்களிடையே ஆங்கிலத்தின் புழக்கம் 1991இல் 49 சதவிகிதமாக இருந்தது. 2010இல் 58 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்று 2010ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தாய்மொழிகள் மறுஆய்வுக்குழு அறிக்கையில் (கல்வி அமைச்சு, 2011, ப. 16) குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அடுத்த ஐந்து ஆண்டுகள் கழிந்தும் இன்றைய நிலை என்ன? இந்தியர்களிடையே படிப்பறிவு அதிகமாக உள்ளது என்று மார்தட்டிக்கொள்ள இயலவில்லை. 1957ஆம் ஆண்டில் படிப்பறிவு என்பது, "ஓர் எளிய கடிதத்தை எழுதப் படிக்கத் தெரிவது" என்று கருதப்பட்டது. 1970, 1980களில் நடைபெற்ற மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், மொழியறிவு என்பது, "செய்தித்தாள் ஒன்றினைப் புரிந்துகொள்ளும் வகையில் படிக்க இயலுவது" என்று வரையறுக்கப்பட்டதாகக் (2014, ப. 123) கோபிநாதன் குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வுக் குழு அறிக்கையில் (ப. 4) எதிர்காலச் சிங்கப்பூரில் தமிழ் நமது இலக்கு என்னும் துணைத் தலைப்பின்கீழ், சிங்கப்பூர்த் தமிழர்கள் தங்கள்

- வீடுகளில் சிரமமின்றித் தமிழைப் பயன்படுத்துவார்கள்; தம் பிள்ளைகளோடு தமிழிலேயே பேசுவார்கள்
- வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்

என்னும் எதிர்பார்ப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று சிங்கப்பூரில் பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. எழுதப் படிக்கத் தெரியவேண்டும் என்ற நிலையிலிருந்து பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்டதா? அல்லது இது காலத்தின் நியதியா? என்று நாம் சிந்திக்கவேண்டும். ஒரு மொழி

எழுத்து வழக்கொழிந்து பேச்சு வழக்கில் மட்டுமே இருக்குமானால் அம்மொழி எவ்வளவு காலத்திற்கு நிலைத்திருக்கும்?

சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற பின்னர்ப் பள்ளிகளில் இருமொழிக்கொள்கை வலியுறுத்தப்பட்ட தொடக்கக் காலத்தில் சுமார் 15லிருந்து 35 விழுக்காட்டு மாணாக்கர் இந்திய வம்சாவழியினராய் இருந்தும் தமிழறிவு இல்லாமல் இருந்தனர் (கோபிநாதன், 2014, ப. 127). அவர்கள் நினைத்திருந்தால் தமிழில் எழுதப் படிக்கக்கூடிய நிலையைப் பெற்றிருக்க முடியும். ஆனால், அவ்வாறு பெறவில்லை. ஏனெனில், அவர்கள் பள்ளியில் தமிழை ஒரு பாடமாகக் கற்கவில்லை. ஆனால், இன்றைய நிலைமை என்ன? தென்னிந்திய வம்சாவழியினர் மட்டுமல்ல சமீபத்தில் இங்குக் குடியேறியுள்ள தமிழர்களுள் சிலர் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் பயில ஊக்குவிப்பதில்லை. அவர்கள் ஹிந்தி, மலாய் அல்லது மாண்டரீன் வகுப்புகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள்.

கோபிநாதன் தம் கட்டுரையில், அன்று தமிழை ஒரு பாடமாகப் படித்த மாணவர்களும்கூடத் “தமிழைவிட மலாய் மொழியைக் கற்பது சுலபம். எனவே, தமிழில் பேசத்தெரியாத தமிழர்கள்கூட மலாய்மொழியைக் கற்க விருப்பப்படுகின்றனர்” (2014, ப. 133) என்றும் “தமிழ்மொழியின் புழக்கம் குறைவதற்குக் கல்விமுறை முக்கியக் காரணமாக அமைகிறது. எனவே, நமது கல்வித் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்” (2014, ப. 23) என்றும் குறிப்பிட்டிருந்தார். அவருடைய கருத்து இன்றும் நாம் சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

நாடு தழுவிய அளவில் பல்வேறு தரப்பினரோடு குழுமக் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தி, மலேசியாவுக்கும் இந்தியாவுக்கும் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு, ஃபோர்ப்ஸ் ரிசர்ச் (Forbes Research) என்னும் அமைப்புடன் இணைந்து 2600க்கும் மேற்பட்ட மாணவர்களையும் ஆசிரியர்-களையும் மதிப்பாய்வில் ஈடுபடுத்தி வெளியிடப்பட்ட 2005ஆம் ஆண்டின் மறுஆய்வுக்குழுவின் அறிக்கை (கல்வி அமைச்சு, 2005) பரிந்துரைத்ததைக் கோபிநாதன் தமது சீரிய சிந்தனையுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் 30 ஆண்டுகளுக்கு முன்னரே பரிந்துரைத்துவிட்டார். இனியும் ஆய்வுக்கு மேல் ஆய்வுகள் செய்து தரவுகளைச் சேகரிப்பதை நிறுத்திக்கொண்டு, இதுகாறும் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அவை எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குப் பயனளித்துள்ளனவா என்பதில் கவனத்தைச் செலுத்திட வேண்டும்.

“தமிழ் படிக்கப் போதிய வாய்ப்பில்லாமை தமிழுக்கு ஓர் இழப்பாகும்” (2014, ப. 137) என்று கோபிநாதன் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ‘வாய்ப்பில்லாமை’ என்பது அக்காலத்தில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கைச் சூழல், தமிழைக் கற்றுத்தர முறையான பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லாத நிலை, மலாய்மொழியின் எளிமை மற்றும் அதன் செல்வாக்கு ஆகியவற்றை மனத்திற்கொண்டு குறிப்பிடப்பட்டதாகக் கொள்ளலாம். ஆனால், இன்று அத்தகைய நிலை இல்லை. பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கக் கல்லூரி, தேசிய கல்விக்ககழகம் (பட்டப்படிப்பு), தேசியப் பல்கலைக் கழகம், சிம் பல்கலைக் கழகம் (பகுதிநேரப் பட்டப்படிப்பு), நீ ஆன் பலதுறைக் தொழிற்கல்லூரி (பட்டய வகுப்பு) எனப் பல நிலைகளில் முறையாகத் தமிழ் பயில வசதி வாய்ப்புகள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தித் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியின்பால் பற்றுக்கொள்ளச் செய்ய ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அந்தப் பணியை யார் செய்ய வேண்டும் என்பதே கேள்வி.

### 3. வாழ்க்கைச் சூழலின் பிரதிபலிப்பு

அன்று தமிழர் அல்லாத பிற இந்திய மொழிகளைப் பேசியவர்களுக்குத் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கற்பதில் சிரமம் இருந்தால் மலாய்மொழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று சிறப்புச் சலுகை வழங்கப்பட்டது. அக்காலத்தில் இந்திய மொழி எனத் தமிழ் மட்டுமே பள்ளிகளில் கற்பிக்கப்படாததாலும் (1989, அக்டோபர் 6ஆம் தேதிதான் தமிழல்லாத பிற இந்திய மொழிகள் (Non Tamil Indian Languages) தேர்வுப் பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது, அதன் பிறகு 1990இல் முதன்முதலாகப் பெங் வாங் தொடக்கப்பள்ளியில் முதல் ஹிந்தி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பிற இந்திய மொழிகளைப் படிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படாததலும் தமிழரல்லாத இந்தியர்கள் தமிழ் படிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருந்தது. அதனால், தமிழைத் தாய்மொழியாகப் பயிலாத பிற இந்திய மொழிகள் பேசுவோர் தமிழுக்குப் பதிலாக மலாய்மொழியைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

இன்று தமிழ் அல்லாத பிற இந்திய மொழிகளான ஹிந்தி, பஞ்சாபி, பெங்காலி, குஜராத்தி, உருது ஆகிய 5 மொழிகளையும் பள்ளியில் தாய்மொழிப் பாடவேளையிலேயே படிப்பதற்கு (50 தொடக்கப்பள்ளிகள், 29 உயர்நிலைப்

பள்ளிகள் (Hindi Society) வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால், அவர்கள் தமிழைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

தமிழ்நாட்டிலிருந்து வரும் திறனாளர்களின் பிள்ளைகள் இந்திய நடுவணரசுப்முபாடத்திட்டத்தில் (Central Board of Secondary Education) படித்துவிட்டு இங்கு வந்து கல்வியைத் தொடர்வதால் அவர்கள் ஏற்கெனவே படித்த மொழியையே இங்கும் தேர்ந்தெடுக்கின்றனர். மீண்டும் தாய்நாட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை வந்தால் அங்குச் சென்றும் தொடர ஏதுவாகத் தமிழைத் தவிர பிற இந்திய மொழிகளைத் (ஹிந்தி, சமஸ்கிருதம்) தேர்வுசெய்து படிக்கின்றனர். இதனால் பிற இந்திய மொழிகள் இங்குச் செல்வாக்குப் பெறுகின்றன. மேலும், இந்தியப் பாடத்திட்டங்களை வழங்கும் கல்வி நிறுவனங்கள் மற்ற உலக நிலையிலான பாடத்திட்டங்களையும் (IGCSE, CBSE-I, International Baccalaureate Diploma Programme (IBDP), Cambridge IGCSE , CBSE, Global Montessori Plus) வழங்குவதால் இந்தியாவிலிருந்து வரும் திறனாளர்கள் தங்களின் பிள்ளைகளை அப்பள்ளிகளிலேயே சேர்ப்பதற்கு விரும்புகின்றனர். அதனால், அத்தகைய பள்ளிகளின் எண்ணிக்கையும் (Global Indian International School – Queenstown, Balestier, East Coast, DPS International School, NPS International School, Yuvabharathi International School) கூடிவருகிறது.

பள்ளியில் பிற இந்திய மொழியைத் தேர்ந்தெடுத்துப் படித்தாலும் வீட்டில் தமிழ் பேசி, தமிழ் நாளிதழைப் படித்து வந்தாலே இளையர்களிடம் மொழிப்பற்றும் மொழியறிவும் இருக்கும். ஆனால், தமிழ்க் குடும்பங்களிலும் சமூகத்திலும் நிலவும் நிலை என்ன? வேலையிடங்களில் வர்த்தக மொழியான ஆங்கிலத்தில் கருத்துப்பரிமாற்றம் செய்துகொண்டிருந்துவிட்டு வீடு திரும்பும் பெரியவர்கள் வீட்டுக்கு வந்ததும் அதே மொழியில் குடும்ப உறுப்பினர்களுடனும் கருத்துப்-பரிமாற்றம் செய்கின்றனர். இதற்குப் பிள்ளைகளும் சளைத்தவர்களல்லர். அவர்களும் பள்ளியில் பல்லின மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கருத்துப்பரிமாற்றம் செய்கின்றனர். இவர்கள் வீட்டுக்கு வந்த பின்னரும் பெற்றோருடனும் மற்றவர்களுடனும் ஆங்கிலத்திலேயே உரையாடுகின்றனர். வேலை முடிந்தும் பள்ளி முடிந்தும் வீட்டிற்குள் நுழையும் பெரியவர்களும் சிறுவர்களும் முழுக்க முழுக்கத் தமிழில் பேசுவது (மொழித்தாவல் நிலையில் - code switching) சிறப்பு என்ற போதிலும், பல வேளைகளில் அந்நிலை காணப்படுவதில்லை. இருப்பினும் ஆங்கிலம் கலந்த தமிழிலாவது (சொல் கலப்பு நிலையில் - code mixing) பேசித்

தமிழை வாழும் மொழியாக வலம்வரச் செய்வோம் என்ற அளவிலாவது தமிழுணர்வு இருக்க வேண்டும்.

### 4. மொழி வளர்ச்சியும் பாடத்திட்டமும்

"தமிழ்மொழியின் புழக்கம் குறைவதற்குக் கல்வி முறை முக்கியக் காரணமாக அமைகிறது. எனவே, நமது கல்வித் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்" (2014, ப. 134) என்று கோபிநாதன் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1980களில் இருந்த பாடத்திட்டம் இன்று இல்லை. ஐந்தாண்டுக்கு ஒருமுறை பாடத்திட்டங்கள் மறுஆய்வு செய்யப்பட்டுக் காலத்திற்கேற்பத் தொடர்மாற்றங்களைக் கண்டு வருகின்றன. தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் அக்காலத்தில் தமிழ்நாட்டில் பயன்பாட்டிலிருந்த பயிற்றுகருவிகளே சிங்கப்பூரிலும் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. அந்நூல்களில் காணப்பட்ட பாடப்பொருள், கருப்பொருள், உள்ளடக்கம், அணுகுமுறைகள் யாவும் தமிழ்நாட்டுச் சூழலுக்குப் பொருத்தமானவையாக இருந்தனவேயன்றிச் சிங்கப்பூர்ச் சூழலுக்கு ஏற்றவையாக இல்லை. எழுத்துமொழிக்கும் மனனம் செய்து ஒப்பிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. சிங்கப்பூர்ச் சூழலில் வளர்ந்த பிள்ளைகளுக்கு அந்தப் பயிற்றுகருவிகள் உகந்தவையாக அமையவில்லை. பேசுதல் திறனுக்கும் கேட்டல் திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்காத அந்தப் பாடநூல்களைப் படித்து வளர்ந்த மாணவர்களுக்கு வெளியுலகில் சமுதாயத்தோடு தொடர்புகொள்வதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளப் போதுமான அளவில் துணைபுரியவில்லை.

இன்று நிலை மாறிவிட்டது. மாணவர்களுக்குத் தேவையான திறன்களுக்கு முக்கியத்துவம் அளித்து, சிங்கப்பூர் மண் வாசனையுடன் தமிழ்ப் பண்பாட்டையும் கலந்து 1980கள் முதல் சிங்கப்பூரிலேயே பயிற்றுவளங்கள் உருவாக்கம் காணத் தொடங்கிவிட்டன. சிங்கப்பூர்க் கல்வியமைச்சு இதற்கெனவே ஒரு தனிப்பிரிவை 1980ஆம் ஆண்டில் ஏற்படுத்தி, பாடத் திட்டங்களை வரையறை செய்து அதற்கேற்பப் பாடநூல்களையும் பயிற்றுவளங்களையும் இன்றளவும் தயாரித்து வருகிறது. 2004-5ஆம் ஆண்டு தாய்மொழி மறு ஆய்வுக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து தேர்வு முறையிலும் பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. வாய்மொழித் தேர்வும், கேட்டல் கருத்தறிதல் தேர்வும்

சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்துத் தேர்விலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மலாய், சீனம், தமிழ் என எம்மொழி பயின்றாலும் மொழி அடைவுச் சோதனையில் ஒருமைப்பாடு காணும் வகையில் தேசியநிலைத் தேர்வுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் கற்பிக்கப்பட்ட தொடக்கப்பள்ளிகள் அனைத்தும் தமிழைப் பாட நேரத்திலேயே கற்பித்து வந்தன. ஆனால், பல உயர்நிலைப் பள்ளிகளிலும் அவ்வாறே கற்பிக்கப்பட்டாலும், சில பள்ளிகளில் மிகக் குறைவான எண்ணிக்கையிலான தமிழ் மாணவர்கள் இருந்ததால் பள்ளி முடிந்த பிறகு பிற்பகல் வேளையில் தாய்மொழியைப் பயில்வதற்காக வேறு பள்ளிக்கோ தமிழ் நிலையத்திற்கோ அனுப்பப்பட்டனர். 1998 முதல் உயர்நிலைப் பள்ளிகள் யாவும் முழுநேரப் பள்ளிகளாக மாற்றப்பட்ட நிலையில் தமிழ்மொழி ஒரு பாடமாக வழங்கப்படாத பள்ளிகளில் பயிலும் தமிழ் மாணவர்கள் தமிழைப் படிக்க உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்திற்கோ வேறு பள்ளிக்கோ செல்லும் நிலை படிப்படியாகக் குறைக்கப்பட்டது. மேலும், பல பள்ளிகளில் தமிழ்மொழி தாய்மொழிப் பாட நேரத்திலேயே கற்பிக்கப்படுகிறது. மாணவர்களின் பயண நேரத்தைக் குறைக்கக் கூடுதலான பள்ளிகள் (11) தமிழ்மொழி நிலையங்களாகச் செயல்படுகின்றன. இன்றைய நிலையில் (2016 ஜனவரி) 100 உயர்நிலைப் பள்ளிகள் தமிழைப் பாடவேளையின்போதே கற்பித்து வருகின்றன (முத்தையா, 1992). இவற்றில் உயர்தமிழ் கற்பிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கையும் (2016 நிலவரப்படி 30) கூடியுள்ளன. தொடக்கக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றன. விருப்பப் பாடமாக இலக்கியம் பயிலும் மாணவர்களும், தேசிய தமிழ்மொழி விருப்பப் பாடத்திட்டத்தில் (National Elective Tamil Language Programme) பயிலும் மாணவர்களும் உமறுப்புலவர் தேசிய வளமை நிலையத்தில் பயின்று வருகின்றனர்.

அக்காலத்தில் முறையான, பயிற்சிபெற்ற தமிழாசிரியர்கள் இல்லாத நிலை இருந்தது. அதனால் தமிழ் கற்பிக்கும் பணி ஓரளவு தமிழ் தெரிந்தவர்களின் பொறுப்பாக இருந்தது. இப்பொழுதுள்ள நிலைமை பல நிலைகளைக் கடந்து வந்துள்ளது. உள்ளூரில் தமிழில் பட்டக் கல்வியை மேற்கொள்ள வாய்ப்பு இல்லாத நிலையில் தமிழில் பட்டம் பெற விரும்பிய தமிழாசிரியர்களுக்குத் தமிழ்நாட்டிற்குச் சென்று பட்டக்கல்வி பயில வாய்ப்புகள் 1980இல் (முத்தையா, 2016) ஏற்படுத்தித்

தரப்பட்டன. 1993ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டபோது தமிழகத்தில் முறையான பயிற்சி பெற்ற அனுபவமுள்ள தமிழகத் தமிழாசிரியர்களைக் கல்வியமைச்சு படிப்படியாகப் பணியில் அமர்த்தியது. உள்ளூர் தமிழாசிரியர்களுக்கும் முறையே தேசியக் கல்விக் கழகத்தில் கூடுதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

“தமிழ்மொழி திறமை குறைந்தால் நாம் விரைவில் நம்முடைய அடையாளத்தை இழந்துவிடுவோம்.” என்னும் கோபிநாதனின் (2015, ப. 138) அக்கறைக்குரிய வரி தமிழ்மொழியறிவின் அவசியத்தை வலியுறுத்துவதாகவே உள்ளது.

இன்று நமது பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தங்கள் தாய்மொழியை முதல் பத்து ஆண்டுகளுக்குக் கட்டாயம் பயில வேண்டும். இக்கட்டாயம் வலியுறுத்தப்படவில்லையானால், பொதுமொழியாகவும் தொடர்புமொழியாகவும் உள்ள ஆங்கிலமே போதும் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துவிடுவர். தற்போது குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மிகக் குறைவான எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு இக்கட்டாயத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

மாணவர்கள் தாய்மொழியில் பின்தங்கியிருந்தாலும் அவர்கள் உயர்நிலைக் கல்விக்குப் பிறகு தொடக்கக் கல்லூரிக்குச் செல்ல வழிவிடும் நோக்கத்தில் ‘பி’ பாடத்திட்டம் (MTL ‘B’) ஆரம்பிக்கப்பட்டது (2004). அறிமுகப்படுத்தியபோது இத்திட்டத்தைப் பெற்றோர்களும் மாணவர்களும் பெரிதும் விரும்பவில்லை. ஆனால், இன்று மேல் படிப்பிற்குச் செல்லப் பிற பாடங்கள் போதும் என்று எண்ணிக்கொண்டும் மாணவர்களுள் சிலர் தமிழ்மொழி ‘பி’ பாடத்திட்டத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதற்குத் தமிழின்மீது அவர்களுக்கு ஆர்வமில்லை என்பதைவிட அறியாமையும் விழிப்புணர்வு இல்லாமையுமே காரணங்களாகும். தமிழ் மாணவர்களிடையே தமிழ்மொழி ஆர்வத்தையும் விருப்பத்தையும் எவ்வாறு வளர்ப்பது என்று அனைவரும் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

**5. மொழி வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு**

தமிழ்மொழியின் புழக்கத்தை ஊக்குவிக்க ஏட்டுக்கல்வி மட்டும் போதாது (ப. 135). இன்றைய கற்பித்தல் மாணவருக்கு முறையான மொழியறிவை வளர்க்கிறதா? மொழித்திறனை மேம்படுத்துகிறதா? மொழி உணர்வை

அளிக்கிறதா? என்பன மிக முக்கியமான சிந்தனைக்குரிய வினாக்களாகும். தங்களின் தமிழ்ப்புலமையை வளர்த்துக்கொள்வதில் 1980களில் இருந்த தமிழாசிரியர்கள் காட்டிய முனைப்பையும் ஆர்வத்தையும் இன்றைய இளம் ஆசிரியர்கள் காட்ட வேண்டும். அவர்கள் சொந்தமாகவே தமிழில் பட்டம் பெறுவதற்கான வழிவகைகளைத் தேடிக்கொண்டு சென்றனர். இக்காலத்தில் உள்ளூரிலேயே அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் செய்து தரப்படும் நிலையில் இளம் ஆசிரியர்கள் இந்த வாய்ப்புகளைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழாசிரியர் பணியில் இருக்கும்போதாவது அவர்கள் தங்களின் மொழிப் புலமையையும், பண்பாட்டு அறிவையும் வளர்த்துக்கொள்வது அவசியம் என்பதை உணர்ந்து ஆவன செய்யவேண்டும். இல்லையென்றால், இக்கால மாணவர்களுக்கு நமது பண்பாட்டையும், விழுமியங்களையும், மொழியையும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் சிரமத்தை எதிர்நோக்கக்கூடும்.

பண்பாட்டு விழுமியங்கள் விரிவாக மாணவர்களின் மனங்கொள்ளுமாறு ஆர்வத்தோடும் ஆழத்தோடும் கற்பிக்கப்பட்டால் அவர்கள் தங்கள் மொழியோடு பண்பாட்டையும் ஒருங்கே அறிவார்கள். பண்பாட்டைத் தனி ஒரு கூறாகக் கற்பித்தல் கூடாது. அவ்வாறு செய்தால் பண்பாடு பயனற்றதாகவும், மொழி தேவையில்லாததாகவும் தெரியும். மொழியையும் பண்பாட்டையும் இணைத்துக் கற்பிக்க வேண்டும். “பணியில் உள்ள ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள முறையான பயிற்சிக் களங்கள் மிகமிகக் குறைவு. இளம் ஆசிரியர்கள் தமிழ்ப்பண்பாடு தொடர்பான ஆழத்தையும் அகலத்தையும் பெற எண்ணினாலும் எங்கே, எப்படிப் பெறுவது? என்று அறியாதவர்களாக இருக்கின்றனர். அதற்குக் காரணம் அதற்கான தளங்கள் எதுவும் முறையாக ஏற்படுத்தப்படவில்லை. நம்மிடையே பண்பாட்டுப் போதகர்கள் மிகக் குறைவு. பாடத்திட்டத்தில் ஆங்காங்கே பண்பாட்டுச் செய்திகள் விரவி உள்ள போதிலும் அவற்றைப் பற்றி இன்றைய ஆசிரியர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தால்தான் அவர்கள் தங்களின் மாணவர்களுக்கு அவற்றை ஈடுபாட்டுடன் கற்பிக்க இயலும். எனவே, ‘பண்பாட்டுக் களஞ்சியம்’ என்னும் சிப்பத்தைத் தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் உருவாக்கினால் வருங்காலத்தில் மிகுந்த பயனைத் தரும். பண்பாட்டை அறிந்துகொள்ளும் வகையில் கூடுதல் பணியிடைப் பயிற்சிகளும் கருத்தரங்குகளும் நடத்தப்பட வேண்டும். தமிழாசிரியர்களாக இருக்கும் ஒவ்வொருவரும் கட்டாயம் இதில் கலந்துகொண்டு பயிற்சிபெற வேண்டும்.

வளங்களைத் திரட்டி ஒரு கட்டமைப்பின்கீழ்க் கொண்டுவந்தால் அனைவருக்கும் பயனுடையதாக இருக்கும்'' என்பன போன்ற வலிமையான கருத்துகளை மே 6, 2015 அன்று நடைபெற்ற குவிநோக்குக்குழுக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் முன்வைத்தனர். அவர்களின் கருத்து முற்றிலும் ஏற்புடையது. இதற்குக் கல்வியமைச்சும், சமூக அமைப்புகளும், சமூக ஊடகங்களும் பெரிதும் துணைபுரியலாம்.

பள்ளியின் இலக்கை அடைவதற்கும், பெற்றோர்களின் எதிர்பார்ப்பை ஈடுகட்டுவதற்கும் இன்று ஆசிரியர்களின் பணி மாணவர்களைத் தேர்வுக்குத் தயார்ப்படுத்துவதாகவே பெரும்பாலும் உள்ளது. இதற்கும் அப்பால் மாணவரிடம் மொழியறிவைத் தூண்டுவததென்பது ஆசிரியரின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் பொறுத்தே அமையும். எனவே, ஆசிரியர்கள் தமிழில் ஆழங்கால்பட்டிருப்பது அவசியம். புதிய ஆசிரியர்கள், குறிப்பாகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்களின் மொழிப்புலமையை அதிகரித்துக்கொள்ள வேண்டும். சாதாரண நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பட்டயக் கல்வி முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தமிழாசிரியர்களாகப் பணிபுரிகிறவர்கள் தங்களின் மொழி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டிய வழிவகைகளைக் கல்வியமைச்சு ஆராயவேண்டும்.

பணியிடைப் பயிற்சிகளுக்கும், விளக்கக் கூட்டங்களுக்கும் வருகைதரும் தமிழாசிரியர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்துகொண்டு வருகிறது. இதற்கு ஆசிரியர்களின் பணிச்சுமையும், பள்ளியின் குறுக்கீடும் காரணமாக இருக்கலாம். இதற்குத் தகுந்த தீர்வுகண்டு எல்லாத் தமிழாசிரியர்களும் கலந்துகொண்டு பயனடைய வகை செய்யலாம்.

### 6. மொழி வளர்ச்சியில் நாளிதழ்

கோபிநாதன் தம் கட்டுரையில், ''எத்தனை இந்தியப் பெற்றோர்கள் தமிழ் தினசரியைப் படிக்கின்றனர்?'' என்று வினவுகிறார் (2014, ப. 138). தமிழ் செய்தித்தாளைப் படிக்கும் இந்தியக் குடும்பங்களின் எண்ணிக்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதற்குத் தமிழைவிட ஆங்கிலத்தில் புலமை பெற்றிருப்பதும், ஆங்கிலச் செய்தித்தாளில் ஏராளமான செய்திகள் விரிவாக

வெளியிடப்படுவதும், தமிழ்ச் செய்தித்தாளில் மிகக் குறைந்த செய்திகளே இடம்பெறுவதும் காரணங்களாக இருக்கலாம்.

*தமிழ் முரசு* நாளிதழ் குறைந்த பக்கங்களில் வெளிவந்தாலும், உள்ளூர்ச் செய்திகளையும் வெளியூர்த் தகவல்களையும் வெளியிடுவதில் பல முன்னேற்றங்களைக் கண்டுவந்துள்ளது. இருப்பினும், அது இன்னும் தமிழ்மொழி பேசும் அனைத்துக் குடும்பங்களையும் சென்றடையவில்லை என்றுதான் கூற வேண்டும். சிங்கப்பூரில் பணியாற்றிவரும் தமிழ்நாட்டு ஊழியர்களே தமிழ்ச் செய்தித்தாள் வாங்குபவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி வருகின்றனர். தமிழ்ச் செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை இன்றைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த வேண்டும். அதே வேளையில், திங்கட்கிழமைகளிலும் புதன்கிழமைகளிலும் மாணவர்களுக்கும் இளையர்களுக்கும் ஏற்ற செய்திகளைத் தாங்கி மலரும் தமிழ் முரசு நாளிதழும் மற்றக் கிழமைகளிலும் அவர்களுக்கு ஏற்ற அங்கங்களோடு மலர வேண்டும். போதிய விற்பனை இல்லாமல் போனால் இருக்கும் ஒரே தமிழ்ச் செய்தித்தாளும் எத்தனை நாளைக்குத்தான் நீடிக்கும்?

தாய்மொழி என்பது ஒருவரது இனத்தின் தனித்துவத்தையும் வாழ்வியல் கூறுகளையும் கலாசார வெளிப்பாடுகளையும் நாகரிகங்களையும் பறைசாற்றுகின்ற சக்தியாகும். அதுவே அவரது பெருமைக்குரிய அடையாளமும் ஆகும். சமூகப் பண்பாட்டினால் உருவாகும் விழுமியங்களையும் நம்பிக்கைகளையும் அந்தச் சமூகத்திலிருக்கும் இளந்தலைமுறையினரிடம் சிறப்பாகக் கொண்டு சேர்க்க உதவுகின்ற தாய்மொழி, அச்சமூகத்தினரை ஒன்றிணைக்கப் பெரிதும் உதவும்.

“சிங்கப்பூர் எழுத்தாளர்களால் எழுதப்படும் தமிழ்ப் புத்தகங்களும் இதழ்களும் நிறைய வெளிவர வேண்டும்” (கோபிநாதன், 2014, ப. 139). இன்று சிங்கப்பூர் எழுத்தாளர்களால் எழுதப்படும் நூல்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டு வருகின்றன. எழுத்தாளர்களை ஊக்குவிக்கச் சமூக அமைப்புகளும் உதவுகின்றன. புரவலர்களும் நூல் வெளியீட்டிற்குத் தாராளமாக உதவி செய்து வருகின்றனர். சமூக அமைப்புகள் வாரந்தோறும் மாதந்தோறும் இலக்கிய வட்டம், வாசகர் வட்டம், நூலாய்வு, சிறுகதைப் போட்டிகள், எழுத்தாளர்களின் சந்திப்புகள், பயிற்சி வகுப்புகள் என நடத்தி வருகின்றன. மேலும், தேசியக் கலைகள் மன்றம் வழங்கும் தங்கமுனைப் பேனா விருது, ஆசியான் நாடுகளின் இலக்கிய விருது, கரிகாலன் விருது

போன்றவை எழுத்தாளர்களின் ஆர்வத்தைத் தூண்டி வருகின்றன. போட்டிகளும் பரிகளும் கவிதை, கட்டுரை, கதைகள் எழுதுவோரின் எண்ணிக்கையையும் தரத்தையும் கூட்டியுள்ளன.

## 7. மொழி வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

சிங்கப்பூரில் தமிழ் வார, மாத இதழ்களைத் தொடர்ச்சியாக வெளியிடுவது என்பது பெரும் சவாலாகவே உள்ளது. சிங்கை நேசன், சிங்கைச்சுடர் இதழ்கள் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. 'சிராங்கூன் டைம்ஸ்' மாத இதழும், 'தமிழ் அமுதம்' காலாண்டு இதழும் சிலரின் அரிய முயற்சியினால் நடத்தப்பட்டு வருகிறது. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் மாணவர்களுக்கேற்ற ஒரு மாத இதழை வெளியிடும் முயற்சியில் இறங்கியது. இந்தியாவில் வெளியிடப்படும் ஓர் இதழின் சிறப்புப் பதிப்பாக, சிங்கப்பூர் பிரதியாக அச்சிட்டு வெளியிட்டு வந்தது. அந்த இதழ் சிங்கப்பூர் மாணவர்களுக்குப் பொருத்தமாக அமையாததால் சங்கம் தற்போது மலேசியாவில் மாணவர்களுக்காக அச்சிடப்படும் *சுட்டி மயில்* என்னும் இதழுடன் இணைந்து சிங்கப்பூர் பதிப்பை அச்சிட்டு வெளியிட்டுப் பள்ளிகளுக்கு வழங்கிவருகிறது. போதிய ஆதரவில்லாத காரணத்தினால் இதழ்கள் சிங்கப்பூரில் வெளியிடுவது இயலாத காரியமாகவே உள்ளது. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குத் தாளாரமாகச் செலவிடும் நிறுவனங்கள், மனம் வைத்து ஒரு சிறுபகுதியை நன்கொடையாக அளித்து வந்தால் இதழ்கள் வெளிவருவதற்கும் நீடித்து நிலைப்பதற்கும் சாத்தியமுள்ளது.

உயர்நிலையிலும் தொடக்கக் கல்லூரியிலும் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் இலக்கியங்களே ஆரம்பக் காலத்தில் பாடமாக இருந்தன. இந்நிலை 2010ஆம் ஆண்டு தாய்மொழிக் கல்வி மறுஆய்விற்குப் பிறகு தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகள் குறைக்கப்பட்டு, உள்ளூர் எழுத்தாளர்களின் கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. உள்ளூர் எழுத்தாளர்களின் எழுத்துகள் கண்டுள்ள முன்னேற்றமும் வளர்ச்சியுமே இதற்குக் காரணங்காளாகும்.

## 8. மொழி வளர்ச்சியில் கலைமன்றங்கள்

"கர்நாடகக் கிராமியப் பாடல்கள், நாடகங்கள், நடனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி கவனிக்கப்பட வேண்டியவை" (கோபிநாதன், 2014, பக்கம் 139).

இன்றைய சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கைச் சூழல் கிராமியப்பாடல்களின் தேவையைக் குறைத்து வருகிறது. இருப்பினும், 1980களுக்குப் பிறகு சிங்கப்பூரில் கர்நாடக இசை மற்றும் நடன வகுப்புகளின் எண்ணிக்கையும் அவற்றைக் கற்போரின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. மாணவர்களுக்கு நற்பழக்க-வழக்கங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் விருப்பமுடைய பெற்றோர்கள் வார இறுதி வகுப்புகளுக்குத் தங்களின் பிள்ளைகளை அனுப்புகின்றனர். இங்கு இசை நடனங்களைக் கற்பிப்பவர்கள் இந்தியாவிலிருந்து வருபவர்களாக மட்டுமே இருந்தநிலை மாறி, இந்நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்-களாகவும் இருப்பது முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இருப்பினும், இவை தனித்தனிக் குழுக்களாக அவ்வப்போது கலை நிகழ்ச்சிகளைப் படைக்கின்றன. ஒருங்கிணைந்த அமைப்பாக இருந்து மொழியுணர்வோடு பண்பாட்டு உணர்வையும் ஊட்டுவனவாக இருக்க வேண்டும்.

பல நாடகக் குழுக்கள் தத்தம் உறுப்பினர்களின் தனிப்பட்ட குறிக்கோள்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்பச் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நாடகக் குழுக்களும் மேடை நாடகங்களை அரங்கேற்றுவதில் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றன. சமூக அமைப்புகள் நிதி உதவி செய்தால் நம் கலைஞர்கள் இன்னும் துடிப்பாகச் செயல்படுவார்கள். மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் மட்டுமே மையப்படுத்தும் நாடகங்களாக மேடையேற்றப்படுகின்றன. அதுவும் வயது வேறுபாடின்றி நடுத்தர வயதினர் அல்லது வயதானோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மையப்படுத்துவனவாகப் படைக்கப்படுகின்றன. இதனால், இந்நாடகங்கள் இளையர்களை ஈர்ப்பனவாகவோ பண்பாட்டு விழுமியங்களைப் போதிப்பனவாகவோ இருப்பதில்லை.

## 9. மொழி வளர்ச்சியில் வானொலியும் தொலைக்காட்சியும்

“சிங்கப்பூர் ஒலிபரப்புக்கழகத்தில் தமிழ் நிகழ்ச்சிகளின் தர உயர்வும் கவனிக்கப்பட வேண்டியவை” என்னும் கருத்து நிலவியது (கோபிநாதன், 2014 ப.139). சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகம் என்னும் அமைப்பின்கீழ் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் இயங்கி வந்துள்ளன. சிங்கப்பூரில் இந்தியர்களுக்கென 1980-களில் ஒரு செய்தித்தாளும், ஒரு வானொலி நிலையமும், ஒரு தொலைக்காட்சி ஒளிவழியும் இருந்திருக்கின்றன. அதே

ஊடகங்கள்தான் இன்றும் உள்ளன. அவற்றின் எண்ணிக்கையில் எந்தவித மாற்றமுமில்லை. தமிழ் முரசு மட்டும் பெயர் மாறாமல் தொடர்கிறது. மற்றவை அவ்வப்போது பெயர் மாற்றங்கண்டு வந்திருக்கின்றன.

அக்காலத்தில் ஒலிவழி 4 (1982) என்னும் பெயரில் ஒலிபரப்பாகிய இந்திய வானொலிச்சேவை, ஒலிக்களஞ்சியம் (1992) என்றும், ஒலி 96.8 (1997) என்றும் பெயர் மாற்றம் கண்டது. 2001 முதல் 24 மணி நேரமும் ஒலிபரப்புச் சேவையை வழங்குவதோடு இணைய ஒலிபரப்புச் சேவையையும் வழங்குவது பாராட்டுக்குரியது. இன்று இளையர்கள் முதல் பெரியவர்கள் வரை வயது வேறுபாடு இல்லாமல் வானொலி கேட்கின்றனர். தமிழ் பேசத் தெரிந்தவர்களிடையே வானொலிச் சேவை பிரபலமடைந்துள்ளது. ஆனால், வானொலி கேட்டுத் தமிழ் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டவர்கள் எத்தனை பேர்? அன்றைய வானொலி நிகழ்ச்சிகளில் மொழியின் தரம் கட்டிக்காக்கப்பட்டது. ஆனால், இன்றைய நிகழ்ச்சிகள் நடப்பியலை மையப்படுத்துவனவாக இருப்பதால் மொழியின் தரத்தில் சிதைவுகள் ஏற்படுகின்றன.

வானொலியில் பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது இன்றைய காலத்திற்குத் தேவையான ஒன்றுதான். ஆனால், பிறமொழி கலந்து பேசுவதும் (ஜில்லாக்..), உச்சரிப்புப் பிழைகளுடன் நிகழ்ச்சி படைப்பதும், கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பொருளில்லாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் மொழிச் சிதைவுக்கு வழிவகுக்குமேயன்றி ஒருபோதும் நேயர்களிடையே மொழி ஆர்வத்தைத் தூண்டாது.

செய்திகள் வாசிக்கப்படும்போது குறில் நெடில் வேறுபாட்டையும் ஒலி வேறுபாட்டையும் (குறிப்பாக ‘ழ’) கவனிக்காது வாசிக்கும்போக்கு அதிகரித்-துள்ளது. ஒரு சொல்லைத் தவறாகப் படித்துவிட்டால் அதை உடனே திருத்திக்கொள்ளும் வழக்கம் இல்லாத போக்கு பெரும் வருத்தத்தை அளிக்கிறது. அவ்வாறு செய்யும்போது பொருள் சிதைகிறது என்பதையும் தவறான செய்தி ஒலிபரப்பாகிறது என்பதையும் படைப்பாளர்கள் உணர்வதில்லை.

தொலைக்காட்சி சேனல் 8 சீன நிகழ்ச்சிகளுடன் தமிழையும் வார நாட்களில் தினசரி ஒரு மணி நேரமும் (வாரத்தில் 5 மணி நேரம்), வார இறுதியில் 10 மணி நேரமும் ஒளிபரப்பியது. பிறகு பிரைம் 12க்கு மாறி, 1995-இல் வசந்தம் செண்ட்ரல்

எனப் பெயர் மாற்றம் கண்டு, பின் 2008ஆம் ஆண்டுதான் இந்திய மொழிக்கென ஒரு தனி ஒளிவழி ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் வசந்தம் என்னும் பெயரில் வாரத்தில் 29 மணி நேரமாக இருந்த ஒளிபரப்பு நேரம் 69 மணிநேரமாகக் கூட்டப்பட்டுள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நேரம் கூட்டப்பட்டிருப்பதை நினைத்து நாம் பெருமைகொள்ள முடியாது. ஏனெனில், இந்திய மொழிகளான ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி, பெங்காளி, கன்னடம், மராத்தி ஆகிய மொழி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பு நேரத்தைப் பகிர்ந்துகொள்கின்றன. போதாத குறைக்கு அதிக அளவில் இடம்பெறும் விளம்பரங்களும் தமிழ் ஒளிபரப்புக்கான நேரத்தைப் பெருமளவில் குறைத்துள்ளன.

ஒரு வாரத்தில் 5 தமிழ்த் திரைப்படங்களும், 2 பிற இந்திய மொழித் திரைப்படங்களும், 1.30 மணி நேரம் திரைப்படங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளும், இந்திய உள்ளூர் நாடகங்களும், சமையல் நிகழ்ச்சிகளும் பெரும்பங்கு நேரங்களை விழுங்கிவிடுகின்றன. மீதமுள்ள நேரத்தில் நாட்டு நடப்புகள், கல்வி நிகழ்ச்சிகள், வரலாற்று நிகழ்வுகள் என ஒளிபரப்பப்படுகின்றன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் திரைப்படங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைப் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கோ பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளுக்கோ தருவதில்லை. வெளியூர் நாடகங்களுக்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டு உள்ளூரில் தயாரிக்கப்படும் நாடகங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவது மகிழ்ச்சி தரக்கூடிய செயலே. இருந்தாலும், நாடகங்களில் நாட்டுநடப்புகளைக் காட்டுகிறோம் என்றும், அதிகமான பார்வையாளர்களால் பார்க்கப்பட வேண்டும் என்றும் கருதி நம் பாரம்பரியத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் காற்றில் பறக்கவிடும் அளவிற்கு நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. நடப்பியலைக் காட்டுவதாக எண்ணிப் போதை, அடிதடி, தவறான உறவுகள், வஞ்சித்தல் எனக் கதைகள் ஒரு வட்டத்திற்குள் சுற்றுகின்றன. வரலாற்றுச் செய்திகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு ஒளிபரப்பான ஒரு நெடுந்தொடர் நாடகம் (அண்ணாமலை). ஜப்பானியர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழ்ப் பெண்கள் கேவலமாக வாழ்ந்ததாகப் பறைசாற்றுகிறது. இது தமிழ்ப் பெண்களையும் இனத்தையும் இழிவுபடுத்தும் அளவில் உள்ளது என்பதைத் தயாரிப்பாளர்கள் உணரவேண்டும். இம்மாதிரியான நாடகங்களைப் பார்க்கும்

இளந்தலைமுறையினரிடையே எத்தகைய சிந்தனைகளை விதைக்கும் என்பதை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாணவர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் நாடகங்களின் கருப்பொருள் யதார்த்தங்களைப் படம்பிடித்துக் காட்டுவதாக எண்ணிக்கொண்டு தயாரிப்பாளர்கள் சிலர் ஆங்காங்கே நடைபெறும் ஒரு சில தவறுகளையும் அக்கறைக்குரிய செயல்களையும் தங்கள் நாடகங்களில் மிகைப்படுத்தி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றனர். அப்படிப்பட்ட நாடகங்களை உருவாக்குவோர் அவற்றால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அத்தகைய நாடகங்கள் நம் மொழியையும் பண்பாட்டையும் பெருமையையும் பார்வையாளர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்குமா என்று சிந்திக்க வேண்டும். 'தூள்' போன்ற போட்டி நிகழ்ச்சிகளால் சமுதாயத்திற்கு என்ன நன்மை என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இத்தகைய நாடகங்களையும் நிகழ்ச்சிகளையும் பார்க்கும் இந்தியப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளையும் இப்படி ஆகிவிடக்கூடாது என்ற அச்சத்திற்கு ஆளாகின்றனர். நாம் பல்லினச் சமுதாயச் சூழலில் வாழும்போது மற்ற இனத்தவர்கள் நம் நாடகங்களைப் பார்த்து நம் பண்பாட்டைக் குறைத்து மதிப்பிட நாம் வாய்ப்பளிக்கக் கூடாது.

இவற்றுக்குப் பதிலாக இளையர்களிடையே மொழி ஆர்வத்தை வளர்க்க அதிகமான கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்தும், நாட்டுநடப்பு, தொழில் முனைப்பு, தன்முனைப்பு, கருத்துக்களம் போன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியும், ஆங்காங்கே பள்ளிகளிலும், கல்வி நிலையங்களிலும், சமுதாயக்கூடங்களிலும் நடக்கும் நிழ்ச்சிகளைத் தொகுத்தும் வழங்கலாம். இவ்வாறு செய்வதன்மூலம் மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்க முடியும். நாமும் இவர்களைப்-போலப் போட்டிகளிலும் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறுவார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைப் பங்குபெற ஊக்குவிப்பதோடு வேண்டிய உதவிகளையும் செய்வர். இதனால் இளையர்களிடையே மொழிப்புழக்கம் அதிகரிக்கும்.

ஊடகங்கள் கல்விசார்ந்த செய்திகளை வெளியிடுவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கல்வி நிலையங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினால் பங்கேற்ற மாணவர்களுக்குப் பெருமையாக இருக்கும். பார்க்கும் மாணவர்களுக்குத் தாமும் இதுபோல் கலந்துகொள்ள வேண்டும் என்ற

ஆர்வம் பிறக்கும். மொழியின் வளர்ச்சிக்கு இத்தகைய நடவடிக்கைகள் பெரிதும் துணைபுரியும்.

சிங்கப்பூர் இளையர்களுக்கு நம் பண்பாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றியும் பாரம்பரியக் கலைகளைப் பற்றியும் இயல்பாக அறிய வாய்ப்பில்லை. விழாக்காலங்களின்போது அவ்விழாவின் முக்கியத்துவம், கொண்டாடப்படும் விதம் முதலானவற்றை ஒளிபரப்பும்போது சரியானதைத் தெரிந்து கற்றுக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். மொழியோடு பண்பாட்டுத் தொடர்பையும் அறிந்து-கொள்ளும்போதுதான் அதன் சிறப்பை அவர்கள் உணர்வார்கள். மேலும், இந்தியப் பாரம்பரிய நடனங்கள், வாய்ப்பாட்டு, கச்சேரிகளுக்கு இடமளிக்க வேண்டும்.

அக்காலக்கட்டத்தில் வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் கால அளவு குறைவாக இருந்தபோதும் நிகழ்ச்சிகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். இதிலிருந்து எவ்வளவு நேரம் ஒலிபரப்பப்படுகிறது என்பதைவிட எவ்வளவு தரமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன என்பதில்தான் கவனமாக இருந்துள்ளனர். ஏனெனில், அப்பொழுதுதான் தமிழ் உயர்வானதாக, பண்பாட்டுச் செறிவுள்ளதாக, மதிப்புமிக்க மொழியாகப் போற்றப்படும்: இளையர்களால் கற்கப்படும் என ஆய்வாளர்கள் கருதியுள்ளனர்.

ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் தரமான மொழியைப் பயன்படுத்த வேண்டும். படைப்பாளர்களின் உச்சரிப்பிலும், அவர்களின் நடை உடை பாவனைகளிலும் மொழியும் பண்பாடும் கட்டிக்காக்கப்பட வேண்டும். நம் நாட்டில் இருக்கும் ஒரே செய்தித்தாளான தமிழ் முரசு பல வழிகளில் மெருகூட்டப்பட்டிருப்பதும், பல தரப்பட்ட வாசகர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் வகையில் செய்தியை வெளியிடுவதும் பாராட்டுக்குரியது. அதே சமயம் மொழியைக் கையாளுவதில் பிழையின்றித் தரமான மொழிநடையைப் பின்பற்ற வேண்டும்.

ஊடகங்கள், பதிப்புத்துறை, அறிவிப்புப் பலகைகள், விளம்பரங்கள், பிரசுரங்கள், அரசாங்க வெளியீடுகள், அறிக்கைகள் போன்றவற்றில் இடம்பெறும் தமிழ் வாசகங்களைச் சரிபார்த்து அனுமதியளிக்க ஒரு மையம் தேவை. தற்போது அவரவர் போக்கிற்கேற்பவும், கூகல் மொழிபெயர்ப்புடனும் அச்சிடுகின்றனர். தமிழ்

ஓர் உயர்ந்த இடத்தில் இருந்தும் அடிக்கடி பிழைகளோடு வெளிவருகின்ற நாளிதழைப் படிப்பது வருத்தமளிக்கிறது. இதைப் படிக்கும் மாணவர்களும் பொதுமக்களும் அதுதான் சரியான வடிவம் எனத் தவறாக எண்ணிவிடக்கூடும் என்பதை ஊடகத்துறையினர் மறந்துவிடக்கூடாது.

## 10. மொழி வளர்ச்சியில் சமூக அமைப்புகளின் பங்கு

'தமிழ்மொழியின் வளர்ச்சியில் சமூகத்தின் அக்கறையும் கல்வித்துறையின் ஈடுபாடும் இன்றியமையாதது' (கோபிநாதன், 2014, ப. 136). தமிழ்மொழியை வளர்ப்பதற்காகச் சமூக அமைப்புகளும் சங்கங்களும் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகளை நடத்துகின்றன. இப்போட்டிகள் எந்த அளவிற்குத் தமிழைப் பேசவும் வளர்க்கவும் உதவுகின்றன? ஏற்பாட்டாளர்களின் நோக்கமும், களமும், பங்களிப்பும் வெவ்வேறாக இருப்பதனால் எதிர்பார்த்த அளவு உண்மையான மொழி உணர்வை ஊட்டுகிறதா என்பது சிந்திக்கத்தக்கது.

நடத்தும் போட்டிகள் மாணவர்களின் மொழித்தரம், ஆர்வநிலை, போட்டி நடத்தும் முறை, தேர்வு செய்யும்விதம் போன்றவை மாணவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இருக்க வேண்டும். போட்டிகள் மாணவர்களின் வயதையும் பயிலும் நிலையையும் கவனத்திற்கொண்டு நடத்தப்பட வேண்டும். பொதுவாக மேல் உயர்நிலை, கீழ் உயர்நிலை என்று நடத்தும்போது அதில் உயர்தமிழ் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கே முன்னுரிமை தரப்படுவதும் அவர்களே பரிசுகள் பெறுவதும் வழக்கமாக உள்ளது. விரைவுநிலை, வழக்கநிலையில் (ஏட்டுக்கல்வி) பயிலும் மாணவர்களுக்கு அடுத்தடுத்த நிலையிலேயே வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அடிப்படைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இதுபோன்ற வாய்ப்புகள் எட்டாக் கனியாகவே ஆகிவிடுகின்றன.

சமூக அமைப்புகள் மாணவர்களுக்கு நடத்தப்படும் தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழாசிரியர்களோடு இணைந்து நடத்தும்போது நிகழ்ச்சிகளின் தரம் மேம்படுவதோடு மாணவர்களின் ஈடுபாடும் அதிகரிக்கும். போட்டிகளுக்கு நடுவர்களாக அழைக்கும்போது பிரபலங்களை அழைப்பதில் தவறில்லை. ஆனால், மாணவர்களின் இன்றைய நிலையைப் புரிந்துகொண்டிருப்பவர்களாகவும் அவர்களுடன் தொடர்புடையவர்களாகவும் இருப்பதோடு மொழியறிவும் பண்பாட்டுணர்வும் மிக்கவர்களாக இருப்பவர்களை அழைக்க வேண்டும்.

ஆடல் பாடல் நிகழ்ச்சிகளை நடத்தினால் மட்டுமே தமிழ் வாழும் மொழியாக இருக்கும் என்னும் எண்ணப்போக்கு அதிகரித்து வருகிறது. கலை நிகழ்ச்சிகள் ஓர் அங்கமாக இருப்பதில் தவறில்லை. ஆனால், அதுவே முழு நிகழ்ச்சியாக அமைவதால் நோக்கம் பாதிப்புறுகிறது.

நிகழ்ச்சிகள் யாவும் தமிழில் நடைபெற வேண்டும். தமிழ் அமைப்புகளும் சமூக நிலையங்களும் மற்ற இன உறுப்பினர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக நிகழ்ச்சிகளை ஆங்கிலத்தில் வழிநடத்துவதும், ஆங்கிலத்திலேயே பேசுவதும் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இந்நிலை நீடிக்குமானால் தமிழ் மறந்து ஆங்கிலமே இவர்களின் பேச்சு மொழியாகிவிடும்.

சமூக அமைப்புகளால் நடத்தப்படும் போட்டிகளின் தரத்தை யாரும் சோதிப்பதில்லை. நோக்கம் நிறைவேறியுள்ளதா எனக் கருத்துக்கணிப்பும் செய்வதில்லை. சமூக அமைப்புகளை ஒருங்கிணைத்துப் போட்டிகளை நெறிப்படுத்தும் முறை இருக்குமாயின் ஒரு குறிப்பிட்ட நாளில் பல போட்டிகள் பல இடங்களில் நடைபெறுவதைத் தவிர்க்கலாம். பரவலாக ஆண்டுதோறும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றால் இன்னும் கூடுதலான மாணவர்கள் பங்கேற்பார்கள். அதே சமயத்தில் தேர்வுக் காலங்களில் பல போட்டிகள் நடத்தப்படுவதால் விருப்பமுள்ள மாணவர்களால்கூடக் கலந்துகொள்ள இயலாமல் போய்விடுகிறது.

## 11. மொழி வளர்ச்சியில் குடும்பங்களின் பணி

வீட்டில் தாத்தா பாட்டியருடன் இருக்கும் பிள்ளைகள் வீட்டுச் சூழலில் தமிழ் பேச வாய்ப்பிருக்கிறது. ஆனால், இன்று இளம் பெற்றோர்கள் புதியதாக வீடு வாங்கிக்கொண்டு தனியே சென்று விடுவதாலும், முதியோர்களை அவர்களின் நலன் கருதி முதியோர் இல்லங்களில் தங்க வைப்பதாலும் தாத்தா பாட்டியினர் பேரப்பிள்ளைகளுக்கிடையே உள்ள உறவில் அவ்வளவாக நெருக்கமில்லை. சில குடும்பங்களில் பணிப்பெண்களாகத் தமிழ் தெரியாதவர்கள் வேலையில் அமர்த்தப்படுவதால் அவர்களிடம் வளரும் பிள்ளைகள் தாய்மொழியைக் கேட்டு வளரும் சூழ்நிலை மாறி, பணிப்பெண் மொழி பேசும் குழந்தைகளாக வளர ஆரம்பிக்கின்றனர்.

''தமிழ் மொழியைக் கட்டிக்காக்கும் முக்கியப் பணி பெற்றோர்களின் கைகளில் அடங்கியுள்ளது'' தேவன் நாயர்–(ப. 136)

"ஒரு மொழி மக்களின் தொடர்பை இழந்து விடுமானால் அது உயிருள்ள, வலுவுள்ள, மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு பொருளாக இருப்பதைவிடுத்து, தன் வீரியத்தையிழந்து உயிரற்ற செயற்கைப் பொருளாகிவிடும்...' (Dinamani, 2010) என்னும் கூற்றும், "குழந்தை தன் முதல் பாடத்தைப் படிப்பது தாயிடமிருந்துதானே! ஆகவே, குழந்தைகளின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழியையல்லாது வேறொரு மொழியை அவர்கள் மேல் சுமத்துவது நாட்டுக்குச் செய்யும் பெரிய பாவம் என்றே நான் கருதுகிறேன்...'' என்னும் காந்தியடிகளின் கூற்றும் நினைவிற்கொள்ளத் தக்கவை.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அங்கு இடம்பெறும் நிகழ்ச்சிகளைப் பற்றித் தங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடலாம். பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுடன் தாங்களும் சேர்ந்து பங்குபெறலாம். தங்களுக்கு நேரம் இல்லை என்றால் பிள்ளைகளையாவது அனுப்பி வைக்கலாம். அவர்கள் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, தங்கள் பிள்ளைகளுடன் அன்றைய நிகழ்ச்சியைப் பற்றிக் கலந்துரையாடினால் மொழிப்புழக்கம் மேலும் அதிகரிக்கும். விழாக்கள் கொண்டாடுவதன் மூலமும், வீட்டில் இந்தியப் பண்பாட்டைக் கடைப்பிடிப்பதன்வழியும் பண்பாட்டு விழுமியங்களைப் பிள்ளைகளுக்கு உணர்த்தலாம். தாங்கள் இழந்ததைத் (மொழியை, பண்பாட்டை) தங்களின் குழந்தைகளாவது பெறுவதற்குப் பெற்றோர்கள் ஆவன செய்யவேண்டும்.

**மொழியும் பண்பாடும்**

'பள்ளி செல்லும் மாணவர்களிடையே ஆங்கிலம் அதிகமாகப் பயன்படுத்தப்படுதல் எதிர்வரும் ஆண்டுகளில் அதையே இந்திய சமூகத்தின் தொடர்பு மொழியாக ஆக்கிவிடக்கூடும்' (கோபிநாதன், 2014, ப. 136)

மற்ற இனத்தவர்கள் அவர்களுக்குள் அவர்களின் தாய்மொழியில் பேசிக்கொள்வதைப் பெருமையாக நினைக்கின்றனர். ஆனால், தமிழர்கள் ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதையே சுலபமாக நினைக்கின்றனர். உலகளாவிய நிலையில் ஒரு மொழி அதுவும் ஆங்கிலம் மட்டுமே போதும் என்றும், அதன்வழியே

வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுவிடலாம் என்றும் கருதுகின்றனர். பிற மொழியின் வாயிலாகத் தமிழ்மொழியின் பண்பாட்டை அறிந்துகொள்வது சக்கையாகத்தான் இருக்குமே தவிர, சாரமுள்ளதாக அமையாது. இத்தகைய நிலை நீடித்தால் காலப்போக்கில் பண்பாட்டின் முக்கியத்துவம் மறைந்து சடங்குபூர்வமான ஒன்று தேவையா எனக் கருதி ஒதுக்கிவிடும்நிலை ஏற்படுவது உறுதி.

## 12. மொழியும் இன அடையாளமும்

“கலாசாரமற்ற பொருளாதார அல்லது மற்ற காரணங்கள் தமிழை வாழ வைக்க முடியாது” (கோபிநாதன், 2014, ப .138). உலகத் தாய்மொழி நாளாகப் பிப்ரவரி 21ஆம் தேதியை யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது. அன்னையர் தினம், அன்பர்கள் தினம் கொண்டாடுவதுபோல இந்நாளையும் சமுக அமைப்புகள் பிரபலமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அன்றைய தினம் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தாய்மொழியின் முக்கியத்துவத்தையும் பண்பாட்டையும் வலியுறுத்தலாம்.

‘இளம் சமுதாயத்துக்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருவதிலும், மாணவர்களைப் பண்படுத்தி நல்ல குடிமக்களாக உருவாக்குவதிலும், நற்பண்புகளை விதைத்துச் சான்றோராக்குவதிலும் தாய்மொழியின் பங்கு இன்றியமையாதது (அக்னிபுத்ரன்). இதற்குச் சான்றாகச் சீனா, ஜப்பான், ஜெர்மனி, தென் கொரியா போன்ற சில நாடுகள் தங்களுடைய தாய்மொழியை மட்டுமே நம்பி எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆங்கிலத்தை அவர்கள் சர்வதேச உறவுக்காக மட்டும்தான் பயன்படுத்துகின்றனர் என்ற உண்மையை நம் இளையர்களுக்கு உணர்த்த வேண்டும்.

‘மொழி திறமை குறைந்தால் அடையாளத்தை இழந்துவிடுவோம். மொழி – கலாசாரம் – இனம் சமன்பாட்டை அரசாங்கம் வலியுறுத்துகிறது’ (2014, 138). ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால், அவ்வினம் பயன்படுத்தும் மொழியை முதலில் அழிக்க முயற்சித்தாலே போதுமானது. விரைவிலேயே அவ்வினமே அழிந்துவிடும். ஒரு மனிதனுக்குத் தெரிந்த மொழியைப் பேசினால் அது அவன் அறிவை மட்டுமே

அடையும், அதுவே அவன் தாய்மொழியில் சொன்னால் அவன் இதயத்தைச் சென்றடையும்' என்று நெல்சன் மண்டேலா கூறுவது முற்றிலும் உண்மை.

தற்பொழுது இளந்தலைமுறையினருக்காக நாம் என்ன பண்பாட்டுக் கொள்கையை வகுத்துள்ளோம் என்று சமூக அமைப்புகளும் கல்வியாளர்களும் சிந்திக்க வேண்டும். ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பண்பாட்டுக்கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றவா என மீள்பார்வையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விழாக்களும் கொண்டாட்டங்களும் விமரிசையாகக் கொண்டாடப்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுவது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், இளந்தலைமுறையினரை இத்தகைய நிகழ்ச்சிகள் எந்த அளவிற்கு ஈர்க்கின்றன? அவர்களின் பங்கேற்பு இல்லையெனில் பிற்காலத்தில் நம் பாரம்பரியத்தை யார் பின்பற்றுவார்கள்?

தமிழ்மொழி விழா ஒவ்வோராண்டும் அரசாங்கத்தின் உதவியோடு பல்வேறு சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து ஒரு மாதம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் இந்த நிகழ்ச்சிகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? நோக்கம் எந்த அளவிற்கு நிறைவேறியுள்ளது? தமிழ்ச் சமூகம் வகுத்துக்கொண்ட பயனை அடைந்துள்ளதா? குறைநிறைகள் ஆராயப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளனவா என மதிப்பிடுவதும் மேம்படுத்துவதும் அவசியம்.

தமிழ்மொழி விழா நிகழ்ச்சிகளில் மிகச் சிலரே கலந்துகொள்கின்றனர். குறிப்பாக, மாணவர்களும் தமிழாசிரியர்களும் எதிர்பார்த்த அளவில் கலந்து-கொள்வதில்லை என்ற குறைபாடு நிலவுகிறது. அதற்கான காரணங்களை யாரும் அறிய முற்படுவதாகத் தெரியவில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொள்ளும் வகையில் நிகழ்ச்சி நடத்தும் நேரமும் காலமும் இருக்க வேண்டும். தமிழை இன்றைய இளையர்கள் ஆர்வத்தோடு பயன்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

போட்டிகள் மட்டுமே மொழியை வளர்த்துவிடா. மாணவர்கள் மொழியையும் பண்பாட்டையும் ஆழமாக அறிந்துகொள்ளும் வண்ணம் பல்வேறு பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏப்ரல் மாதத்தில் மட்டுமே ஏராளமான நிகழ்ச்சிகள் நடத்துவதைக் குறைத்துக்கொண்டு ஆண்டு முழுவதும் பல்வேறு காலக்கட்டங்களில் நடத்த வேண்டும். தேர்வுக் காலங்களைக் கவனத்திற்கொண்டு

இளையர்களின் தேவைகளை அறிந்து அவர்களை நிகழ்ச்சியின்பால் ஈர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும். பரிசுகள் மட்டுமே மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்திவிடா. அன்றாட வாழ்க்கைச் சூழலோடு தொடர்புடைய வகையிலும் ஓரிடத்தில் கற்றவற்றைப் பயன்படுத்தும் வகையிலும் திட்டமிட வேண்டும்.

## 13. பரிந்துரைகள்

- மாணவர்களுக்கு வாசிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சுவையான கதைக்களம் அறிமுகமாக வேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மாணவர்களிடையே மொழியைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வழிவகைகளில் எழுத்தாளர்களும் பதிப்பகத்தாரும் கவனம் செலுத்த வேண்டும்.

- ஆங்கில மொழியில் வெளிவருவதுபோல தமிழில் நூல்கள் அழகிய வடிவமைப்பிலும், கருத்துகளைச் சொல்வதிலும் எளிமையையும் கவர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். விற்பனையை மட்டுமே கவனத்திற்கொள்ளாது தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் நாட்டங்கொள்ள வேண்டும்.

- ஊடகங்கள் தங்களின் இலக்குகள் எதுவாயினும் மொழியின் வளர்ச்சிக்கும் பயன்பாட்டிற்கும் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தமிழைப் பிழையின்றிப் பயன்படுத்த வேண்டும். பொதுமக்களுக்குத் தரமான தமிழை வழங்குவதில் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். பொதுவாக மொழி வளர்ச்சியில் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் பெரும் பங்குண்டு. எனவே, தமிழ் ஊடகங்களின் மொழிப்பயன்பாடு செம்மைபடுத்தப்பட வேண்டும். ஒருங்கிணைந்த மொழிபெயர்ப்பும் சொற்கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும்.

- நம் மாணவர்களை 21ஆம் நூற்றாண்டிற்குத் தயார்செய்யும் அதே வேளையில், தமிழ்மொழியை அவர்கள் மத்தியில் வாழும் மொழியாக்குவதை உறுதிப்படுத்தவும் வேண்டும். அதற்குத் தமிழாசிரியர்களாகிய நமது பங்கு என்ன? தமிழை மட்டும் கற்பித்துவிட்டுக் கடமை முடிந்தது என்றிருப்பதா? அல்லது நம் இந்திய மாணவர்களின் முழுமையான வளர்ச்சியில் நமது முழு அக்கறையைச் செலுத்துவதா? சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

- சிண்டா போன்ற சுய உதவிக் குழுவுடனும் பெற்றோர்களுடனும் சமூக அமைப்புகளுடனும் இணைந்து நமது இந்திய மாணவர்களின் நலன் கருதி, அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு நாம் பாடுபட வேண்டும்.

- தமிழாசிரியர்களான நாம் நமது மாணவர்கள் தமிழ்மொழியை விரும்பிப் படிக்குமாறு பாடங்களை அமைக்க வேண்டும். கல்வியமைச்சு உருவாக்கி வழங்கிவரும் பயிற்றுவளங்களையே பெரிதும் நம்பியிருக்காமல் மாணவர்களின் திறனறிந்து பொருத்தமான பயிற்றுவளங்களை உருவாக்கிப் பயன்படுத்துதல் நலம் பயக்கும்.

- வகுப்பறை நடவடிக்கைகள் தமிழை ஒரு தேர்வுப் பாடமாகக் கற்பிக்காமல் மொழி அறிவை வளர்ப்பதாகவும், மொழியுணர்வை ஊட்டுவதாகவும், பண்பாட்டு விழுமியங்களைக் கற்பிப்பதாகவும் இருக்க வேண்டும்.

- இளையர்களிடத்தில் மொழியை வளர்ப்பதில் ஆசிரியர்களோடு சமூக அமைப்புகளும், தொண்டூழிய அமைப்புகளும், கலை மன்றங்களும் இணைந்து செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றி இலக்கை விரைவில் அடைய இயலும்.

- மொழியின் வளர்ச்சி பல்வேறு அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டில்தான் உள்ளது. மாணவர்களின் ஈடுபாடு – பெற்றோர்களின் தூண்டுதல் – சமுக அமைப்புகளின் ஆதரவு – ஊடகங்களின் பங்களிப்பு – ஆசிரியர்களின் முயற்சி – அரசாங்கத்தின் ஒத்துழைப்பு ஆகியவை ஒருங்கிணையும்போதுதான் ஒரு மொழி வாழும் மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும். கடந்த 25 ஆண்டுகளில் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் முன்னேற்றம் காணப்பட வேண்டிய கூறுகள் இன்னும் பல உள்ளன.

**தொகுப்புரை**

சுமார் 35 ஆண்டுகளுக்குமுன் பேராசிரியர் கோபிநாதன் அவர்கள், சிங்கப்பூரில் தமிழ்மொழி குடும்பமொழியாவதிலும் பயன்படுத்துவதிலும் கண்டறிந்து கூறிய கருத்துகளில் பல இன்றைய நிலையிலும் களையப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. சமூக அமைப்புகளின் எண்ணிக்கையும், அவைகள் நடத்தும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. ஆனால், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையிலோ, இளையர்களைக் கவர்வதிலோ, நோக்கங்களை நிறைவேற்றுவதிலோ எத்தகைய முன்னேற்றங்களைக் கண்டுள்ளன என்பது சிந்திக்கத்தக்கது.

கடந்த 35 ஆண்டுகளில் மக்களின் வாழ்க்கைத் தரமும், வசதி வாய்ப்புகளும் பெருமளவு முன்னேற்றங்கண்டு வந்துள்ள அளவிற்கு மொழிப்பற்றும், பண்பாட்டில் உள்ள ஈடுபாடும் அதிகரித்துள்ளதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தாய்மொழிக் கல்விக்கொள்கைகள் காலந்தோறும் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அதைச் செயற்படுத்துவதில் அரசாங்கத்தின் முயற்சியும், அதற்கான நிதி உதவியும் பெரும்பான்மையான மொழிகளுக்குத் தரும் அதே அந்தஸ்தைச் சிறுபான்மையினர் பேசும் மொழிக்கும் தந்து வருகிறது. ஆனால், சீன, மலாய் மொழி பேசும் இளையர்களிடம் காணப்படும் மொழிப்பற்றும், பண்பாட்டு விழுமியங்களும் தமிழ் மாணவர்களிடையே குறைவு என்று கருதத் தோன்றுகிறது.

சமூக ஊடகங்கள் வியாபார நோக்கமின்றிச் செயல்பட முடியாததும், மற்ற மொழி ஊடகங்களுடன் போட்டித்தன்மையை எதிர்நோக்குவதும், அதற்காக நிகழ்ச்சிகள் தயாரிப்பதில் நெகிழ்வுத் தன்மையைக் கையாள்வதும் காலத்தின் கட்டாயம் என்பதை மறுப்பதற்கில்லை. அதே சமயம், மொழிச் சிதைவையும், பண்பாட்டுச் சீரழிவையும் ஊக்குவிக்கா வண்ணம் நிகழ்ச்சிகள் அமையும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவர்களுடைய முக்கியக் கடமையாகும். நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் படைப்பதிலும் இளையர்களுக்கு வாய்ப்பளிப்பது பாராட்டத்தக்கது. இருப்பினும், அவர்கள் முன்னோடிகளின் வழிகாட்டுதலோடு நெறிப்படுத்தப்பட வேண்டும். ‘ஊர்க்கூடித் தேர் இழுத்தல்’ என்ற சிந்தனையைச் சற்றே ஒதுக்கிவைத்துவிட்டு,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள்: 517)

என்பதற்கேற்பப் புதுமையும் பழமையும் இணைந்து புத்தாக்கத்துடன் உயிரோட்டமுள்ள வகையில் மொழியுணர்வோடு ஒன்றுபட்டுப் பண்பாட்டுக் காவலர்களாகத் திகழ வேண்டும். அவ்வாறு செய்தால் மொழியிலும் பண்பாட்டிலும்கூட நாம் மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழலாம்.

**துணை நூற்பட்டியல்**

அக்னிபுத்ரன். (2016). தாய்மொழி ஒரு இனத்தின் பண்பாட்டு வளர்ச்சி. http://www.tamilmantram.com/vb/archive/index.php/t-14185.html இணையத்தளத்திலிருந்து பெற்றது.

கல்வி அமைச்சு. (2005). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வுக் குழு அறிக்கை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு. (2011). *2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கோபிநாதன், எஸ். (2014). *சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும்.* சிங்கப்பூர்: ஆசிரியர்.

முத்தையா. சி. (1992). சிங்கப்பூரில் தமிழ். *முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு.* பப. 24-25.

முத்தையா, சி. (2016). தொலைபேசி உரையாடல்.

திருவள்ளுவர். (தே.இ.). *திருக்குறள்.* http://sri-lankan.net/thirukkural/517.html இணையத்தளத்திலிருந்து பெற்றது.

Dinamani. (2010). Retrieved from http://www.dinamani.com/editorial-articles/2010/feb/24/தாயை மறந்த தமிழ் மக்கள் -147729.html இணையத்தளத்திலிருந்து பெற்றது.

Hindi Society. (2016). Retrieved from http://www.hindi-society.com/

Mani, A. & Gopinathan, S. (1983). Changes in Tamil language acquisition and usage in Singapore: A case of subtractive bilingualism. *Southeast Asian Journal of Social Science*, 11(1), 104-117.

Shanmugam, K. (2015). Status of Tamil Language in Singapore: An Analysis of Family Domain. *Education Research and Perspectives: An International Journal.* 42, 25-64.

**உதவிய நூல்கள்**

Chew, S. K. (1956). *Report of the All-Party Committee of the Singapore Legislative Assembly on Chinese education* . Singapore: Govt. Printer.

Arasaratnam, S. (1979). *Indians in Malaysia and Singa*pore (2nd ed.). Kuala Lumpur: Oxford University Press.

Gopinathan, S., Pakir, A., Kam, H. W., & Saravanan, V. (Eds.) (1998). Language, *Society and Education in Singapore: Issues and Trends*. Singapore: Times Academic Press.

Gopinathan. S. (1980). Language policy in education: A Singapore perspective. In E. A. Afendas & C. Y. Khoo (Eds.) *Language and Society in Singapore.* Singapore: Singapore University Press.

Kuo, C. Y. E. (1993). The status of English in Singapore: A sociolinguistic analysis. In Crewe, William (Ed.) *The English Language in Singapore*. Singapore: Eastern Universities Press.

Mani. A. (1993). Indians in Singapore Society. In K S Sandhu & A. Mani, *Indian Communities in Southeast Asi*a. Singapore: Institute of Southeast Asian Studies, Times Academic Press.

*Ramakrishnan, R. (1989).The organised management of Tamil language In Singapore: A kaleidoscope description of the different aspects and the problems involved.* Singapore: National University of Singapore.

Sandhu, K S. (2006). Indian Immigration and Settlement in Singapore (2nd Ed). Singapore: Institute of Southeast Asian Studies.

Singapore Department of Statistics. (1990). c*ensus of population.* Singapore: Ministry of Trade & Industry.

Singapore Department of Statistics. (2000). *census of population.* Singapore: Ministry of Trade & Industry.

Singapore Department of Statistics. (2010). *census of population.* Singapore: Ministry of Trade & Industry.

# சிங்கப்பூரில் இருமொழியமும் இருமொழிக் கல்வியும்

**திரு வீரமுத்து கணேசன்**
வழிகாட்டு ஆசிரியர் (தமிழ்மொழி)
அண்டர்சன் தொடக்கக் கல்லூரி

**திருமதி ஷாமினி சந்திரசேகர்**
**மெரிடியன் தொடக்கக் கல்லூரி**

---

**கட்டுரைச் சுருக்கம்**

சிங்கப்பூரில் இருமொழிக்கொள்கை உருவாகி வளர்ந்த சூழலையும் இக்கொள்கை நமது கல்விக்கொள்கை மீது ஏற்படுத்திய தாக்கத்தையும் கட்டுரை ஆராய்கிறது. இருமொழிக் கல்வியின் நோக்கம், அவசியம், பயன் ஆகியவற்றை விளக்குவதோடு அதில் உள்ள வாய்ப்புகளையும் இடர்ப்பாடுகளையும் எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இருமொழிக் கொள்கைக்கு வித்திட்ட வரலாற்றுச் சூழலைப் பின்னோக்கிப் பார்ப்பதோடு அதன் சமூகப் பரிமாணங்களைக் காண்பது அவசியம். இடைப்பட்ட காலத்தில் இருமொழிக் கொள்கைத் திட்டத்தில் ஏற்பட்ட தொய்வுகளை அடையாளம் கண்டு, அவற்றைக் களைவதற்கான பரிந்துரைகளும் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. இக்கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு கருத்துகளைத் தொகுக்கத் தொடக்கக் கல்லூரி ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன்வழித் தொடக்கக் கல்லூரி பாடக்கலைத்திட்டத்திற்கு ஏதுவான மாற்றங்களும் தேவையான பரிந்துரைகளும் திரட்டப்பட்டன. *இருமொழிக் கொள்கை: நேற்று இன்று நாளை* என்னும் கண்ணோட்டத்தில் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் கடப்பாடுகொண்ட கல்வியாளர்கள், கட்டுரையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளை ஆராய்ந்து நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் செய்தால் எதிர்காலத்தில் இருமொழித்திறன்மிக்க சமுதாயத்தை உருவாக்கி வளர்த்தெடுக்க முடியும் என்பது எங்களது நம்பிக்கை. இவ்வகையில், சிங்கையில் தாய்மொழி நீடித்த புகழும் நிலைத்த வாழ்வும் பெறும் என்பது திண்ணம்.

**முன்னுரை**

சிறந்த குடிமக்களை உருவாக்குவதே கல்வியின் அடிப்படை நோக்கம். தன்னம்பிக்கைக்கும் புத்துருவாக்கத்திற்கும் வழிவகை செய்யாத எந்தவொரு கல்வியாலும் பெரும் பயன் கிட்டாது. இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களை மாணவர்கள் பெறுவதற்கு அவர்கள் பெற்றிருக்கும் மொழிப்புலமை மிகவும் கைக்கொடுக்கிறது. மொழிப்புலமை என்பது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திலும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்திலும் சிறந்து விளங்குவதைக் குறிப்பிடுகிறது. ஆங்கிலத்தோடு தாய்மொழியையும் அறிந்து இருமொழிகளிலும் புழங்கும்நிலை இருமொழியம் எனப்படுகிறது (கோபிநாதன், 2014, ப. 151). இருமொழியைப் பயன்படுத்துபவர் இருமொழியாளர் எனப்படுகின்றார். கல்வி கற்றோர் பலர் இருமொழிகளில் அடிப்படை மொழித்-திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

சிங்கப்பூரில் சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கும் அதிகாரத்துவ மொழிகளாக உள்ளன. இருப்பினும், ஆங்கிலமே அலுவலக மொழியாகவும், கல்வி நிலையங்களில் முதன்மைப் பயிற்றுமொழியாகவும், பல்வேறு இனத்தவரின் தொடர்பு மொழியாகவும் கோலோச்சுகிறது.

**1. சிங்கப்பூர்: வரலாற்றுக் கண்ணோட்டம்**

வரலாற்றுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் சின்னஞ்சிறிய குடியரசு நாடான சிங்கப்பூர் இன்று வளர்ச்சி கண்ட ஒரு நாடாகத் திகழ்வதற்கு வணிகம், தகவல் தொடர்புத்துறை, நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் கண்டுள்ள முன்னேற்றங்கள் முக்கியக் காரணங்களாகும். இதற்கு நம் நாட்டின் புவியியல் அமைவிடமும் குடியேறியவர்களின் தொழில் முனைப்புத் திறமையும் அடிப்படைக் காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (கோபிநாதன், 2014, ப. 141). மேலும், நிலைத்து நின்று சீராக இயங்கும் அரசியலும் அதன் நிர்வாகத் திறமையும் நம் நாட்டின் வெற்றிக்கு வழிவகுத்தது.

ஸ்டாம்ஃபோர்டு இராஃபிள்ஸ் 1800-களில் சிங்கப்பூரைக் குடியிருப்பாக மாற்ற முயன்றார். சிங்கப்பூர் 1900களில்தான் பெரும்பாலும் குடியிருப்பு நாடாக வளரத் தொடங்கியது எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். ஆங்கிலேயரின் ‘சரக்கூடு மாற்றல்’ என்னும் பொருளாதாரத் திட்டத்தினால் இது சாத்தியமாயிற்று.

இந்நூற்றாண்டிலும் இதே ரீதியான பொருளாதாரத் திட்டமே சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. தொடர்ந்து பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் இங்குக் குடியேறுவதைக் காண்கிறோம். அக்காலச் ‘சரக்கூடு மாற்றல்’ என்னும் திட்டமே இன்று நவீனமயமாகிச் சிங்கப்பூரை வணிக மையமாக்கியுள்ளது. இத்திட்டம் 1900களில் எவ்வாறு அண்மை சேய்மை நாட்டினரைக் கவர்ந்திழுத்ததோ அது போலவே இன்றும் பலர் வணிகப் பொருளாதார நோக்கங்களின் காரணமாகவே சிங்கப்பூரை நாடி வருகின்றனர்; குடியேறி வருகின்றனர்.

அக்காலக்கட்டத்தில் பல்வேறு இனத்தைச் சார்ந்த குடியேறிகளின் எண்ணிக்கையைப் பொறுத்துச் சிங்கப்பூர் பன்மொழிச் சமுகமாகத் திகழ்ந்தது. ஹாக்கியன், தியோசியோவ், கான்டனீஸ், மாண்டரின், மலாய், தமிழ், மலையாளம், பஞ்சாபி, ஆங்கிலம் போன்ற பல மொழிகள் பேசப்பட்டன. 1930களில் பள்ளிகளில் நான்கு விதமான கல்விமுறை செயல்பாட்டில் இருந்தது. குறிப்பாக ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ்ப் பள்ளிகள் இருந்தன. ஆனால், இவை மக்களிடையே இணக்கமான ஒரு பொதுத் தொடர்புமொழிக்கு வழிசெய்ய இயலவில்லை. ஆனால், இவை மக்களிடையே பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக் காரணமாய் அமைந்தன. அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சி ஆங்கிலப் பள்ளிகளில் கவனஞ்செலுத்தியது. அது ஆங்கிலக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியது. 1959ஆம் ஆண்டு சிங்கப்பூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மக்கள் கட்சி, சிங்கப்பூர்க் குடியுரிமை உள்ளவர்களுக்கும் சிங்கப்பூரில் உள்நாட்டில் படித்தவர்களுக்கும் வேலை அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. ஆங்கில அறிவும் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் ஆங்கிலக் கல்வி பயின்றோருக்கே வாய்ப்புகள் அதிகம் வழங்கப்பட்டன. எனவே, ஆங்கிலம் முக்கியம் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக நிலவியது.

இந்த மனப்பான்மை இன்றும் தமிழரிடையே வேரூன்றியுள்ளது என்றே கருத வேண்டும். இதன் காரணமாகத் தாய்மொழியின்பால் உள்ள ஈடுபாடு குறைந்த வண்ணம் உள்ளது. தமிழ் முதன்மையான வீட்டுமொழியாக இருந்தநிலை மாறிவிட்டது. குடும்பங்களில் ஆங்கிலமே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது (கல்வி அமைச்சு, 2011, ப. 2).

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அரசாங்கம் எடுத்துவரும் மக்கள்தொகைக் கணக்கு வழியாக நாம் சிங்கப்பூரில் உள்ள மொழிகளின் வளர்ச்சியையும் போக்குகளையும் உணர முடிகிறது. இந்த ஆய்வின்வழிச் சிங்கப்பூரில் தமிழ்மொழியின் புழக்கம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் 1957ஆம் ஆண்டு 4.8 விழுக்காடாக இருந்த தமிழ்மொழிப் புழக்கம், 1970ஆம் ஆண்டு 3.8 விழுக்காட்டிற்குக் குறைந்தது. தற்போது 2016ஆம் ஆண்டில் 3.3 விழுக்காட்டிற்குச் சரிந்துள்ளது. சிங்கப்பூரில் இந்தியர்களின் எண்ணிக்கை குறைவு என்றாலும் பின்பற்றும் சமயம், பேசும் மொழி எனப் பலவழிகளில் அவர்கள் மாறுபட்டவர்கள். எனவே, தமிழை ஓரளவுக்கு மட்டுமே பயன்படுத்த முடிகிறது. தமிழ்மொழியின் எதிர்காலநிலை உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும் (குவோ, 1976, கோபிநாதன், 2014, ப. 140).

## 2. சிங்கப்பூரில் இருமொழிக் கொள்கை உருவாகிய சூழல் (1950கள் முதல் 1960கள் வரை)

வரலாற்றைச் சற்று உற்று நோக்கினால், 1960களில் புதுக்குடியரசாக உருவாகிய சிங்கப்பூர், மற்ற வளரும் நாடுகளைப்போல் நமது அரசாங்கம் கல்விக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுத்தது. வலுவான நாடாகத் திகழக் கல்வியின் தேவையை நன்குணர்ந்த நமது அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தின் பட்டியலில் கல்விக்கான செலவுத் தொகையை இரண்டாவதாக வைத்திருந்தது. மேலும், அரசியல் நிலைத்தன்மை, பொருளியல் வளர்ச்சி போன்ற செல்நெறிகளைத் தொடர்ந்து பேண வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருந்தது. புதிய தலைமுறை அரசியல்வாதிகளை உருவாக்குவதிலும் இனவாத அரசியல் பிரச்சினைகள் மீண்டும் எழாமல் இருப்பதிலும் அரசாங்கம் உன்னிப்பாக இருந்தது.

சிங்கப்பூரில் கல்வி, திறமை, பன்னாட்டுக் கருத்துகள், அறிவை வரவேற்கும் திறந்த மனப்பான்மை போன்றவை ஊக்குவிக்கப்பட்டன. இவற்றில் வளர்ச்சி காண ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. நவீனமயமாகும் உத்வேகத்தில் சிங்கப்பூரர்கள் தாம் "'ஆசியர்' என்னும் உணர்வை இழந்து, பண்பாடிழந்தவர்களாக ஆகிவிடுவார்களோ என அரசாங்கம் கவலைப்பட்டது" (கோபிநாதன், 2014, ப. 147). எனவே, தாய்மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது வலியுறுத்தப்பட்டது. அதோடு, பண்பாட்டுப் பாரம்பரியங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு பெருமிதம்கொள்ளத் தாய்மொழி அவசியம் என்பதே இருமொழிக் கல்விக்கான கருதுகோளாக இருந்தது (கோபிநாதன், 2014). அக்காலக்கட்டத்தில்தான் அறநெறிக் கல்வியும் சமயக் கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆகவே, சிங்கப்பூரின் மொழிக்கொள்கையானது அக்காலக்கட்டத்தில் நமது அரசாங்கம் எதிர்நோக்கிய சவால்களைக் கருத்திற்கொண்டு எழுந்தவை. கல்விசார்ந்த நோக்கங்கள் மட்டுமல்லாமல் சமூக ரீதியான தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் அவை அமைந்தன. மொழிக்கொள்கையின் முதல் நோக்கம் வெவ்வேறு இனங்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதாகும். இரண்டாவதாக, மொழியை ஒரு சமூக வளமாகப் பார்க்க வேண்டிய சூழல் நிலவியதாகும். பெரும்பாலும் 1955-60களில்தான் இருமொழிக்கொள்கை வேரூன்றத் தொடங்கியது. உலகப் பொருளியலில் நுழையவும் உயர்தர தொழில்நுட்பத்தைப் பெறவும் ஆங்கிலமே உதவும் என்பதால் ஆங்கிலம் முதன்மை மொழியாக ஏற்கப்பட்டது. ஆனால், அதே வேளையில் தாய்மொழிகளின் முக்கியத்துவத்தை இழந்து விடக்கூடாது என்பதால் இருமொழிக் கொள்கையானது கல்வித்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டது (கோபிநாதன், 2014). தாய்மொழியானது உணர்வுபூர்வமான மனோபலத்தைத் தரும் என்றும், அடிப்படையில் நாம் ஓர் ஆசிய சமுதாயம் என்னும் அடிப்படை பண்பாட்டு உணர்வை இழக்காமல் இருக்கவேண்டும் என்றும் நமது அரசாங்கம் வலியுறுத்தியது.

மேலைநாட்டினர் பாணியில் நவீனமயமாதலினால் ஒழுக்கநெறிகளைச் சிங்கப்பூரர்கள் இழந்துவிடக்கூடாது என்பதையும் வலியுறுத்த இருமொழிக்கல்வி உதவியது. பன்னாட்டு நிறுவனங்களின் மேலாதிக்கம்

ஆங்கிலப் புலமைக்கே முக்கியத்துவம் கொடுத்தது. இதனால், வழிவழியாகச் செயல்பட்டுவந்த குலமரபுச் சங்கங்கள், மொழிச் செய்தித்தாட்கள், சங்கங்கள், மொழியாசிரியச் சங்கங்கள் வலுவிழந்து வரும் சூழல் ஏற்பட்டது. இதனைச் சமாளிக்க மதிப்புமிக்க கருவியாகத் தாய்மொழி செயல்படும் என அரசாங்கம் நம்பியது. பொருளாதார நோக்கமும் மாண்டரின் மொழி அதிகாரத்துவ மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணமாகவும் அமைந்தது. சீன நாட்டின் சந்தைகள் நுழையவே மற்றக் கிளைமொழிகளைக் காட்டிலும் பொதுமொழியாக மாண்டரின் மொழி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகவே, பன்மொழிச் சமுதாயமாகத் தொடங்கிய நமது குடியரசில் நான்கு அதிகாரத்துவ மொழிகள் அறிவிக்கப்பட்டன. மலாய்மொழி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நான்கு அதிகாரத்துவ மொழிகள் நாடாளுமன்றத்திலும், சட்டங்களிலும், செய்தி பரப்பும் அரசின் வானொலி நிலையங்களிலும், பத்திரிகைகளின் புழக்கத்திலும் கொண்டுவரப்பட்டன (கோபிநாதன், 2014).

### 3. சிங்கப்பூரில் இருமொழிக் கொள்கை

உலகப் பொருளாதாரம் அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் பங்குகொண்டு வெற்றி பெற ஆங்கில மொழியறிவு மிகவும் அவசியமாகக் கருதப்பட்டது. அதேவேளையில் நமக்குரிய கலாசாரங்களில் பொதிந்துள்ள விழுமியங்களையும் ஆசிய மொழிகளையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ளுவதும் முக்கியமாகக் கருதப்பட்டது. ஆகவே, நடைமுறைத் தேவைகளுக்கு ஏற்பச் சிங்கப்பூரில் இருமொழிக் கொள்கை வகுக்கப்பட்டது.

பல்லின மக்கள் தம் கலாசார மரபுகளைப் பேணும் நோக்கத்தில் ஒவ்வோர் இனத்தவரும் ஆங்கிலத்தோடு தம் தாய்மொழியையும் (சீனம், மலாய், தமிழ்) கற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நான்கு மொழிகளுக்கும் சம உரிமை உண்டு. இவையே சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவமாகும்.

“சிங்கப்பூரில் இருமொழிக் கொள்கை உள்ளதால், ஆங்கிலம் அத்துடன் தாய்மொழியையும் சிறு வயதிலேயே கற்றுக்கொள்ளவில்லை

என்றால் அது பின்னர்ச் சிரமமான ஒன்றாகிவிடும்" என்று முன்னாள் பிரதமர் திரு. லீ குவான் இயூ கூறியுள்ளார். நவீனமயமாக்கும் உத்வேகத்தில் சிங்கப்பூரர்கள், தாம் 'ஆசியர்' என்னும் உணர்வை இழந்து, பண்பாடு இழந்தவர்களாக ஆகிவிடுவார்களோ - பண்பாட்டை ஓடிப்போகவைத்து-விடுவார்களோ என்று அரசாங்கம் கவலைப்பட்டது. எனவே, தாய்மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. பண்பாட்டுப் பாரம்பரியங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு பெருமைப்பட மொழி எத்துணை அவசியம் என்பது இருமொழிக் கல்விக்கான கருதுகோளாகவும் (உள்ளுறையாக) சாராம்சமாகவும் இருந்தது (கோபிநாதன், 2014, ப. 147).

பன்மொழிக் குழுவினரும் இனக் குழுவினரும் வாழும் சிங்கப்பூரானது உயர்ந்த வளர்ச்சியைப் பெறவேண்டுமானால் எவ்வித மொழிப் பிரச்சினைக்கோ, இனப் பிரச்சினைக்கோ இடந்தரலாகாது என்பது நம் சிங்கப்பூர்த் தலைவர்களின் தீர்மானமாகும். அதன் விளைவாக உருவானதே சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கை. இது சிங்கப்பூரின் வளர்ச்சிக்குப் பேருதவியாய் அமைந்தது. சிங்கப்பூரின் பெரும் வளர்ச்சிக்கு இன, மொழிப் பிரச்சினையற்ற சூழல் பெரிதும் உதவியது. இதனால், பன்னாட்டுச் சூழலில் பல துறைகளிலும் இடையூறு இன்றிச் சிங்கப்பூர் முன்னேற முடிந்தது. பொருளாதார வளர்ச்சியில் சிறப்பாகவும் விவேகத்துடனும் ஈடுபட்ட சிங்கப்பூரின் வெற்றிக்கு இன, மொழிப் பிரச்சினையற்ற அமைதிச்சூழல் ஒரு முக்கியக் காரணமாகும்.

வேற்றினங்களுக்கிடையே சிறந்த தொடர்பு இருப்பது தேசிய ஐக்கியத்துக்குத் தேவை. அதேவேளை பொருளாதாரம் அறிவியல் துறைகளிலும் சிங்கப்பூர் மக்கள் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம். இதன் காரணமாக, ஆங்கிலமொழியையும் பல்லின மக்கள் தமது கலாசார மரபுகளைப் பேணிக்கொள்ளத் தமது தாய்மொழியையும் (சீனம், மலாய், தமிழ்) கற்றுக்கொள்ள வேண்டும். இந்நான்கு மொழிகளுக்கும் சம அந்தஸ்து உண்டு. இவையே சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவமாகும்.

"நமது தாய்மொழியில் மட்டும் நாம் தேர்ச்சி பெற்றவர்களாயின் நாம் வாழ்வாதாரம் என எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஆங்கிலத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றிருந்தாலும் பின்தங்க நேரிடும். நமது கலாசார

அடையாளத்தை இழக்கும் நிலை உண்டு. உலகில் நமக்குரிய இடத்தையும் இழக்க நேரிடும் எனச் சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் இயூ (2000) கூறியுள்ளார் (கோபிநாதன், 2014).

உலகப் பொருளாதாரத்தில் பங்குகொள்ள ஆங்கிலமொழியறிவு தேவை, அதேவேளையில் நமக்குரிய கலாசாரங்களில் பொதிந்து காணப்படும் விழுமியங்களையும் ஆசிய மொழிகளையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டுமென்ற நடைமுறைத் தேவைகளுக்குகேற்பவே இருமொழிக் கொள்கை வகுக்கப்பட்டது.

தாய்மொழியோடு ஏனைய பாடங்களும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும்போது ஒவ்வொரு சிங்கப்பூர் மாணவரும் பள்ளிக் கல்வியைக் கற்று முடிக்கும்போது ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பார். தமது இனக்குழுவுடன் தாய்மொழியிலும் ஏனைய இனக்குழுவினருடன் ஆங்கிலத்திலும் தொடர்புகொள்ள இருமொழிக் கொள்கை வகை செய்யும். சிங்கப்பூர் உலகப் பொருளாதாரத்தில் தலைநிமிர்ந்து நிற்கவும் அதன் கலாசார விழுமியங்களை உள்வாங்கிக்கொள்ளவும் இவ்வாறான இருமொழிக் கல்வி உதவும். ஆங்கிலமானது வர்த்தகம், தொழில்நுட்பம், நிர்வாகம்சார்ந்த மொழி; சீனம், மலாய், தமிழ் ஆகியன மாணவர்களின் மரபுரிமை, கலாசார விழுமியங்கள்சார்ந்த மொழிகள்.

## 4. நடைமுறையில் இருமொழிக் கொள்கை

ஆங்கிலத்தையும் தாய்மொழியையும் கற்பிக்கும் இருமொழிக் கொள்கை 1966இல் ஆரம்பக் கல்வியிலும் 1969இல் இடைநிலைக் கல்வியிலும் அறிமுகம் செய்யப்பட்டது. ஆங்கிலம் பயிற்றுமொழி, தாய்மொழி கலாசார, விழுமிய நோக்கத்துக்கான ஒரு பாடம் என்னும் முறையில் அறிமுகம் செய்யப்பட்ட இருமொழிக் கொள்கை, சிங்கப்பூரின் அரசியல், பொருளாதார, தேசிய சாதனைக்கான ஓர் அடித்தளம் என்பது அரசாங்கத்தின் கருத்து. மேலும், 1979இல் மேற்கொள்ளப்பட்ட கல்விமுறைபற்றிய ஓர் ஆய்வின்படி மாணவர்கள் எதிர்பார்த்தபடி இருமொழிகளில் சரியான தேர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை.

மாணவர்களுள் 40 விழுக்காட்டினரே இருமொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். கல்வி அமைச்சின் கருத்தின்படி இருமொழித் தேர்ச்சி பரவலாக இடம்பெறவில்லை. ஆங்கிலம் உட்பட தாய்மொழி எழுத்தறிவும் திருப்திகரமாக இருக்கவில்லை.

இதனால், கல்விமுறையில் ஏற்பட்ட வளங்களின் விரயத்தைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சு சில பரிந்துரைகளைச் செய்தது. ஆங்கிலமொழி, தாய்மொழி ஆகிய இரு மொழிகளுடன் மேலும் ஒரு மூன்றாவது மொழியைக் கற்க அனுமதி வழங்கப்பட்டது. இருமொழிகளில் தேர்ச்சி பெற முடியாத மாணவர்கள் ஆங்கிலத்தைச் செம்மையாகக் கற்கவும் ஆற்றல்மிக்க மாணவர்கள் மேற்கண்டவாறு மூன்றாவது மொழியைக் கற்கவும் அனுமதிக்கப்பட்டனர். மொழிக் கல்வியில் இவ்வாறான ஒரு நெகிவுத்தன்மைமிக்க கொள்கை பரிந்துரைக்கப்பட்டது.

மொழிக் கல்வியில் இத்தகைய சிறு சிறு மாற்றங்களுக்கு இடமளித்தாலும் அடிப்படையில் ஆங்கிலவழிக் கல்வி, தாய்மொழிக்கல்வி என்னும் அடிப்படைக் கொள்கை தொடர்ந்து அரசாங்கத்தால் 1987லும் 1991லும் வலியுறுத்தப்பட்டது. அதாவது, சர்வதேசப் பொருளாதார முறையில் பங்குகொள்ளல், தேசிய ஐக்கியத்துக்குத் தேவையான பொதுமொழி என்னும் அடிப்படையில் ஆங்கிலமொழி அறிவும் ஆங்கிலவழிக் கல்வியும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டன.

சிங்கப்பூரில் இருமொழிகளில் எழுத்தறிவைப் பெறுவது ஓர் அடிப்படைக் கல்விக் கொள்கையாக நன்கு வேரூன்றிவிட்டது. மிக அண்மைக்கால ஆய்வுகளின்படி சிங்கப்பூரில் வாழும் எல்லா இனத்தவர்களும் இருமொழித் தேர்ச்சியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கையின் தாக்கம்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரின் கருத்தின்படி, இக்கொள்கையானது சிங்கப்பூரின் பொருளாதார வெற்றிக்கும், அரசியல் சமூக உறுதிப்பாட்டிற்கும், தேசிய வளர்ச்சிக்கும் பெரிதும் உறுதுணையாக அமைந்திருப்பது புலனாகிறது.

## 5. தாய்மொழி கற்றலுக்கு 25 மில்லியன்

அண்மையில் (செப்டம்பர் 2015இல்) பிரதமர் திரு லீ சியன் லூங் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிக்கையில், தமிழ், மலாய், சீனம் ஆகிய தாய்மொழிகளின் கற்றலையும் பயன்பாட்டையும் ஊக்குவிக்கும் பொருட்டு, இம்மூன்று மொழிகளுக்கான வளர்ச்சிக் குழுக்களும் அடுத்த ஐந்தாண்டுகளில் ஐம்பது விழுக்காடு அதிக நிதி பெறும் என்றும் தாய்மொழி கற்றலுக்கு 25 மில்லியன் நிதி பெறும் என்றும் அறிவித்தார். எதிர்வரும் ஆண்டுகளில் தாய்மொழிக் குழுக்கள் பல்வேறு மொழிசார்ந்த நடவடிக்கைகள் நடத்தவும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கவும் இந்த நிதி வழங்கப்படுகிறது. நிதி உதவியை அதிகப்படுத்தியதன்வழித் தாய்மொழிக்கான வளர்ச்சிக் குழுக்கள் அதிகளவு மாணவர்கள் பயனுறும் வகையில் மொழிசார்ந்த நிகழ்ச்சிகளை விரிவாக்க முடியும் என்றும் சமூகப் பங்காளிகளும் குடும்பங்களும்கூட இதன் ஒரு பகுதியாகத் திகழ முடியும் என்றும் பிரதமர் கூறினார். ''நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது தாய்மொழிகளை வாழும் மொழிகளாக்குவோம்'' என்றும் பிரதமர் வலியுறுத்தினார் (லீ, 2015).

மேலும், பிரதமர் சிங்கப்பூரில் நடப்பில் உள்ள இருமொழிக் கொள்கைபற்றி விளக்கும்போது, ''சிங்கப்பூரில் அனைத்து இனங்களும் பொதுவான ஒரு மொழியின் மூலம் இணைந்து வேலை செய்யவும் தொடர்புகொள்ளவும் சமவாய்ப்புகளை வழங்கும் பொருட்டு ஆங்கிலமொழி பயன்படுத்தப்படுகிறது. அதனால்தான் ஆங்கிலம் முதல்மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. அதே நேரம் நமது தாய்மொழிகளை வளர்த்து, போற்றிப் பாதுகாத்து வாழும் மொழிகளாக நிலைத்திருக்கச் செய்ய நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டியுள்ளது. நமது மரபுகள், நற்பண்புகள், கலாசாரம் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துவது தாய்மொழிதான்'' என்று குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலம், தாய்மொழி ஆகியவற்றின் ஆற்றல் உலகளவில் சிங்கப்பூரைப் போட்டித்தன்மையுடன் விளங்கச் செய்யும். அதனால்தான் நமது இருமொழிக் கொள்கை அத்தியாவசியமான ஒன்றாகத் தொடர்கிறது (லீ, 2015).

சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதற்காகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்த் தாய்மொழி வளர்ச்சிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பள்ளிகளுக்கு அப்பால் தாய்மொழிகளைக் கற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் சாதகமான

சூழலை உருவாக்கத் தாய்மொழி வளர்ச்சிக் குழுக்கள் உதவி செய்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு நிகழ்ச்சிகளை அவை தொடர்ந்து நடத்தியுள்ளன. தமிழ்மொழிக்கான குழுவாகிய *வளர்தமிழ் இயக்கம்* ஆண்டுதோறும் தமிழ்மொழி மாதத்தில் தீவு முழுவதும் அதிக அளவில் பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதோடு தமிழ்மொழி விழாவையும் நடத்தி வருகிறது.

இருமொழிக் கொள்கை சிங்கப்பூரின் வளப்பத்திற்கும் தேச நிர்மாண முயற்சிகளுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது என்கிறார் துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம் (2003).

### 6. சிங்கப்பூரில் தமிழ்மொழி

சிங்கப்பூர், தென்கிழக்காசிய நாடுகளுள் ஒரு சின்னஞ்சிறிய தீவு. இருப்பினும், பொருளாதாரச் செழிப்புமிக்க நாடு. இங்குத் தமிழ்மொழி ஓர் அதிகாரத்துவ மொழியாக அமைந்து இன்று கோலோச்சுகிறது. சிங்கப்பூர் மக்கள் தொகை சுமார் 5.5 மில்லியன். இதில் சுமார் ஒன்பது விழுக்காட்டினர் இந்தியர். இவர்களுள் 54.2 விழுக்காட்டினர் தமிழர்கள் (SINDA, 2011).

தமிழர் உலகில் குடியேறியுள்ள வேறு எந்த நாடுகளிலும் தமிழைப் பேணிக் காப்பதற்கு இல்லாத வாய்ப்பு வசதிகள் சிங்கப்பூரில் உள்ளன. சிங்கப்பூர் அரசாங்கத்தால் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் வளர்ச்சிக்குப் அது பேராதரவு நல்கி வருகிறது. இன்றைய சூழலில் தமிழ்மொழியைக் கற்பதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பும் வசதியும் பெருகியுள்ளன. ஆனால், இந்த வசதியும் வாய்ப்பும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தல் அவசியமாகிறது.

தமிழ்மொழியின் பயன்பாடு குறித்த அண்மைய ஆய்வுகள் வீட்டுச்சூழலிலும் வெளிச்சூழலிலும் தமிழ்மொழிப் புழக்கம் குறைந்து வருதாகவே எடுத்துக்கூறுகின்றன. சிங்கப்பூர்த் தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளும்போது, தமிழைப் பயன்படுத்துவது குறைந்து வருகிறது என்று தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வுக் குழு அறிக்கை 2010 (கல்வி அமைச்சு, 2011, ப. 21) வெளியிட்டுள்ளது. இதற்குப் பல்வேறு

காரணங்கள் கூறப்பட்டாலும் மிக முக்கியமாக மூன்று காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் தமிழர்கள் சிறுபான்மையினர்.

2. கல்விக்கூடங்களிலும் வெளியிடங்களிலும் ஆங்கிலமொழியின் ஆதிக்கம். பள்ளிகளில் இரண்டாவது மொழியாகவே தமிழ்மொழி பயிற்றுவிக்கப்படுகிறது.

3. தமிழர்கள் தங்களது தாய்மொழியைப் பயன்படுத்தாமல் புறக்கணிப்பது.

இவற்றுள் முதல் இரண்டு காரணங்களை நம்மால் மாற்றியமைக்க முடியாது. ஆனால், மூன்றாவது காரணத்தை நாம் நினைத்தால் மாற்றியமைக்க முடியும். அதற்குப் பெற்றோர்கள், இளையர்கள், தமிழாசிரியர்கள், கல்வி அமைச்சு ஆகியவற்றோடு ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் மனம் வைக்கவேண்டும்.

ஒரு மொழி பயன்பாட்டினின்று குறைவதால் அம்மொழி மெல்ல மெல்ல மறையும் அபாயம் உள்ளது. மக்களின் அன்றாட நடைமுறை வாழ்விற்குப் பயன்தாராத ஒரு மொழி உயிர் வாழ இயலாது. பல்லின மக்கள் வாழும் சிங்கப்பூரில் ஆங்கிலம் பொதுவான தொடர்பு மொழியாக இருந்தாலும், அவரவர் பண்பாட்டை நன்கு உணரத் தாய்மொழிதான் முக்கியமாக இருக்கிறது. அதற்காகவே சிங்கப்பூரின் முதல் பிரதமர் திரு லீ குவான் இயூ அவர்கள் தாய்மொழியுடன் இணைந்த இருமொழிக் கொள்கையை வகுத்ததாக, அண்மையில் அமைச்சர் திரு ஈஸ்வரன் கூறியிருக்கிறார் (2009).

### 7. வீட்டுச்சூழலில் மொழிப் பயன்பாடு

மொழிப் பயன்பாட்டில் வீட்டுச்சூழல் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இன்று பெற்றோர் இருவரும் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் தமிழில் குறைவாகவே பேசுகின்றனர். இன்னும் சில இடங்களில் அறவே தமிழைப் பயன்படுத்துவது இல்லை. ஆக, முதலில் பெற்றோர்கள் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். பெற்றோர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய முக்கியக் கருத்து என்னவென்றால், தங்கள்

பிள்ளைகள் எவ்வளவுதான் படித்துப் பெரும் அறிவாளிகளாகத் திகழ்ந்தாலும் இவ்வுலக வாழ்விற்குரிய அறநெறிகளும் மரபுசார்ந்த கலை, கலாசார விழுமியங்களும் பெற்றிருக்க வேண்டும். அதற்கு மிகவும் முக்கியம் தாய்மொழி. இல்லாவிட்டால், சொந்த அடையாளத்தையே இழந்துவிடக்கூடிய அபாயம் நேரிடலாம். தங்கள் பிள்ளைகள் முகவரியைத் தொலைத்தவர்களாக மாற வாய்ப்புண்டு. ஒவ்வோர் இனத்தவரும் அவரவர் மரபுவழிப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கத் தாய்மொழி மிகவும் அவசியமான ஒன்றாகிறது.

நல்ல அறநெறிகளை மொழி வாயிலாகக் கற்பிக்க நம் தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கிய வளங்கள் குவிந்து கிடக்கின்றன. தற்போது *தமிழ் மின்மரபுடைமைக் குழு* கடந்த 50 ஆண்டுக்காலச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய நூல்கள் மின்வடிவமாக்கியுள்ளது (NLB, 2015). இவற்றையெல்லாம் பயன்படுத்தி வாழ்வியல் விழுமியங்களைப் பெற்றால்தான் பிள்ளைகளின் எதிர்காலம் செம்மையாக அமையும். தமிழும் வாழும் மொழியாகச் சிங்கப்பூரில் வளம்பெறும். இதற்குப் பெற்றோர்கள் மனத்தளவில் பெரும் மாற்றம் பெறுதல் அவசியமாகிறது.

## 8. தற்போதைய சவால்கள்

சிங்கப்பூரில் தமிழ் இளையர்கள் தமிழ்மொழியில் உரையாடுவது குறைந்து வருகிறது என்பது அண்மைய ஆய்வு (கல்வி அமைச்சு, 2011) (தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வுக் குழு அறிக்கை, 2010) கூறும் மற்றோர் உண்மையாகும். இளையர்கள் இருவர் ஒருவரையொருவர் சந்திக்கும்போது தத்தம் தாய்மொழியில் உரையாடும் மனப்பக்குவம் அடைந்துவிட்டால் உயரிய இடத்தைத் தமிழ்மொழி இங்கே பிடித்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மேலும், தாய்மொழியில் பேசினால்தான் பிற சமுதாய மக்களுக்கு மத்தியில் தங்களது அடையாளத்தை நிலைநிறுத்திப் பண்பாட்டுச் சிறப்புமிக்க ஒரு வாழ்க்கை முறையைப் பெற இயலும் என்பதை இளையர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். “உணர்ச்சி-ரீதியாக ஏற்றுக்கொள்ளும்படியான மொழியாக நாம் தாய்மொழியைக் கொண்டிருக்கவில்லை என்றால் உணர்ச்சிரீதியாக ஊனப்பட்டிருப்போம். நம்மைப்பற்றி நாமே ஐயுறுவோம்; தன்னம்பிக்கை குறைந்தவர்களாக இருப்போம்” (லீ குவான் இயூ, 1984, கோபிநாதன், 2014, ப. 149).

இருமொழிக் கொள்கைகளைச் செயல்படுத்த நமது அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்து வந்துள்ள போதிலும் இந்தக் கொள்கை பல சவால்களை எதிர்நோக்கவே செய்கிறது. முதலாவதாக, ஆங்கிலமொழியின் ஆதிக்கத்தைக் குறைக்க முடியாத சூழல். அரசாங்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய துறைகளில் ஆங்கிலத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம், பல தருணங்களில் தாய்மொழிகளின் முக்கியத்துவத்தை மக்களின் பார்வையில் குறைத்துவிடுகிறது. இதனால், இளம் சிங்கப்பூரர்கள் தாய்மொழிக் கல்வியைத் தேர்வுக் கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கின்றனர். கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டதனாலேயே குறைந்தபட்சம் உயர்நிலைவரை அதனைப் பாடமாகப் பயில்கின்றனர். அந்நிலையைக் கடந்து மொழிப் பாடங்களைப் புகுமுக வகுப்பிலும் பல்கலைக்கழகங்களில் ஆர்வத்துடன் பயில முன்வருவதில்லை. அடிப்படையில் தாய்மொழிக் கல்வியில் பொருளாதார ஆதாயம் இல்லை என்ற எண்ணப்போக்கு இளம் சிங்கப்பூரர்களிடம் வேரூன்றியுள்ளது. அதனையும் கடந்து ஆர்வத்துடன் தாய்மொழிப் பாடத்தைப் பயில வாய்ப்புகளும் வசதிகளும் குறைவாகவே உள்ளன. உதாரணத்திற்கு, தொடக்கக் கல்லூரிகளில் H2 பாடமாக வழங்குதில் பல சிக்கல்கள் அடங்கியுள்ளன. பாட அட்டவணை இடங்கொடுக்காத காரணத்தால் தாய்மொழியை H2 பாடமாகப் பயிலும் வாய்ப்பைப் மாணவர்கள் பலர் இழக்கின்றனர்.

தாய்மொழியில் திறமையும் ஆர்வமும்கொண்ட மாணவர்களே உயர்நிலைப் பள்ளிகளில் உயர் தாய்மொழிப் பாடத்தைப் பயிலும் வாய்ப்பை நமது கல்வி அமைச்சு வழங்க வேண்டும். பல "மேல் தரப் பள்ளிகளில்" அட்டவணைச் சிக்கல்களைச் சமாளிக்க அனைவருக்கும் உயர் தாய்மொழி பயிலும் வாய்ப்பை வழங்குவதால் இறுதியில் இரண்டு சலுகைப் புள்ளிகளுக்காகவே உயர் தாய்மொழிப் பாடம் பயிலும் சூழலைப் பொதுவில் காண்கிறோம்.

தாய்மொழிப் பாடத்தை வெறும் பல்கலைக்கழக அனுமதிக்கான தேவை எனப் பார்க்காமல் எதிர்காலத்தில் பயன்மிக்க ஒரு மொழித்திறமையாகப் பார்க்க ஊக்குவிக்க வேண்டும். இதற்கு அவர்களின் ஆர்வநிலைக்கேற்பப்

பாடங்களை வடிவமைத்தல் வேண்டும். பிற்காலத்தில் தங்கள் பொதுவறிவைத் தம் தாய்மொழியிலும் பகிர்ந்துகொள்ள, நடப்பு விவகாரங்களைப் பற்றித் தத்தம் இன ரீதியான கண்ணோட்டத்தில் அலசி ஆராய்ந்து கருத்துதிர்ப்புச் செய்ய ‘மொழியாக்கத் திறன்’ என்னும் புதிய பாடத்தை உருவாக்கி, புகுமுக தாய்மொழிக் கல்வியில் அறிமுகப்படுத்தலாம். அப்பாடத்தைத் தாய்மொழியில் கற்பிக்க வேண்டியது அவசியம். இந்தத் திறன் புகுமுக வகுப்பு மாணவர்களை உலகளாவிய சிந்தனைகளைத் திறம்பட இருமொழிகளிலும் ஆராய உதவும்.

இன்று இளையர்கள் சமூக வலைத்தளங்களைப் பெரிதும் பயன்படுத்துவதால் அங்கும் தமிழ்மொழியைக் கொண்டு சேர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. புழக்கத்தில் உள்ள தமிழ் மென்பொருள்கள் போக, மேலும் நவீன மென்பொருள்கள், செயலிகள் உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. நமது கல்வி அமைச்சு காலமறிந்து தற்போது தேசியநிலைத் தேர்வுகளில் தமிழ்த் தட்டச்சுப் பயன்பாட்டுக்கு வழிவகுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

## 9. புகுமுக வகுப்பு: கண்ணோட்டம்

கல்வி நிலையங்களில் தொடக்கநிலை முதல் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு வரை சீனம், மலாய், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் கட்டாயப் பாடமாகப் பயில்வதற்கேற்ற இருமொழிக் கொள்கையில் அரசு அவ்வப்போது பல மாற்றங்களைச் செயல்படுத்தி வருகிறது. முன்பு தாய்மொழியில் திறன்மிக்க மாணவர்களே உயர்நிலைப் பள்ளிகளில் *உயர்தமிழ்ப் பாடத்தைப்* பயில முடியும். இன்று சராசரி திறன்கொண்ட மாணவர்களும் உயர்தமிழ்ப் பாடத்தைப் பயிலலாம் என்னும் நிலை உருவாகிவிட்டதால், தொடக்கக் கல்லூரிகளில் தமிழ்ப் பாடம் பயில்வதைத் தவிர்க்க, பெற்றோர்களும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் சராசரி மொழித்திறன்கொண்ட மாணவர்களுக்கும் உயர்தமிழைப் பயிலப் பரிந்துரைக்கின்றனர். அவர்களும் குறைந்த அளவில் தேர்ச்சி பெற்று (B4,C5,C6) தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் பயில்வதைத் தவிர்த்து விடுகின்றனர். இவர்கள் உயர்தமிழில் பெறும் குறைந்த அளவு தேர்ச்சியே பல்கலைக்கழகம் செல்லப் போதுமான தகுதியாகவும் அமைந்துவிடுகிறது. இவ்வகை மாணவர்களுள் மொழித்திறன் மிக்கவர்கள்

கல்லூரிகளில் **H2** என்னும் அளவில் *தமிழ் இலக்கியத்தைப்* படிக்கலாம் என்று எடுத்துக்கூறினாலும் ஒருசிலரைத் தவிர ஏனையோர் அத்தகவலுக்குச் செவிமடுப்பதில்லை. காரணம், உயர்நிலைப் பள்ளிகளில், கல்லூரிகளுக்குச் சென்றால் தமிழ் பயிலத் தேவையில்லை என்ற மனப்பான்மை உருவாகிவிடுவதே ஆகும்.

பல்வேறு காரணிகளால் குறிப்பாக வீட்டுச்சூழல் காரணமாக மொழித்திறனில் சராசரிக்கும் கீழ்நிலையில் உள்ள மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் சாதாரண நிலையில் தமிழ் பயின்றுவிட்டுத் தொடக்கக் கல்லூரி வரும்போது அவர்களுக்குக் கட்டாயமாக H1 என்னும் நிலையில் தமிழைப் பயிலவேண்டிய சூழல் அமைகிறது. மொழியின் மீது ஆர்வமின்றியும் தமிழ்மொழிப் புழக்கம் இல்லாமலும் வரும் மாணவர்களுக்குக் குறைந்த கால அளவில் தமிழ் பயிற்றுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வகையில் அடங்கும் மாணவர்களுள் கணிசமானோர் தமிழைத் தாய்மொழியாகப் பெற்றிருப்பதும் இல்லை. அவர்களது இல்லங்களில் ஆங்கிலம் அல்லது பிற இந்திய மொழிகள் புழக்கத்தில் இருக்கும் சூழல் உள்ளது. இப்படிப்பட்ட நெருக்கடியான சூழலிலும் கற்றல் கற்பித்தலில் புதுமைகளைப் புகுத்தி ஆர்வமூட்டும் வகையில் வகுப்பறை நடத்திச் செல்வதோடு பல்வேறு போட்டிகள் நடத்தியும் தமிழ்மொழியின் மீது மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துகின்றனர் கல்லூரிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்கள்.

## 10. தற்போதைய பாடத்திட்டம்

பாடத்திட்டம். பாட ஏற்பாடு என்பவை கற்பித்தலுக்கு அடிப்படையாக அமைந்த கருவிகளாக, ஆவணங்களாகக் கருதப்பெறுகின்றன. கற்கும் சூழல், நிலைகளுக்கு ஏற்பப் பாடப்பொருளைப் பகிர்ந்து அளித்தலே பாடத்திட்டத்தின் பணியாகும் (திண்ணப்பன், 1995, ப. 112).

கல்வி அமைச்சும் தேர்வுத்துறையும் சூழலுக்கு ஏற்பப் பாடத்திட்டத்திலும் தேர்வு அமைப்புமுறைகளிலும் நல்ல மாற்றங்களை அவ்வப்போது செய்து வருவது பயனளிப்பதாக உள்ளது. தொடக்கக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் இலக்கியப் பாடநூல்கள், மாணவர்களின் நிலையறிந்து மாணவர்களுக்கு

இலக்கியத்தின்மீது ஆர்வமூட்டும் வகையில் தரமான நூல்களைத் தேர்வு செய்தல் வேண்டும். ஆர்வமூட்டாத எதுவும் வெற்றி பெறுவதில்லை என்பது உலக வழக்கு. சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கை வெற்றியடையவும், சிங்கப்பூரில் தாய்மொழிகள் வாழும் மொழிகளாக என்றும் நிலைத்திருக்கவும் தொடக்கக் கல்லூரிகளில் H2 என்னும் நிலையில் மொழி, இலக்கியம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கட்டாயம் அதிகரிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளியில் உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் (H2) பயில வாய்ப்புள்ளது என்ற தகவலும் பல்கலைக்கழகம் செல்லுவதற்கு அது பேருதவியாக அமையும் என்பது போன்ற பயனுள்ள தகவல்கள் போய்ச் சேரும்வகையில் கல்வி அமைச்சின் தமிழ்த்துறை கூடுதல் வழிகளில் பங்காற்றலாம்.

## 11. தகவல் ஊடகங்களின் பங்கு

மொழியியலாளர் சி. பெண்ட்லின் கூற்றின்படி, மொழியின் செயல்பாடு என்னவென்றால் அது அறவழி இணைப்பான்களாகவும் குறியீட்டு அடையாள மூலங்களாகவும் திகழ்வதாகும். அதாவது மானுட வாழ்க்கையின் நன்னெறிகளைக் காரணகாரியங்களோடு தனிமனிதனுக்குத் தெளிவாக எடுத்துரைப்பதும் அவனது மரபுவழிச் சிறப்புகளை அவனுக்கு எடுத்துக்கூறி அவனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதும் மொழியின் செயல்பாடு என்று அவர் வரையறுத்துக் கூறுகிறார். இது தனிமனித அளவில் மிக முக்கியமானது எனச் சொல்லலாம் (கோபிநாதன், 1979, 1980, 2014).

ஒரு மொழியின் செம்மையான பயன்பாட்டிற்கு அம்மொழி பேசும் சமூகத்தின் ஆதரவு பெருமளவு தேவை. “இருபதாம் நூற்றாண்டு, தொழில்நுட்பக் கருவிகள் பலவற்றை வியத்தகு முறையில் உருவாக்கிய ஒரு நூற்றாண்டு” (திண்ணப்பன், 1995, ப. 168). ஒரு மொழியின் பயன்பாட்டை மேம்படுத்துவதில் வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள் போன்ற தகவல் சாதனங்கள் பெருமளவில் உதவ முடியும். அவ்வகையில் ஒலி 96.8, *வசந்தம்* தொலைக்காட்சி, *தமிழ் முரசு* போன்ற தகவல் ஊடகங்கள் சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பயன்பாட்டுக்கு நற்பணியாற்றி வருகின்றன. மேலும், இந்திய நாட்டுத் தனியார்த் தொலைக்காட்சி நிறுவனங்கள் சிங்கப்பூரில் தமிழ் ஒளிபரப்பை இருபத்திநான்கு மணி நேரமும் வழங்கி வருகின்றன.

அத்தொலைக்காட்சி ஒளிவழிகளில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், கலைநிகழ்ச்சிகள், திரைப்படங்கள், நிகழ்ச்சிகள் பேச்சுத்தமிழில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. கேட்டல், பார்த்தல், போலச் செய்வது மூலமாக மனிதர்கள் சிறப்பாக மொழியாற்றலைப் பெற இயலும்.

பிறர் செய்வது போலவே தானும் செய்வது மட்டுமல்லாமல் அதைப் பேச்சுத்தமிழில் பயன்படுத்தியும் பார்க்கிறார்கள். உதாரணமாக, திரைப்-படங்களில் வரும் புகழ்பெற்ற வசனங்களின் தாக்கம் இளையர்களின் பேச்சுத்தமிழில் வலம் வருவதை நாம் காணலாம்.

## 12. சமூக அமைப்புகளின் பங்கு

''தொடக்கக் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்புகளிலும் தமிழ் எடுத்துப் படிக்கும் மாணவர்கள் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமுதாயத்தின் அரிய சொத்துகள். பல்கலைக்கழகம் சென்று அறிஞர்களாகவும், தொழில் நிபுணர்களாகவும் மாறவுள்ள தமிழ் பேசும் மாணவர்கள், தமிழையும் அதைச் சார்ந்த சமுதாயத்தையும் மறந்தால், அது சிங்கப்பூரின் முன்னேற்றத்திற்கு உதவும் செயலாக இராது'' (வீரமணி, 1996, ப. 257 - 258). இவரின் கருத்து முற்றிலும் சரியே. புகுமுக வகுப்பு மாணவர்களைச் சமுகம்சார்ந்த நடவடிக்கைகளில் தமிழ் அமைப்புகள் ஈடுபடுத்தும் முயற்சி மேலும் தீவிரமாக்குதல் வேண்டும்.

வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில், 'தமிழை நேசிப்போம் தமிழில் பேசுவோம்' என்னும் முழக்கத்துடன், வீடு முதல் வீதி வரை, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் முழங்கத் தமிழுக்கு ஒவ்வோர் ஆண்டும் *தமிழ்மொழி விழா* சிறப்பாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இளையர்களிடையே தமிழ்மொழி ஆர்வத்தைத் தூண்டவும் அவர்தம் சிந்தையில் தமிழ்மொழி உணர்வைத் தக்கவைக்கவும் ஏப்ரல் மாதம் முழுதும் விழாக்கள், நிகழ்ச்சிகள், பயிலரங்குகள், போட்டிகள், வெளியீடுகள் என நடத்தப்படுகின்றன. காலப் பரிணாமத்தின் சுழற்சியில் ஆங்கிலமொழியை ஆராதிப்பவர்கள் கூட இந்நிகழ்ச்சிகள்வழித் தமிழ்மொழியை அங்கீகரிக்க மறக்கவில்லை. இந்நிலையைத் தொடர்ந்து கட்டிக்காத்து மேலும் நிகழ்ச்சிகளைச் செம்மைப்படுத்தி ஆண்டுதோறும் இளைஞர்களை ஈர்க்கும்

வகையில் பரவலாகப் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொள்ளவேண்டும். இளைஞர்கள் விரும்பும் நிகழ்ச்சிகள் குறித்து அறிந்துகொள்ள ஓர் ஆய்வை மேற்கொண்டு அதற்கேற்ப நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது அவசியம். இளைஞர்கள் தமிழின் அருமைபெருமையை உணர்ந்து அந்நிகழ்ச்சிகளில் ஈடுபடும்போது சிங்கப்பூர் அரசு கடைப்பிடிக்கும் இருமொழிக் கொள்கையில் தமிழ்மொழி தமக்குரிய பெருமையைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

## 13. பரிந்துரைகள்

1. பண்பாட்டுக் கலாசார அறநெறி விழுமியங்கள் தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும்; நற்சிந்தனைகள் மாணவர்களிடையே வேரூன்ற வேண்டும் என்றால் தொடக்கப்பள்ளிகளில் *நற்குணம் மற்றும் குடியியல் கல்வி* தாய்மொழியில் கற்பிக்கப்படுவதுபோல உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கக் கல்லூரிகளில் அவரவர் தாய்மொழிகளில் அப்பாடம் கற்பிக்கப்பட வேண்டும். தற்போது இந்நிலைகளில் பயிலும் மாணவர்களுக்குப் பரந்துப்பட்ட கூறுகளில் கவனம்செலுத்தி *நற்குணம் மற்றும் குடியியல் கல்விப்* பாடம் கற்பிக்கப்படுகிறது. பல்லின மாணவர்கள் கலந்த வகுப்பில் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுவதற்கான பின்னணியையும் காரணத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது. இருப்பினும், ஒருசில பாட வேளைகளையாவது தாய்மொழியில் இப்பாடத்தை நடத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளலாம். அப்போதுதான் பதின்ம வயதில் அவர்களது உலகம் விரியும்போது, இன்னும் ஆழமாக அடிப்படைப் பண்புகளை வேரூன்றிப் புரிந்துகொள்ள முடியும். அதோடு, வருங்காலச் சந்ததியினரின் நடத்தை செம்மையுற இவ்வணுகுமுறை ஏதுவாக அமையும்.

2. புகுமுக வகுப்புகளில் கட்டாயப் பாடமான H1 பாடத்தைப் பயிலும் மாணவர்களை ஏழு மாதங்களில் அறக்கப் பறக்கக் கற்பித்து முதலாம் ஆண்டிலேயே A நிலைத் தேர்வுக்கு அனுப்பிவைக்காமல் நிதானமாக 1½ வருடத்திற்காவது பாடத்தைப் பயில அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் நமது தாய்மொழி மாணவர்களின் மனத்தில் அழகான அழியாக் கோலமாகப் பதியும். பாடத்திட்டம் மற்றும் தேர்வுக்குச் சோதிப்படும் திறன்களை மறுபரிசீலனை செய்தல் வேண்டும். மாணவர்களின் தேவையினைக் கருத்திற்கொண்டு, அதனையொட்டிய நிலையில் பாடங்களும்,

பயிற்றுகருவிகளையும் தெரிவுசெய்தல் வேண்டும். பிறகு பாடங்களையும் அவற்றைக் கற்பிப்பதற்கான முறைகளையும் சோதித்து அறிவதற்கான தேர்வுமுறைகளும் அமைதல் வேண்டும். கற்பித்தல் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளையும் கண்டறிந்து அதை உடனே களைந்தெறியத் தீர்வுகள் காணவும் வேண்டும்.

3. புகுமுக வகுப்பில் தாய்மொழிகளில் சிறப்பாகத் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு உள்ளூர்ப் பல்கலைக்கழகம் கூடுதல் புள்ளிகள் வழங்கலாம். இத்தகைய அங்கீகாரம் மாணவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும்.

4. இளையர்கள் தாய்மொழிகளில் படைக்கும் கலை, கலாசார, பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாயம், அரசாங்கம் கூடுதல் ஆதரவு தந்து ஊக்குவிக்க வேண்டும்.

5. பல தொடக்கக் கல்லூரிகளில் தாய்மொழி மன்றங்கள் (இணைப்பாடம்) கலாசார மன்றங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு வருவது வேதனைக்குரிய ஒன்றாகும். இதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. தற்போது பல்வேறு சமூக அமைப்புகள் மாணவர்களுக்கு மொழிசார்ந்த பல போட்டிகளை நடத்தி வருவது பாராட்டுக்குரியது. ஆனால், அப்போட்டிகளில் கலந்துகொள்ள மாணவர்கள் பலர் முன்வருவதில்லை. போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ளும் வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்காகப் பெற்றோர், ஆசிரியர், சமூக அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து குழு ஒன்றினை அமைத்து மறுஆய்வு செய்தல் வேண்டும்; தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

7. தாய்மொழிப் பாடத்தை வெறும் பல்கலைக்கழக அனுமதிக்கான தேவை எனப் பார்க்காமல் எதிர்காலத்தில் பயன்மிக்க மொழித் திறமையாகப் பார்க்க ஊக்குவிக்க வேண்டும். இதற்கு அவர்களின் ஆர்வநிலைக்கேற்பப்

பாடங்களை வடிவமைத்தல் வேண்டும். பிற்காலத்தில் தங்கள் பொதுவறிவைத் தம் தாய்மொழியிலும் பகிர்ந்துகொள்ளவோ, நடப்பு விவகாரங்களைப் பற்றித் தத்தம் இன ரீதியான கண்ணோட்டத்தில் அலசி ஆராய்ந்து கருத்துதிர்ப்புச் செய்யவோ ''மொழியாக்கத் திறன்' என்னும் புதிய பாடத்தைப் புகுமுக நிலையில் தாய்மொழிக் கல்வியின் பகுதியாக அறிமுகப்படுத்தலாம்.

8. உயர்கல்வி நிலைகளில் தமிழ்மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் வளர்ச்சி தேவைப்படுகிறது. புகுமுக வகுப்பில் H2 பாடமாகத் தமிழிலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அண்மைய காலங்களில் குறைந்து வருவது கவலைக்குரியது. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. குறைந்தது ஆண்டுக்கு நூறு மாணவர்களையாவது தொடக்கக் கல்லூரிகளில் தமிழிலக்கியப் பாடம் பயிலும் வகையில் இலக்கு நிர்ணயித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும். இதற்கு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்களுக்குத் தொடக்கக் கல்லூரிகளில் தமிழ்ப்பாடங்கள் எப்பிரிவுகளில் எவ்வாறு கற்பிக்கப்படுகிறது என்பது பற்றிய தகவல்கள் சென்று சேர வேண்டும். இலக்கியப் பாடங்களுக்கான நூல்கள் (சிறுகதை, நாடகம், கவிதை, நாவல்) மாணவர்களின் திறனுக்கு ஏற்றவாறு ஆர்வமூட்டக்கூடிய இலக்கியப் படைப்புகளாக அமைதல் வேண்டும். இதற்கான முயற்சிகளைச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தமிழ்த்துறைப் பிரிவு முன்னெடுக்க வேண்டும்.

9. நமது கோரிக்கைகளுள் ஒன்றான ஆசிரியர் பயிற்சியோடு தமிழில் இளங்கலைப் பட்டப்படிப்பையும் இணைத்துக் கற்பித்தல் தற்போது நடைமுறைக்கு வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இதுபற்றிய விழிப்புணர்வு மற்றும் சரியான தகவல்களை இளையர்களிடம் கொண்டு சேர்க்கக் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சிக்கு அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஆதரவு அளிக்கவேண்டும்.

10. சிங்கப்பூரின் மக்கள் தத்தம் இன அடையாளங்களைத் தொடர்ந்து பாதுகாத்து வலுப்படுத்தி வாழும்வகையில் அரசு பல்வேறு முயற்சிகளை

மேற்கொண்டு வருகிறது. தமிழர்களுக்குத் தமிழ்தான் முகவரி அதுவே அவர்களின் அடையாளம். அடையாளத்தை இழந்தால் அது பேரிழப்பாக மாறும் என்பது திண்ணம். தமிழ் ஒரு புத்தகமொழியாக மட்டும் இல்லாமல் **பண்பாட்டு ஊக்குவிப்பு மொழியாக** மாறினால்தான் சிங்கப்பூரில் தமிழ்மொழி வளர்ச்சியடையும். அதற்கான முயற்சிகளை மேலும் செம்மைப்படுத்த வளர்தமிழ் இயக்கம் போன்ற அரசு ஆதரவுபெற்ற அமைப்புகள் தொடர் நடவடிக்கைகளைத் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டும்.

**துணை நூல்கள்**

கல்வி அமைச்சு. (2005). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல் முறை மறுஆய்வுக் குழு அறிக்கை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு. (2011). *2010 தாய்மொழிகள் மறுஆய்வுக் குழு அறிக்கை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கோபிநாதன், எஸ். (2014). *சிங்கப்பூரில் கல்விக்கொள்கையும் நடைமுறையும்.* சிங்கப்பூர்: ஆசிரியர்.

திண்ணப்பன், சுப. (1995). *கணினியும் தமிழ் கற்பித்தலும்.* சென்னை: புலமை வெளியீடு.

வீரமணி, அ. (1996). *சிங்கப்பூர் வளர்ச்சியில் தமிழ்மொழி.* சிங்கப்பூர்: தமிழ்க் கலை அச்சகம்.

Iswaran, S. (2009). *Dual Roles*. Crossing cultures and bridging minds: A role for Singapore's languages and literatures, organised by the Singapore Institute of Management University on 21 August 2009. Retrieved from http://news.asiaone.com/News/Education/Story/A1Story20090821-162499.html.

Lee, S. L. (2015). More funding for learning of mother tongue languages in Singapore. The Straits Times, 5 September 2015.
Retrieved from : http://www.straitstimes.com/singapore/education/more-funding for learning of mother tongue languages in Singapore.

NLB, (2015). Tamil Digital Heritage Project (தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்). Retrieved from http://www.singaporetamil.sg/index.php/contact.

Shanmugaratnam, T. (2003). The Significance of Speaking Skills for Language Development. Organised by the Tamil Language and Culture Division of NIE on 15 February 2003 at LT, NIE. Retrieved from https://www.moe.gov.sg/media/speeches/2003/sp20030215a.html

SINDA. (2011). *Sinda website-The Singapore Indian community in Figures 2011*. Retrieved from http://www.sinda.org.sg

# Tamil Language Education in Singapore : Past, Present and Future.

**Professor S Gopinathan's selected research articles on Mother Tongue Language Policies – Perspective of Tamil Language teachers.**

ISBN: 978-981-11-1371-0

STTU

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்
Singapore Tamil Teachers' Union